# ஈழ இன அழிப்பில் பிரிட்டன்

## 30 ஆண்டு கால துரோக வரலாறு

ஃபில் மில்லர்



## *ஆசிரியர் பற்றி*

*ஃபில் மில்லர் லண்டன் 'கார்ப்பரேட் வாட்'சில்ஆய்வாளராக உள்ளார். 1971-இல், இலங்கையில் நடந்த ஜெ.வி.பி எழுச்சியை நசுக் கியதிலும், 1984-இல் இந்தியாவின் பஞ்சாபில் அமிர்தசரஸ் பொற் கோயில் தாக்குதல் சம்பவத்திலும், 1980-களில் உகாண்டாவில் தாக்கு தல்களில் ஈடுபட்டிருந்த பிரிட்டன் கூலிப்படைகளைப் பாதுகாத்த மையிலும் பிரிட்டனின் தலையீடு இருந்ததை வெளிக்கொண்டு வந்தவர் இவர்.*

*ஃபில்லை நீங்கள்* phil.miller.research@gmail.com *என்ற மின்னஞ்சல் முகவரியிலோ டிவிட்டரில்* @pmillerinfo *மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.*

---

*தமிழில்: தமிழரசன் குழந்தைசாமி*

---

*ஜெர்மனியின் ப்ரேமனில் உள்ள அனைத்துலக மனித உரிமைக் கழகத்தால் பிரசுரிக்கப்பட்ட இந்த ஆவணமானது, இலங்கையின் (போர்க் குற்றங்களை விசாரிக்க அமைக்கப்பட்ட) மக்கள் தீர்ப்பா யத்திற்கு ஃபில் கொடுத்த ஆதாரங்களின் திருத்திய வடிவமாகும். இது 'ஈழத்தமிழ் மக்களின் இனப்படுகொலையில் பிரிட்டன் அரசு உடந்தை யாயிருந்தது' தொடர்பான ஃபில்லின் நிபுணத்துவம் வாய்ந்த ஆதாரங்கள் ஆகும். பிரிட்டன் இலங்கையிலிருந்து வெளியேறிய (காலனியாதிக்கத் திற்கு) பின்னாலும் பிரிட்டனின் இராணுவ நடவடிக்கைகள் இலங்கை யில் தொடர்வதையும், அது அங்கு நடந்த உள்நாட்டுப் போரில் செல் வாக்கு செலுத்தியதையும் இந்நூல் நமக்கு உணர்த்துகிறது.*

*போரின்போது மற்ற விவகாரங்களில் பிரிட்டன் உடந்தையா யிருந்ததையும், அதே போன்று அமெரிக்கா உடந்தையாயிருந்ததையும் காண* http://www.ptsrilanka.org/en/documents *என்ற முகவரிக்கு சென்று பாருங்கள். டிசம்பர் 2013-இல் கூடிய தீர்ப்பாயத்தின் நீதிபதிகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு ஆவணங்களையும் மற்றும் ஃபில்லின் காணொலி நேர்காணலையும் தீர்ப்பாயத்தின் இணைய தளத்தில் காணலாம்.*

*ரோம் நகரில் செயல்பட்டுவரும் 'நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின்' சார்பாக இயங்கி வரும் இந்த தீர்ப்பாயமானது, '*

*இலங்கையில் அமைதிக்கான ஐரிஷ் நடுவம்'மற்றும் எமது அமைப்பாலும் சேர்த்து ஒருங்கிணைக்கப்பட்டது ஆகும்.*

---

*அனைத்துலக மனித உரிமை கழகம், ப்ரேமென்,ஜெர்மனி.*
*தொலை நகல்: 0049 421 68 437 884,*
imrvbremen@gmail.com

---

**ஈழ இன அழிப்பில் பிரிட்டன், 30 ஆண்டு கால துரோக வரலாறு (1979 2009); பக்கங்கள் 104**

**இந்திய துணைக்கண்டத்தில்கீழ்கண்ட முகவரியில் இந்த நூலை நீங்கள் பெறலாம்.**

**பொன்னுலகம் பதிப்பகம், 4/413 பாரதி நகர், 3 ஆவது வீதி, பிச்சம்பாளையம் அஞ்சல், திருப்பூர் 641603, தமிழ்நாடு**

**தமிழரசன் குழந்தைசாமி, மொழிபெயர்ப்பாளர்,** tamilarasan.k@gmail.com, +91-9551251100

**திருப்பூர் குணா, பதிப்பாளர்,** gunarpf@gmail.com, +91-9486641586

# ஈழ இன அழிப்பில் பிரிட்டன்

## 30 ஆண்டு கால துரோக வரலாறு

# பொருளடக்கம்

ஆங்கில பதிப்பிற்கான நூலாசிரியர் முன்னுரை 05

தமிழ் மொழிபெயர்ப்புக்கு நூலாசிரியரின் வாழ்த்துரை 06

அணிலிமு ீடங்கள் 08

இலங்கையில் பிரிட்டன் தலையீட்டின் காலவரிசை 10

1. அறிமுகம் 12

2. தமிழர் சிக்கலை பிரிட்டன் கையாளுதல் (1979 - 1989) 14

3. விவேகத்துடனும் மேலும் தீர்க்கமான அறிவுடனும் போருக்குசெல்லல் (1990 - 2002) 24

4. போர்நிறுத்தம் முதல் முள்ளிவாய்க்கால் வரை (2002- 2009) 36

5. இறுதியுரை: புவி-அரசியலின் பின்னணியில் 46

6. முடிவுரை 54

பின்னிணைப்பு -1 55

பின்னிணைப்பு -2 59

# ஆங்கில பதிப்பிற்கான நூலாசிரியர் முன்னுரை

பிரிட்டனில் இருந்து வலுக்கட்டாயமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டு வதைக்கூடங்களில் சித்திரவதை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இதை அர்ப்பணிக்கிறேன். இங்கிலாந்தின் குடியேற்றத் துறை அதிகாரிகளால் நம்ப முடியாதவர்கள் என்று முத்திரைக்குத்தப் பட்டு, பிரிட்டிஷ் அரசாங்கத்தால் வஞ்சிக்கப்பட்டு வெளியேற்றியதால் ஈழத்தமிழர்கள் வதைக்கூடங்களில் தள்ளப்படுகிறார்கள். 2011 - 2013- இல் இவர்கள் பட்ட துயரங்களை கண்ணால் கண்டதுதான் என்னை இலங்கையுடனான பிரிட்டனின் உண்மையான வெளியுறவு கொள்கை என்னவென்று ஆய்வு செய்யத் தூண்டியது.

1980-களில் தனது குழந்தைப் பருவத்தில் இலங்கையில் விசித்தி ரமான போலிஸ் லேண்ட் ரோவர் வாகனங்கள் சுற்றித்திரிந்ததை பார்த்துப் பயந்த நினைவுகளை லண்டனில் இருந்த ஒரு தமிழ் அகதி என்னிடம் பகிர்ந்துகொண்டார் . வடக்கு அயர்லாந்திலிருந்து அந்த கவச வாகனங்கள் வந்ததாக அவரது மாமா அவருக்கு சொல்லியிருக்கிறார். அவற்றை மட்டுமா இங்கிலாந்து இலங்கைக்கு அனுப்பியது? இப்போதுவரைக்கும் திரும்ப முடி யாதபடி பெருந்தொகையான தமிழ் மக்கள் தங்கள் நாட்டை விட்டு தப்பி ஓட நேர்ந்ததற்கும்கூட பிரிட்டன்தான் பெரும் பொறுப்பேற்க வேண்டும் என்பதையும் இந்த நூல் உங்களுக்கு தெளிவாக்கிக்காட்டும்.

இராணுவ வரலாற்றின் வேறுபட்ட பகுதிகளை ஒன்றாக்கி கால வரிசைப்படி பார்ப்போமேயானால், ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை இலங்கை நசுக்குகிற ஒவ்வொரு முயற்சியின்போதும் பிரிட்டனும் சேர்ந்துகொண்டு திட்டமிட்ட வகையில் தொடர்ச்சியாக என்னென்ன கொடுமைகளைப் புரிந்தது என்பது விளங்கும். குறிப்பாக கொழும்பு ஈழ விடுதலைப்போரை முடிவுக்குக்கொண்டுவர முடியாமல் ஊசலாடியபோதும்; வேறு வழியில்லாமல் போர்நிறுத்தத்திற்கும், அமைதி நடவடிக்கைகளுக்கும் இலங்கை அரசு இசைகின்ற வாய்ப்பு இருந்த சூழலிலெல்லாம் பிரிட்டன் வேறு விருப்பத்துடன் தலையிட்டு அதை கெடுத்ததன் தீவிரம் புரியும்.

இங்கிலாந்தின் தேசிய ஆய்வக காப்பக ஆவணங்கள், தகவல் பெறும் உரிமை சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்கள், எல்லோ ராலும் எளிதாகப் பெற முடிகிற இணையத்தளத்தில் இருந்த வேறுபட்ட தகவல்கள் ஆகியவற்றை அலசி தேவையானவற்றை எடுத்துக்கொண்டு செய்து முடித்த உண்மையான ஆய்வாக இது நடந்துள்ளது. தன்னார்வ அடிப்படையில், பகுதி நேரமாக ஜனவரி 2013-ல் தொடங்கி பதினெட்டு மாதங்களுக்கு மேலாக மேற்கொள்ளப்பட்ட பணி இது. ஏதாவது விடு பட்டிருந்தாலோ, பிழைகள் இருந்தாலோ அருள் கூர்ந்து தெரியப்படுத்தினால் திருத்தங்ளை செய்ய முயற்சி செய்வேன். இலங்கை இன மோதலின் பின்னணி குறித்து வாசகருக்கு ஓரளவு பரிச்சயம் இருக்கும் என்ற அனுமானத்தில் இதை எழுதியுள்ளேன். இருந்தாலும், அந்த பின்னணி தெரியாதவர்களுக்கும்கூட புரிந்து கொள்ளும்படி இருக்கும் என நம்புகிறேன்.

இந்த ஆவணத்தை பலமுறை திருத்த உதவிய விராஜ் மெண்டிஸ் (Viraj Mendis) மற்றும் ஆண்டி ஹிக்கின்பாத்தம் (Andy Higginbottom), இலங்கை செய்திதாள்களில் இருந்தும் பல்வேறு உள்ளூர் தரவுகளில் இருந்தும் தேவையான தகவல்களை தேடித்தந்த பசானா அபேவர்தனே (Bashana Abeywardane), கவனமாக பிழைதிருத்திய பீத்தன் பௌவத் (Bethan Bowett), வடிவமைப்பு பணி செய்த நிக்கொலய் ஜுங் (Nicolai Jung), தேசிய ஆய்வக காப்பகத்தின் ஆவணங்களில் கண்ட நபர்கள் பற்றிய குறிப்புகளை கொடுத்து அந்த ஆவணங்களைப் புரிந்து கொள்ள உதவிய டாம் கிரிஃபின் (Tom Griffin) மற்றும் இந்த ஆய்வைப் பதிப்பிக்க ஊக்கப்படுத்திய டாக்டர்.ந.மாலதி (N.Malathy) ஆகிய அனைவருக்கும் எனது நன்றிகள்.

ஃபில் மில்லர்

ஜூன் 2014

# தமிழ் மொழி பெயர்ப்புக்கு நூலாசிரியரின் வாழ்த்துரை

எனது நூலின் தமிழ் வடிவத்தை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் ஆங்கில மூலம் வெளியான முதல் இரண்டு வாரங்களிலேயே 30,000 முறை பதிவிறக்கம் செய்யப்பட்டது. இதில் உள்ள தகவல்கள் உண்மையை உரசிப் பார்ப்பதற்குக் கணிசமாக தேவைப்படுவதையே இது காட்டுகிறது. ஈழத்தமிழ் மக்களின் இனப்படு கொலையில் இலங்கைக்குப் பிரிட்டன் உடந்தையாயிருந்தது குறித்து இந்த நூலில் உள்ள ஆதாரங்கள் எவற்றையும் பிரிட்டிஷ் அரசு சார்பில் ஒருவர் கூட மறுப்பு தெரிவிக்கவில்லை.

அதற்கு பதிலாக, இப்போதும் தஞ்சம் தேடி வரும் தமிழ் மக்களை இலங்கைக்கு திருப்பியனுப்புவதை இங்கிலாந்து வெட்கமின்றி தொடர்ந்து செய்து வருகிறது. இலண்டனில் உள்ள குடியேற்றத்துறை வழக்குரைஞர்கள், தாங்கள் இதுசம்பந்தமான வழக்குகளை தினந்தோறும் சந்தித்து வருவதாக சொல்லும் அளவிற்கு அடிக்கடி இச்சம்பவங்கள் நடக்கின்றன. உலக மக்களால் வெறுக்கப்படும் ராஜபக்சேவின் அடக்கு முறை இராணுவ எந்திரத்திற்கு ஒரு நம்பகத்தன்மையை ஏற்படுத்தித் தருவதாக உங்களது செயல் உள்ளது என்ற விமர்சனங்களுக்கு மத்தியிலும், ஸ்காட்லாந்து காவல்துறை இலங்கை சகாக்களுக்குப் பயிற்சிகள் தருவதை நிறுத்த மறுக்கிறது. அதோடு பிரிட்டனின் ஆயுதங்கள் இப்போதும்கூட இலங்கைக்கு அனுப்பப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

இந்த ஆயுதங்கள் எல்லாம் இராணுவத்திற்கு அனுப்பப் படவில்லை என்றும், தனியார் கடற்பாதுகாப்பு நிறுவனங்களுக்கு அனுப்பப்படுவதாகவும் சொல்லப்படுகின்றன. அது உண்மையாயிருக் குமானால், இந்திய பெருங்கடலின் வணிகப்பாதைகளை கடற்கொள் ளையர்களிடமிருந்து பாதுகாக்கவும், தனது இராணுவ நிறுவனங்களுக்கு இலங்கையை ஒரு மையமாக பயன்படுத்தவும் பிரிட்டன் தீர்மானித்திருக்கிறது என்று பொருள். இங்கிலாந்து அரசாங்கத்திற்கு இருக்கும் இலங்கைத்தீவின் கேந்திர முக்கியத்துவம் இதன் மூலம் உறுதியாகிறது. பிரபாகரன் எச்சரித்தைப்போல, ''இந்த உலகம் நீதியின் அச்சில் சுழலவில்லை... தார்மீக சட்ட நெறிகளோ, மக்களின் உரிமைகளோ அல்ல, பொருளாதார வர்த்தக நலன்கள்தான் தற்போதய உலகப் போக்கை தீர்மானிக்கின்றன...இவ்வாறான நலன்களை அடிப்படையாக வைத்தே தேசங்களுக்கு இடையேயான சர்வதேச உறவுகளும் தூதரக உறவுகளும் தீர்மானிக்கப்படுகின்றன'' என்பது இங்கிலாந்தின் நடவடிக்கைகளால் உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆயுத விற்பனை, காவல்துறைப்பயிற்சி மற்றும் நாடு கடத்தப் படுவது ஆகிய மூன்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் உறுதியான முடிவை பிரிட்டன் நாளையே எடுக்க முடிந்தால் இலங்கை தனிமைப் பட்டு போகும். ஆனால் பிரிட்டன் அப்படி செய்வதற்கு ஆணித்தரமாக மறுக்கிறது.

ஜூன் 2014-இல் எனது நூல் வெளியான பிறகு, கிளாஸ்கோ மற்றும் பெல்ஃபாஸ்ட்டில் வெளியீட்டு கூட்டங்கள் நடத்தினேன். ஸ்காட்லாந்து விடுதலைக்கான வாக்கெடுப்பு, ஸ்காட்லாந்தின் சுய நிர்ணய உரிமைக்கு பலத்த அனுதாபம் இருப்பதை நிரூபித்துள்ளது. இங்கிலாந்து அரசியலில் நிலைநாட்டப்பட்ட பெரும் அரசியல் கட்சி களை அங்கு மக்கள் ஓரம் கட்டியுள்ளனர். உறுப்பினர்கள் அடிப்படையில் ஸ்காட்லாந்து தேசியக் கட்சிதான் இங்கிலாந்தின் மூன்றாவது பெரிய கட்சி. கிளர்ச்சி எதிர்ப்பு கொள்கைகளின் துயரங்களை நன்கு உணர்ந்த வர்களாக பெல்ஃபாஸ்ட் கூட்டத்திற்கு வந்திருந்த பார்வையாளர்கள் இருந்தனர். மே மாதம் ஐரோப்பாவில் நடந்த தேர்தல்களின் போது, அயர்லாந்து குடியரசின் அரசியல் கட்சியான சின் ஃபீன் (Sinn Fein) - தான் அயர்லாந்து தீவின் மிகவும் புகழ்வாய்ந்த கட்சியாக இருந்தது. எனவே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் இருக்கும் பிளவுகள் விரிவடைகின்றன என்பதை அக்கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் மூலம் அறிய முடிந்தது.

நிலைமை இவ்வாறு இருந்தும் லண்டனில் இருக்கும் தமிழ் அமைப்புகள் பிரிட்டனின் தொழிலாளர் கட்சிகளான கன்சர்வேட்டிவ் மற்றும் லேபர் கட்சிகளையே தங்கள் அரசியல் லாபங்களுக்காக ஆதரிக்கின்றனர். தங்கள் இனத்தை கொன்றொழித்த கொலைகாரர்களுடைய கூட்டாளிகளின் காலில் விழுந்து கெஞ்சும் விதமாக நடந்து கொள்கின்றனர். நடந்து முடிந்த இலங்கை

போர்க்குற்றங்களை குறித்து அவசிய மில்லாத நேரத்தில், வெறுமனே கண்டித்து சில சொற்பொழிவுகளை ஆற்றினால் போதும் தமிழர்கள் தங்கள் வாக்குகளை கொடுக்க உறுதிய ளித்துவிடுகின்றனர். இவ்வாறான நீர்த்துப்போகும் யுக்தியை ஈழத்தமிழர்கள் கடைப்பிடிக்கும் அதேநேரத்தில், தங்களின் விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுச் சாதனைகளான'' வன்னியில் சாதிமுறையை ஒழித்தது, வரதட்சணைக் கொடுமையை ஒழித்தது, மாற்றுத் திறனாளிகளுக்குக் கொடுக்கப்படும் மதிப்பு, ஏதிலிகளை பாதுகாப்பது, பாலியல் வன்முறைகளுக்கு எதிராகப் பெண்களின் இராணுவத் தற்காப்பு'' ஆகியவை குறித்து அரிதாகவே குறிப்பிடுகின்றனர். பிற சமூக இயக்கங்களின் தோழமையையும், ஆதரவையும் நாடும்போது ஈழத்தமிழர்களை ஆட்கொண்ட 2009 பெருந்துயரைத் தெரியப்படுத்துவது எவ்வளவு முக்கியமோ, அதே அளவு தங்களது போராட்ட இயக்கத்தின் சாதனை களையும் குறிப்பிடுவது முக்கியமான தாகும்.

இந்த நூல் அதற்கானப் பணியைச்செய்யும் என்று நம்புகிறேன். இதைத் தமிழில் கொண்டு வருவதற்கு வாழ்த்துகள்.

ஃபில் மில்லர்
அக்டோபர் 2014

## அணிலிமுீடங்கள்

**இந்தியப்பெருங்கடல் பகுதியைக் காட்டும் அணிலிமுீடம்**



**இலங்கையின் அணிலிமு°டம்**



# இலங்கையில் பிரிட்டன் தலையீட்டின் காலவரிசை

1979 இங்கிலாந்து உளவுத்துறையான எம்.ஐ.5- இன் முன்னாள் இயக்குனர் ஜாக் மார்ட்டன் இலங்கைக்குப் பயணம் செய்து, 'புலனாய்வு எந்திரத்தின் முழு மறுசீரமைப்புக்கான நடை முறை ஆலோசனைகளை' வழங்கினார். அவரது அறிக்கையானது'தமிழர் சிக்கலை கையாளும் பாதுகாப்புபடையினரின் மனத் தொய்வை' விரிவாக விளக்கியது (பக்கம் 30)

1983 ''போலீஸ் மற்றும் இராணுவத்தினரின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் தங்களது பங்களிப்பு குறித்த ஒரு ஒத்தி கைக்காகவும்'' பயங்கரவாதம் குறித்த எம். ஐ.5-இன் கருத்தரங்கில் பங்கு பெறவும், பெருநகரக் காவல் சிறப்புப் பிரிவிற்கு சென்று இங்கிலாந்தில் வாழும் தமிழ்ப்பிரிவினை வாதிகள் குறித்து பேசவும் மூத்த இலங்கை காவல்துறை அதிகாரிகள் பெல்ஃபாஸ்ட் நகருக்கு அழைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான துணைஇராணுவப்பயிற்சி மற்றும் கமாண் டோ வகுப்புகளை ''இரகசியமாக'' நடத்தும் பயிற்சி ஆகியவைகளை வழங்குவதாக இங்கிலாந்து வெளியுறவு அலுவலகம் உறுதியளித்தது. (பக்கம் 31-32)

1984-1987 இங்கிலாந்து வெளியுறவு அலுவலகத்தின் ''எந்தவித ஆட்சேபனையும் இன்றி'' பிரிட்டிஷ் கூலிப்படைகள் இலங்கையில் இயங்கி வந்தன. கே.எம்.எஸ் நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்டிருந்த முன்னாள் எஸ்.ஏ. எஸ் வீரர்கள் இலங்கை சிறப்பு அதிரடிப் படையை (கொடூரமான காவல்துறை கமாண் டோப்பிரிவு) பயிற்றுவித்ததோடு, துப்பாக்கி தாங்கும் உலங்குவானூர்தி பைலட்களுக்கு போர்களத்தில் உடனிருந்து உத்தரவுகளையும் பிறப்பித்தனர். (பக்கம் 37-38)

1988-1989 அமிர்தசரஸ் பொற்கோவில் தாக்குதல் தொடர்பாக இந்திய இராணுவத்திற்கு ஆலோசனை வழங்கிய ஒரு எஸ்.ஏ.எஸ் அதிகாரி, இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்தபோது ஆலோசனை வழங்குவதற்கு அங்கும் சென்றதாக சொல்லப்படுகிறது. அதேபோல பிரிட்டனின் கிளர்ச்சிஎதிர்ப்பு நிபுணர் மேஜர்.ஜெனரல் ரிச்சர்ட்கிளட்டர்பக், இரண்டாம் ஜெ.வி.பி எழுச்சியை முறியடிப் பதற்க்கு இலங்கை அதிபருக்கு ஆலோசனை வழங்கியதாகவும் சொல்லப்படுகிறது. (பக்கம் 41)

| | |
|---|---|
| 1990s | இந்த காலத்தில், கே.எம்.எஸ் நிறுவனம் சலாதின் செக்யூரிட்டி என்று பெயர் மாற்றப்பட்டு, இலங்கையில் தொடர்ந்து பணியாற்றி வந்ததாக சொல்லப்படுகிறது. இலங்கை இராணுவத்தின் முதல்நிலை இராணுவ அதிகாரிகள் இங்கிலாந்தில் பயிற்று விக்கப்பட்டனர். கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் இராணுவ அதிகாரி ஒரு முன்னாள் கிளர்ச்சி எதிர்ப்பு நிபுணர் என்று தகவல். மேலும் அவர் ஜெனரல் ஃப்ராங்க் கிட்சன் (Frank Kitson) - ஆல் பாதுகாக்கப்பட்டவர் என்றும் கூறப்படுகிறது. (பக்கம் 46-47) |
| 1997-1998 | இக்கால கட்டத்தில் இலங்கையின் புதிய ''இராணுவ கட்டளை மற்றும் மாணவர் கல்லூரியை'' கட்டியமைப்பதில் பிரிட்டன் அதிகாரிகள் முக்கியமான பங்கு ஆற்றினார்கள். ஒரு பிரிட்டிஷ் கேர்னல் அந்த கல்லூரியில் நிரந்தரமாக இணைக்கப்பட்டார். அக்கல்லூரி யின் மூன்றாம் பருவத்திற்கான பாடத்திட்டம் இலங்கையில் கிளர்ச்சியையும், அதை அடக்கு வதையும் மையப்படுத்தியதாக இருந்தது. பின்னாளில் அதாவது ஒரு தசாப்தம் கழித்து, கொலைக்களங்களில் தளபதியாக செயல்பட இருந்த கமல் குணரத்னே அந்த கல்லூரியின் முதல்அணி மாணவர்களுள் ஒருவராக இருந்தார். (பக்கம் 48-50) |
| 2001 | இக்காலத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விடுதலைப்புலிகளை பிரிட்டன் தடை செய்தது. புலிகள் கொழும்பு விமானத் தளத்தை தாக்கினர். டிம் ஸ்பைசரும் அவரது நிறுவனத்தின் அனுபவம் வாய்ந்த சிறப்பு படையினரும் இலங்கைக்கு பயணம் செய்து துறைமுகங்களின் பாதுகாப்பு குறித்து ஆலோ சனை வழங்கினர். (பக்கம் 57-58) |
| 2002 | இந்த ஆண்டில் போர்நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகிறது. பாதுகாப்பு ஆய்வு குறித்து இலங்கைக்கு பிரிட்டன் ஆலோசனை கள் வழங்க தொடங்கியது. (பக்கம் 60) |
| 2003 | இவ்வாண்டில் பிரிட்டன் பெருமளவிலான ஆயுதங்களை இலங்கைக்கு விற்றது. (பக்கம் 64-67) |
| 2004 | இவ்வாண்டில்தான் பிரிட்டனின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் அடுத்து வரும் மூன்று ஆண்டுகள் இலங்கை இராணுவத்திற்கு ஒரு விரிவான பயிற்சி அளிக்கவும் கூடவே மேம் பாட்டுத்திட்டங்களை உருவாக்கவும் வழி வகுத்தார். (பக்கம் 68-70) |
| 2005 | இந்த ஆண்டில்தான் ஐரோப்பிய தலைமை பிரிட்டன் வசம் இருந்தபோது விடுதலைப் புலிகள் ஐரோப்பா முழுவதும் நுழையத்தடை விதிக்கப்பட்டது.(பக்கம் 72) |
| 2007 | இந்த ஆண்டு லிப்ரா ஆலோசனைக்குழு என்ற பிரிட்டிஷ் நிறுவனம் இலங்கையின் உளவு சேவைகளை மேம்படுத்தியது (பக்கம் 71) |
| 2008 | இவ்வாண்டிலும் இலங்கையுடனான பிரிட் டனின் பாதுகாப்பு மேம்பாட்டுப்பணி தொடர்கிறது. (பக்கம் 74) |
| 2009 | இந்த ஆண்டில் ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் இலங்கை இடம் பெறக்கூடாதென்று இங்கிலாந்து அரசின் உயர் அதிகாரி கருதினார். அதே நேரத்தில் வடக்கு அயர்லாந்து காவலர்களை கொழும்பு விற்கான முக்கிய நண்பர்களாக வெளியுறவு அலுவலகம் அனுப்பியது. (பக்கம் 75) |

# 1. அறிமுகம்

பிரிட்டனின் தலைமை அமைச்சர் டேவிட் கேமரூன் (David Cameron) கடந்த 2013-இல் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டார். அப்போது அவர் வடக்கில் யாழ்ப்பாணத்திற்கும் வருகை தந்தார். இப்பயணம் இலங்கைத் தீவில் சிங்கள பேரினவாத அரசாங்கத்தின் தொடர் அடக்குமுறைக்கு ஆளாகி யிருக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கு பிரிட்டன் ஆதரவு கொடுப்பதற்கானப் பயணமாகப் பார்க்கப் பட்டது[1]. இலங்கை அரசாங்கத்திற்கும் கிளர்ச்சியாளர்களான தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் நடந்த உள்நாட்டுப் போரில் நிகழ்த்தப் பட்ட போர்க் குற்றங்கள் குறித்த விசாரணைக்கு ஆதரவாக ஐ.நா- வின் மனித உரிமை கவுன்சிலில் மார்ச் 2014- இல் தீர்மானம் நிறைவேறு வதற்கு பிரிட்டன் பங்காற்றியது நினைவிருக்கலாம். இதுவும் ஈழத்தமிழ் மக்களுக்கு ஆதரவாக பிரிட்டன் இருப்பதைப் போன்ற நம்ப கத்தன்மையை ஊட்டியது. இதுபோன்ற சமீபத்திய போக்குகளானது ஈழத்தமிழ் மக்களின் விடுதலை இயக்கங்களை இலங்கை அரசாங்கம் முளையிலேயே கிள்ளி எறிய செய்த முயற்சிகள் அனைத்திலும் உதவியாக பிரிட்டிஷ் அரசும் (எந்த கட்சி ஆட்சியில் இருந்தபோதிலும்) தொடர்ச்சியாக இருப்பதை இருட்டடிப்பு செய்துவிட்டன.



*டேவிட் கேமரூன் நவம்பர் 2013 இல் யாழ்ப்பாணத்திற்கு வருகை-பிரிட்டிஷ் தூதரக அதிகாரப்பூர்வப் படம்*

இன அழிப்புப்போர் முடிவுற்றப் பிறகாவது தற்போதைய பிரிட்டிஷ் நிர்வாகத்திடம் ஏதாவது மாற்றம் உள்ளதா? ஒரு ஸ்காட்லாந்து காவல்துறை அலுவலர் இன்றும்கூட கொழும்பில் முகாமிட்டுள்ளார். அது போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கு அல்ல. ஒரு புதிய தேசிய காவல் துறை பயிற்சிப்பள்ளியை வடிவமைப்பதே அவரது பணி[2]. ஐ.நா மனித உரிமை கவுன்சிலில் போர்க்குற்றங்கள் குறித்து முழங்குவதற்கு சற்று முன்னர்தான், பிரிட்டிஷ் அரசாங்கம் லக்சம்பர்கில் உள்ள ஐரோப்பிய நீதிமன்றத்திற்கு தமது வழக்குரைஞர்களை இரகசியமாக அனுப்பி வைத்தது. அங்கு போய் அவர்கள் புலிகள் மீதானத் தடையை ஐரோப்பா முழுவதுமாக நீடிக்க வேண்டும் என வாதாடினார்கள்[3]. விடுதலைப் புலிகளை ஆரம்பம் முதற்கொண்டே பிரிட்டிஷ் அரசு எதிர்த்து வந்துள்ளது என்பதோடு, விடுதலைப்புலிகள் அமைப்பை ஒரு பயங்கர வாத அமைப்பு என்று கூறி இங்கிலாந்து தடையும் செய்தது. இவையெல் லாவற்றையும் விட இதுபோன்ற வெளியில் தெரிந்த நடவடிக்கைகள் மட்டுமில்லாமல் இரண்டு தசாப்தங்களுக்கு முன்பிருந்தே கிளர்ச்சிகளை ஒடுக்குவதற்கு இலங்கைக்கு வேண்டிய அளவு உதவிகளை செய்து கொண்டே வந்துள்ளது.

தனிநாட்டிற்காக போராடிய ஈழத்தமிழ் மக்கள் மீது 30 ஆண்டு களாக நடைபெற்ற இனப்படுகொலைப்போர் நெடுகிலும் இலங்கை அரசப்படைகளோடு பிரிட்டன் வைத்திருந்த கள்ளக் கூட்டை அம்பலப் படுத்துவதே இந்த நூலின் நோக்கமாகும்[4]. இந்தக் கள்ள உறவானது பிரிட்டிஷ் கூலிப்படைகளின் திரைமறைவு நடவடிக்கைகள், பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளின் வெளிப்படையான பயிற்சிகள், நவீன கனரக ஆயுதங்களை வழங்கியமை, பயங்கரவாத தடை சட்டங்களை நிறை வேற்றியமை, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் திட்டமிட்ட மௌனம் சாதித்தது என பல வடிவங்களை கொண்டது. ஒவ்வொரு சந்தர்ப் பத்திலும் பிரிட்டிஷ் அலுவலர்கள் ஈழ விடுதலைப்போரில் முடிவெ டுக்கும் வாய்ப்புடன் இருந்தார்கள். அவர்கள் முடிவெடுத்தார்கள் வேறு விதமாக. அவ்வாறான முடிவுகளின் ஒட்டுமொத்த விளைவால்தான் 2009-இல், முள்ளிவாய்க்கால் கடற்கரைகளில் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கொலை செய்யப்படுவதில்போய் முடிந்ததென்பதை வெளிப்படையாகக் காண நேர்ந்தோம்.

இப்படியான முடிவுகளின் ஆவணங்கள்தான் இனி வருவன...

**குறிப்புகள்:**

1 ரொவேனா மேசன் (Rowena Mason), டேவிட் கேமரூனை 'கடவுளா' போற்றும் தமிழர்கள், தி கார்டியன், நவம்பர் 15, 2013 ,

http://www.theguardian.com/world/2013/nov/15/avid& cameron & visits&tamils&sri&lanka (அணுகிய நாள், ஜூன் 21, 2014)

2 லிங்க்டுஇன் (LinkedIn), புரூஸ் மில்னே (Bruce Milne) விவரக் குறிப்பு, http://uk.linkedin.com/pub/bruce&milne/23/3ba/634 (அணுகிய நாள், ஜூன் 21, 2014)

3 தமிழ்நெட் இணையதளம், விடுதலைப்புலிகள் மீதான ஐரேப்பிய ஒன்றியத்தின் பயங்கரவாத தடை மேல்முறையீடு, பிப்ரவரி 26, 2014, http://www.tamilnet.com/art.html?catid=13artid=37071. (அணுகிய நாள், ஜூன் 21, 2014) இந்த நீதிமன்ற வழக்கை பற்றிய செய்தி எந்த பிரிட்டன் பத்திரிக்கையிலும் வரவில்லை

4 ப்ரேமெனில் 2013- இல் கூடிய இலங்கை மக்கள் தீர்ப்பாயத்தின் இரண்டாவது அமர்வானது நடந்ததை இனப்படு கொலையாக உறுதி செய்கிறது. தீர்ப்பு விவரத்தை வாசிக்க இந்த இணைப்பை பார்க்கவும் http://www.ptsrilanka.org/

## உ.தமிழர் சிக்கலைப் பிரிட்டன் கையாளுதல் (1979 – 1989)

இலங்கைத்தீவிற்கு 1948-இல் பிரிட்டன் அரசியல் விடுதலை கொடுத்த நாளில் இருந்தே சிங்கள பெரும்பான்மை அரசால் ஈழத்தமிழ் மக்கள் திட்டமிட்ட ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவது தொடங்கியது. அவர்களது மொழி உரிமை மறுக்கப்பட்டது. பாரபட்சமான சட்டங்களை இயற்றி, அரசுப் பணிகள் எதிலும் தமிழர்களை நுழையவிடாமல் செய்ததன் மூலம், அவர்கள் பல்கலைக்கழகங்களில் நுழையும் வசதியும், வாய்ப்பும் தடுக்கப்பட்டது. 'குடியேற்ற திட்டங்கள்' மூலம் தமிழர்களின் தாயகமான வடக்கு மற்றும் கிழக்கில் சிங்களர்கள் திட்டமிட்டு குடியேற் றப்பட்டனர். இத்தனை ஒடுக்குமுறையின்போதும் ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக காந்திய வழியை பின்பற்றியத் தமிழர்கள் பெரும் அரசியல் போராட்டங்களைத்தான் உறுதியுடன் ஒருங்கிணைத்தனர். அதற்கு பலனாக அவர்கள் இனவாத சிங்கள அரசின் கொடிய அடக்கு முறையைத்தான் சந்திக்க நேர்ந்து. காந்திய வழியில் போராடியத் தமிழர்கள் மீது அரசப்படைகளின் தூண்டுதலோடும் ஆதரவோடும் கலவரங்களும், வன்முறைகளும் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டன[1].

தமிழர்களின் அமைதிவழிப் போராட்டங்களைச் சிங்கள இனவாத அரசு வன்முறையால் எதிர்கொண்டதால், தமிழர்கள் தமிழீழம் என்ற தமது தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவாக படிப்படியாக வந்து சேர்ந்தனர். அமைதிவழிப் போராட்டம், 1970-களின் பிற்பகுதியில் ஆயுதப் போராட்டமாக வளர்கிற வரையிலும் பிரிட்டன் அதில் அக்கறை காட்ட வேயில்லை. 1979-வாக்கில் இலங்கைத் தீவின் பாதுகாப்பு சூழல் படு மோசமானதைத் தொடர்ந்து ஜேக் மார்ட்டன்[2] (Jack Morton) என்ற நபரை இலங்கைக்கு சில ஆலோசனைகள் வழங்க வேண்டி பிரிட்டன் அனுப்பி யது. இங்கிலாந்து அரசின் உளவுத்துறையான எம்.ஐ-5 இன் முன்னாள் இயக்குனரான மார்ட்டன், நீண்ட நெடிய அனுபவம் உடைய பிரிட்டிஷ் இராணுவ அலுவலர். இவர்தான் 1973-இல் ராயல் உல்ஸ்டர் கான்ஸ் டாபுளரி (RUC) என்ற சிறப்பு உளவுப்பிரிவை மறுசீரமைப்பு செய்து எம்.ஐ-5 என்ற பாதுகாப்புச் சேவையை ஏற்படுத்தியவர். எம்.ஐ-5 என்பது, ஐரிஷ் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக பிரிட்டன் பரப்புரைகளை மேற்கொள்ளவும், பயங்கரவாதிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்களின் தரவுகளைச் சேகரிக்கவுமான நடவடிக் கைகளில் ஈடுபடுவதற்கான உளவு அமைப்பாகும். RUC-இன் சிறப்புப் பிரிவானது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் திரைமறைவில் இயங்கும் ஒரு இரகசிய அமைப்பாகவும், 'இராணுவத் திற்குள் ஒரு இராணுவம்' போலவும், எதிர்காலத்தில் அரச விசுவாச கொலைப்படையாக மாறவுமான நிலையில் வளர்க்கப்பட்டது[3]. இவைத் தவிர மார்ட்டனுக்கு இன்னும் சில அனுபவங்களும் இருந்தன. மலாயாவில் காலனியாதிக்கத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களுடன்[4] பிரிட்டன் நீண்ட போரை நடத் தியபோது, அதில் புலனாய்வு இயக்குனராக பணியாற்றியவர் இவர். எனவே 'புலனாய்வு எந்திரத்தின் முழு மறுசீரமைப்புக்கான நடைமுறை ஆலோசனைகளை' இலங்கைக்கு வழங்க மார்ட்டன் அனுப்பப்பட்டதில் வியப்பேதும் இல்லைதான். இதுதான் இலங்கையில் பிரிட்டன் உதவியோடு உளவுத்துறைக்கான சிறப்புப்பிரிவை அமைப்பதற்கான தொடக்கமாகவும் இருந்தது. 'தமிழர் சிக்கலை கையாளும் இலங்கைப் பாதுகாப் புப்படையினரின் மனத்தொய்வை[5]' படம் பிடித்துக் காட்டுகிறது மார்ட்டனின் 1979-ஆம் ஆண்டு வெளிவந்த அறிக்கை.

போலிசாரின் இரகசிய கூட்டோடு சிங்கள குண்டர்கள் ஈழத் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட (கருப்பு ஜூலை என்று அறியப்படும்) 1983-ஆம் ஆண்டு ஜூலை மாதம்[6] நடைபெற்ற கலவரமே

இலங்கையில் உள்நாட்டுப் போரின் தொடக்கமாக அறியப்படுகிறது. தமிழர்களுக்கு எதிரான இந்த கலவரம் நடக்கும் ஒரு மாதத்திற்கு முன்னதாகத் தான் இரண்டு இலங்கை போலீஸ் உயர் அதிகாரிகள் பெல்ஃபாஸ்ட்க்கு பிரிட்டனால் அழைக்கப்பட்டிருந்தார்கள். **ஜூலை 1983-இல் நடக்க இருந்த கலவரத்தில் போலீஸ் மற்றும் இராணுவத்தினரின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் தங்களது பங்களிப்பு குறித்த ஒரு ஒத்தி கைக்காகவே அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். கலவரம் நடப்பதற்கு முன்பே கலவரத்தை எப்படி அடக்குவது என்று இரு அரசுகளும் ஆலோ சிக்கிறது என்றால் கலவரம் யாரால் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது என்பது நமக்கு விளங்கிவிடுகிறதல்லவா!**

எம்.ஐ-5 ஏற்பாடு செய்திருந்த பயங்கரவாத சாதனங்களும் செய் முறைகளும் குறித்த சர்வதேச கருத்தரங்கிற்கும் அதே இரண்டு காவல் துறை அதிகாரிகள் வரவழைக்கப்பட்டனர். மேலும் அவர்கள் பெருநகர போலீஸ் சிறப்புப்பிரிவை சந்திக்கவும் திட்டமிடப்பட்டது. இலங்கையில் தமிழர்களுக்கான ஒரு தனிநாட்டை அமைப்பதை இலட்சியமாகக் கொண்டு இங்கிலாந்தில் செயல்பட்டு வந்த இயக்கங்களின் செயல்பாடுகள் குறித்தும், அதை அடக்குவதற்கான பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்தும் விவாதிப்பதற்கே இந்த சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.


சர்.பீட்டர் ரிக்கெட்ஸ், 2014

கருப்பு ஜூலைக்கு முன்பிருந்தே இலங்கை பாதுகாப்புப்படை யினருடன் பிரிட்டன் வைத்திருந்த இதுபோன்ற பெருமளவிலான கூட்டுகள் என்பது அக்டோபர் 2013-இல்தான் ஒரு தகவல் பெறும் உரிமையின் அடிப்படையில் வெளிச்சத்திற்கு வந்தது. **கலவரம் நடப்பதற்கு முன்பே கலவரத்தை அடக்குவதற்கானப் பணிகள் நடந்த விந்தையான செய்தி காலம் தாழ்ந்தே கிடைத்தாலும் இதன் முக்கியத்துவம் இன்றுவரை உணரப்படாமலே உள்ளது[7].**

இலங்கை பிரிட்டனிடம் கிளர்ச்சி நடவடிக்கைகளை ஒடுக்க இராணுவ பயிற்சியும் - கமாண்டோ பயிற்சியும் வேண்டி 1983 ஏப்ரலி லேயே[8] கோரிக்கை விடுத்திருக்கிறது. இது குறித்து பிரிட்டனின் வெளி நாடு மற்றும் காமன்வெல்த் அலுவலக அறிக்கை ஒன்று கூறுவதாவது- ''இது போன்ற பயிற்சிகள், 'அரசியல் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும்; மாட்சிமை பொருந்திய அரசாங்கம் அதாவது பிரிட்டன், சிங்கள அதிகாரிகளுக்கு பயிற்சி உதவிகள் செய்வதன் மூலம் இலங்கைத் தமிழர்களின் சட்டப்படியான உரிமைகளையும் அபிலாசைகளையும் ஒடுக்குவதாகவும்; இது தமிழர்கள் மீது சிங்களர் ஆதிக்கம் தொடர செய்யும் வழிவகை என்றும் இலங்கையிலுள்ள தமிழ் கலகக்காரர்கள் கடுமையாக குற்றஞ் சாட்டவும் நேரலாம். ஆனால் உங்களுக்கு தெரியும் நாம் இலங்கை அர சாங்கத்திற்கு இதுபோன்ற பயிற்சிகள் அளிப்பதன் மூலம் நம்மால் ஆன அனைத்து வழிகளிலும் (இரகசியமாக) எப்போதும் உதவவே விரும்புகி றோம் என்பதுதான் அந்த அறிக்கையின் கூற்று[9].

இந்தக் குறிப்புரை கவர்ச்சிகரமானதாக இருக்கின்ற அதேநேரத் தில் அடைப்புக் குறியினுள் உள்ள இரகசியமாக என்ற வார்த்தைதான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1980-களின் மத்திய காலப்பகுதி யிலேயே இலங்கையின் இராணுவத்திற்காக பிரிட்டன் கூலிப்படைகள் பணியாற்றி உள்ளன என்பதை அரசு வெளியில் தெரியாமல் மறைத்தே வந்துள்ளது. துடிப்புமிக்க செய்தியாளர்கள்[10] எவரேனும் இது குறித்து கேள்வி எழுப்பிய போதெல்லாம் இங்கிலாந்து அரசானது தமது தலை யீட்டை மறுத்தே வந்துள்ளது. சமீபத்தில் டௌனிங் வீதியிலுள்ள அரசு அலுவலகங்களில் இருந்து வெளியான 1984-இன் அறிக்கைகள் இந்த மோசடிகள் அரசாங்கத்தின் உயர் மட்டம்வரை தெரிந்திருந்ததை அம்பலப்படுத்தியுள்ளது.

1984 செப்டம்பரில், பிரிட்டன் வெளியுறவுச் செயலரான ஜெஃப்ரி ஹோவே (Geoffrey Howe)-வின் உதவியாளரான பீட்டர் ரிக்கெட்ஸ், மார்க்கரெட் தாட்சரின் தனிச்செயலருக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் ஒரு தனியார் பாதுகாப்பு நிறுவனம் (இங்கிலாந்து அரசாங்கத்தின் சிறப்பு படையனியினரின் அனுபவம் வாய்ந்தவர்கள் அடங்கிய ஃபால்கன்ஸ்டார் லிமிட்டட்) இலங்கையில் கிளர்ச்சியாளர் களை அடக்குகிற அரசாங்கத்திற்கு ஆதரவாக அனுபவம் வாய்ந்த நபர் களை

அனுப்புவதற்கு அனுமதி வேண்டியிருந்ததையும், அதற்கு அதிகார பூர்வமற்ற முறையில் அனுமதியளித்திருந்ததையும் அந்த கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். ஃபால் கன்ஸ்டாரின் பணி, இலங்கைத்தீவின் தேசியப் பாதுகாப்பு அமைச்சருடன் சில ஆரம்பகட்ட ஆலோசனைகள் நடத்தியதைத் தாண்டி வளரவில்லை. இருந்தபோதும் கே.எம். எஸ் லிமிட்டட் என்ற இங்கிலாந்து அரசின் மற்றொரு பாதுகாப்பு நிறுவனம் இலங்கையில் ஏற்கனவே செயல்பட்டுக் கொண்டுதான் இருந்தது. இங்கிலாந்து அரசாங்கம் (டௌனிங் தெரு), கே.எம்.எஸ்-இன் நடவடிக்கைகள் குறித்து நன்கு அறிந்திருந்தபோதிலும், ஃஎப்.சி.ஓ.-வின் தெற்காசியத் துறை உறுதியெடுத்திருந்ததைப் போலவே இரகசியமாக இராணுவ பயிற்சிகளை கொடுக்கும் வேலைகளை கே.எம்.எஸ் தொடர்ந்து செய்ய அனுமதித்துக் கொண்டுதானிருந்தது.



இரண்டு வெளிநாட்டு இராணுவ ஆலோசகர்களுடன்இலங்கை கமாண்டோ பிரிவு - சிறப்பு அதிரடிப் படை இணையதள புகைப்படம்

இந்தக் கள்ள உறவை ‘மறைக்கும்’ போக்கு அரசிடம் இருந்ததை ரிக்கெட்ஸ் மறைமுகமாக உணர்த்துவதைப் பாருங்கள்.

‘‘இது முற்றிலும் வணிகமயமான விடயம் என்றும், மாட்சிமை பொருந்திய அரசு எந்த வகையிலும் இதில் ஈடுபடவில்லை என்பதையும் நாங்கள் தெளிவுபடுத்திவிட்டோம். கிளர்ச்சியை ஒடுக்குவதிலோ அல்லது காவலர் பயிற்சியிலோ ஃபால்கன்ஸ்டார் லிமிட்டட்-இன் தந்திரங்களைப் பற்றி எங்களுக்கு பெரிதாக எதுவும் தெரியாது. ஆன போதும், இலங்கையை வியாபார ரீதியாக அவர்கள் அணுகுவதில் எங்க ளுக்கு ஆட்சேபம் ஏதுமில்லை. பயிற்சியளிப்பதற்கான ஆலோசனைகள் வழங்குகிற ஏலத்தில் இந்த நிறுவனம் வென்றால் அது ஃபால்கன்ஸ்டார் லிமிட்டட் நிறுவனத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள முழுக்கமுழுக்க வணிகமயமான ஒப்பந்தம் என்றும், மாட்சிமை பொருந்திய அரசாங்கத்திற்கும் இதற்கும் **எந்தத் தொடர்பும் இல்லை என்றும் நிலைநிறுத்துவது** நமக்கு முன்னுள்ள முகாமையான கடமையாகும்[11]’’ (அழுத்தம் சேர்க்கப்பட்டது) என்கிற அவரது கருத்து அப்பன் குதிருக்குள் இல்லையென்பதை நினைவுப்படுத்துகிறது.

மேலும் அவர் ‘‘இலங்கையின் பாதுகாப்புப்படையினர் தமிழ் பயங்கரவாத நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு கொஞ்சம்கூட லாயக் கற்றவர்கள் என்பதை நிரூபித்துள்ளனர். இந்த குறைபாடுகளைச் சரி செய்யும் முயற்சியாக, இலங்கை அரசானது கே.எம்.எஸ் லிமிடேட் என்ற மற்றொரு பிரிட்டிஷ் இராணுவ நிறுவனத்தைப்* பணியில் அமர்த்தி யுள்ளது என்றும், பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சிகளைப் பெற்று வருகி றது[12]’’ என்றும் எழுதுகிறார் ரிக்கெட்ஸ்.

கே.எம்.எஸ் நிறுவனம் என்பது எஸ்.ஏ.எஸ்.-இன் முன்னாள் மேஜர் டேவிட் வால்கர் மற்றும் எஸ்.ஏ.எஸ் புலனாய்வுத்துறையின் முன்னாள் துணைத்தலைவரான ஆண்ட்ரு நைட்டிங்கேல் ஆகியோரால் 1974-இல் உருவாக்கப்பட்டது. கே.எம்.எஸ் என்பதன் விரிவாக்கம் கீனி மீனி சர்வீசஸ் (Keenie Meenie Services) என்பதாகும். இதற்கு அரபி அல்லது ஸ்வகாலி மொழியில் ’இரகசிய நடவடிக்கைகள்’ என்று பொருள். (கே.எம்.எஸ் நிறுவனம் ஏற்கனவே ஓமன் சுல்தானின் சிறப்புப் படைப்பிரிவிற்கு பயிற்சியளித்துள்ளது. மேலும் நிகராகுவாவின் பல்வேறு போராளிக்குழுக்களுக்கும், ஆஃப்கானிஸ்தானில் தாலிபான்களுக்கும் உதவி செய்துள்ளது. அதன் பிறகு சலாடின் செக்யூரிட்டி என்று பெயர் மாற்றப்பட்டது[13])

இலங்கையில் ஈழத்தமிழர்களுக்கு எதிரானப் போரில் எஸ்.ஏ. எஸ் ஆட்கள் இருப்பதாக ஏற்கனவே கருதிய இந்திய அரசு அதை 1984 வாக்கில் பிரிட்டிஷ் தூதரகத்தில் முறையிடவும் செய்தது. ஆனால் பிரிட் டிஷ் அரசாங்கமோ தமது தலையீட்டை 1980-கள் முழுக்க மறைத்தே வந்தது. இந்த

மோசடிக்கு உடந்தையாயிருந்த பீட்டர் ரிக்கெட்ஸ், பிரிட் டிஷ் அரசாங்கத்தில் நீண்ட காலம் தனித்துவமான பொறுப்புகளை வகித் தவர். அவர் கூட்டுப்புலனாய்வுக்குழுவின் தலைவராக 2000 - 2001-களி லும், எஃப்.சி.ஓ-வின் அரசியல் தலைமை ஜெனரலாக 2001 - 2003 வரையிலும், அதன் பிறகு நேட்டோ (NATO) கவுன்சிலுக்கான இங்கி லாந்து அரசின் நிரந்தர பிரதிநிதியாக 2006 வரையிலும் பணியாற்றியவர். பின்னர் எஃப்.சி.ஓ-வின் நிரந்தர செயலராக (PUS - Permanent Under Secretary) 2006 முதல் 2010 வரை பணியமர்த்தப்பட்டவர். கக்கு என்பது எஃப்.சி.ஓ-வின் மிக மூத்த சிவில் பொறுப்பாகும். இத்தகைய உயர் பொறுப்புகளில் இருந்த ஒருவரது செயல்பாடுகள் எத்தகைய அரசியல் முக்கியத்துவம் உடையதாக இருந்திருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.




டிம் ஸ்மித் எழுதிய நூலின் அட்டைப்படம்

விடுதலைப்புலிகளுக்கு எதிரான இலங்கையின் இறுதி கட்ட கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளின்போது ரிக்கட்ஸ்தான் இந்த பொறுப்பில் இருந்தார். அதன் பிறகு தலைமை அமைச்சர் டேவிட் கேமரூனின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் என்று புதிதாக உருவாக்கப்பட்ட பதவியில் அவர் அமர்த்தப்பட்டார். 2012-இல் சர் பீட்டர் ரிக்கட்ஸ் பிரான்ஸ் நாட்டிற்கான இங்கிலாந்து அரசின் தூதுவராக நியமிக்கப்பட்டார். இன்றுவரை அவர் அந்த பொறுப்பில்தான் நீடிக்கிறார். அவருடைய பதவிக்காலத்தை முழுதாகப் பார்த்தால் பெரும்பாலான காலத்தில் இனமோதலும், உள்நாட்டுப்போரும் நிறைந்த இலங்கையில்தான் பணி யாற்றியிருக்கிறார். **மூன்று தசாப்தங்களுக்கு (30 ஆண்டுகளுக்கு) மேல் தொடர்ச்சியாக பிரிட்டிஷ் அரசாங்கத்தின் சார்பில் இலங்கையில் பணிப் புரிந்துள்ளார். இவர்தான் முக்கியமான முடிவுகளை தொடக்க காலத்தில் எடுத்தவர்; இறுதிவரையிலும் கூட முடிவெடுப்பதற்கான செல்வாக்கு டையப் பதவிகளில் இருந்தவர்[14].**

சிறப்பு அதிரடிப்படை எனப்படும் இலங்கை காவல்துறையினரது துணை இராணுவப் பிரிவானது தங்களது அதிகாரப்பூர்வமான வரலாற்றில் இந்த கால கட்டதில் கே.எம்.எஸ் ஆற்றிய



இலங்கையில் கே.எம்.எஸ்.சகாக் களுடன் டிம் ஸ்மித்



ஸ்மித் இன் உலங்கு வானூர்தியில் சிறை

பங்கு குறித்து தெளிவாக குறிப்பிட்டுள் ளது[15].

‘‘இங்கிலாந்து அரசாங்கத்தில் இருந்து இயங்கும் ஒரு நிறுவனமான, முன்னாள் பிரிட்டிஷ் எஸ். ஏ.எஸ் அலுவலர்களை கொண்டிருக்கும் கே.எம். எஸ் என்ற நிறுவனம் மிக தொடக்க காலத்திலேயே சிறப்பு அதிரடிப்படைக்கு பயிற்சிகளை வழங்கியது. கலகங்களை அடக்கும்

குழுக்களால் கடைபிடிக் கப்படும் மூலவுத்திகள், ஆயுதப்பயிற்சி, துப்பாக்கி சுடும் பயிற்சிகள், பயங்கரவாதிகளை தேடும் நடவடிக்கைகள், வெடிமருந்துகளைக் கையாளுதல், வரைபடங்கள் மற்றும் திசைமானி பயன்பாடு, முதலுதவி ஆகிய பயிற்சிகள் கே.எம். எஸ்-ஆல் வழங்கப்பட்டது. இது தவிர, உலகப்புகழ் பெற்ற அமெரிக்க தயாரிப்பான எம்.16 தானியங்கி துப்பாக்கியின் அறிமுகமும் கூட இந்நிறு வனத்தால்தான் கிடைத்தது. இதனாலேயே, சர்வதேச அளவில் அங்கீக ரிக்கப்பட்ட சிறப்புப்பிரிவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் கிரீன் பேரட் (Green Berets) விருது சிறப்பு அதிரடிப்படைக்கு (STF) வழங்கப் பட்டது''.

இதே கூற்று இலங்கையின் பத்திரிக்கைகளிலும் வெளியானது.

''கட்டுகுருண்டா காவல்துறை கல்லூரியில் ஆரம்பகட்ட பயிற்சிகளை எஸ்.டி.எஃப் -இன் முதல் பயிற்சி அணியினர் முடித்தனர். அதன் பிறகு அவர்கள் அம்பாரை கொண்டுவட்டுவானில் உள்ள இராணுவத் தின் போர் பயிற்சிப்பள்ளியில் பயிற்சி மேற்கொண்டனர். (இலங்கை) அதிபரின் அப்போதைய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த ரவி ஜெயவர்தனாவின் தலையீட்டை அடுத்து காவல்துறை கமாண்டோக்களுக்குப் பயிற்சி அளிக்க முன்னாள் பிரிட்டிஷ் எஸ்.ஏ.எஸ் ஆட்களின் சேவையை இலங்கை அரசாங்கம் பெற்றது. இங்கிலாந்திலுள்ள சேனல்தீவைத் தள மாகக் கொண்டு இயங்கும் கீனி மீனி (கே.எம்.எஸ்.) நிறுவனத்தால் பணி யமர்த்தப்பட்ட பிரிட்டிஷ் நிபுணர்கள் காவல்துறை பயிற்சிப் பள்ளியின் கட்டுகுருண்டா பிரிவை ஒரு அதிநவீன பயிற்சித் தளமாக மாற்றியது[16].

1983-இல் எஸ்.டி.எஃப் நிறுவப்பட்டதைத் தொடர்ந்தும், வடக்கு மற்றும் கிழக்கில் ஆயுத போராளிக்குழுக்களின் நடவடிக்கைகள் வெடித்தெழுந்ததைத் தொடர்ந்தும், சிறப்பு அதிரடிப்படைக்கு எஸ்.ஏ. எஸ்-யின் பிரத்யேக குழுவால் அடிப்படை மற்றும் மேம்பட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டன. சேனல்தீவை தளமாகக்கொண்டு இயங்கும் கீனி மீனி சர்வீசஸ் நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னாள் பிரிட்டிஷ் சிறப்பு வான்சேவை (எஸ்.ஏ.எஸ்.)-யின் பிரத்யேக குழுவால் இப்பயிற்சிகள் அளிக்கப்பட்டன[17].''


ரிச்சர்ட் கிளட்டரபக்

இவையெல்லாம் பத்திரிகை ஆதாரங்கள். இனமோதல் வலுவ டைந்ததைத் தொடர்ந்து, 1986 - 1987 வாக்கில் கே.எம்.எஸ்-இன் பங்கு எவ்வாறு உலங்கு வானூர்தி (Helicopter) செலுத்தும் பயிற்சிவரை விரிவ டைந்தது என்பதை வேறு தரவுகளும் நமக்கு காட்டுகின்றன. டிம் ஸ்மித் (Tim Smith) என்ற முன்னாள் பிரிட்டிஷ் இராணுவ உலங்கு வானூர்தி பைலட் தனது நினைவு குறிப்புகளில் கே.எம்.எஸ் தன்னை எப்படி இலங்கை வான்படைக்கு உலங்கு வானூர்தி 'பயிற்சியாளராக' பணிய மர்த்தியது என்பதைக் கூறியுள்ளார். ஸ்மித் போன்ற பயிற்சியாளர்கள் வெறும் பயிற்சியாளர்களாக மட்டும் இருக்காமல், போர் நடக்கும் பகுதிகளுக்கு விமானங்களை ஓட்டிச்சென்று குண்டு வீசவும் செய்தனர். இது போரில் அவர்கள் நேரடியாகவே ஈடுபட்டு வந்ததைக் காட்டுகிறது.

ஸ்மித் 1986- இல் தனது முதல் சுற்றுப்பயண கதையில் ''ஐந்து மாதங்களுக்குள்ளாக 152 புலிகள் கொல்லப்பட்டதில் நேரடியாக நான் ஈடுபட்டிருந்தேன். நல்லது, மிகச் சரியாக சொல்லவேண்டுமானால் 152- க்கு பிறகு நான் எண்ணுவதை விட்டு இருக்கலாம். இலங்கையின் கொழும்பிலும், இங்கிலாந்தின் கென்சிங்டனிலும் வசதியான அலுவலகங்களில் இருந்து எங்களை ஏவியவர்களைவிட நிலைமையின் துல்லியம் நேரடியாக களத்தில் இருந்த என்னைப் போன்றவர்களுக்கே தெரியும். கட்டுநாயகாவில் பயிற்சி அளிக்கவும், பிறகு யாழ்ப்பாணம் சென்று எப்படி இவை எல்லாம் நடத்தப்பட வேண்டும் என்பதை குறைந் தபட்சம் செய்துக் காண்பிக்கவும் நான் இலங்கைக்கு வரவேண்டியி ருந்தது[18]'' இவ்வாறு முடிக்கிறார்.

1986-இல் மாயன் விஜி என்பவரால் எழுதப்பட்ட அறிக்கை, ''1983 முதல் பிரிட்டிஷ் பைலட்டுகள் தமிழ் பகுதிகளில் விமானங்கள் மற்றும் உலங்கு வானூர்திகள் மூலம் தாக்குதல் நடத்தினர். அத்தோடு மற்ற பிரிட்டிஷ் கூலிப்படையினர் தரைவழி தாக்குதல்களை முன்னணி யில்

நின்று நடத்தியதாக அறியப்படுகிறது. கூலிப்படையினர் நடத்திய வான் வழித் தாக்குதல்கள் பெருமளவில் பொது மக்களுக்கு உயிர்ச்சேதத்தையும், சொத்துக்களுக்கு அழிவையும் ஏற்படுத் தின[19]'' என்று கூறுகிறது. இவரது கூற்றை அடிப்படையாகக் கொண்டு 11 மே 1986 தேதியிட்ட இங்கிலாந்து சண்டே டைம்ஸ் செய்தித்தாளில் அனுபவம் வாய்ந்த பத்திரிக்கையாளரான சைமன் வின்செஸ்டர் (Simon Winchester) எழுதிய ஒரு கட்டுரையும் வெளியாகியுள்ளது. அக்கட்டுரை டிம் ஸ்மித்தின் கூற்றையும் சேர்த்து உறுதிப்படுத்துவதாக உள்ளது.

லண்டன் டெய்லி நியூஸ் (மார்ச் 1987) மற்றும் வாஷிங்டன் டைம்ஸ் (19 மே 1987) ஊடகங்களில் வெளிவந்த கட்டுரைகளை மேற்கோள் காட்டி மேலதிகப்படியான தகவல்களை எழுத்தாளர் டி. சபாரத்தினம் நமக்குத் தருகிறார்.

''பன்னிரெண்டுக்கும் மேற்பட்ட கே.எம்.எஸ் ஆட்கள் வருமா னவரிப் பிடித்தமே இல்லாமல் ஆண்டுக்கு 33000 அமெரிக்க டாலர்கள் ஊதியம் பெற்றுக்கொண்டு இலங்கையில் பணிபுரிந்து வருவதாக லண்டன் டெய்லி நியூஸ் சொல்கிறது. வாஷிங்டன் டைம்ஸ்-இன் ரிச்சர்ட் எஸ். எஹ்ரில்ச் (Richard S. Ehrlich), இலங்கையில் பணியாற்றிய கே.எம். எஸ் நபர்களின் எண்ணிக்கை குறைந்தபட்சம் 35 இருக்கலாம் என்று வெளிப்படுத்துகிறார்... எஹ்ரில்ச் முடிவாக இப்படி கூறுகிறார்: பயிற்சி யளிக்கவும் ஆலோசனை வழங்கவுமான பாத்திரத்தையே கே.எம்.எஸ் இங்கு ஏற்றிருப்பதாக சொல்லப்பட்டது. இருந்தபோதும், உண்மையான சண்டை நடக்கும்போது, குறிப்பாக வான்வழித் தாக்குதல்கள் நடக்கும் போது அந்த வரையரைகள் முழுமையாக கடைபிடிக்கப்பட்டதாக தெரியவில்லை.

இதற்கு எடுத்துக்காட்டாக, அமெரிக்கத் தயாரிப்பான பெல் 212 மற்றும் 412 பீரங்கி ஏந்திய உலங்கு வானூர்திகளை (Helicopter Gunships) இயக்குவதற்காக இலங்கை இராணுவத்திற்குப் பயிற்சி அளிக்கும் பணியில் 35 கே.எம்.எஸ் ஆட்கள் இருந்தனர் என்கிறது ஒரு செய்தி. நமக்கு கிடைத்த மற்றொரு விபரமானது, போர்க்களத்தின் மேல் பறந்து கொண்டிருக்கும்போது கே.எம்.எஸ் ஆட்கள் துணை பைலட்டின் இருக் கையில் அமர்ந்திருப்பார், இலங்கை இராணுவத்தை சேர்ந்த ஒருவர் பெய ரளவில் அந்த வானூர்தியின் கேப்டனாக இருப்பார் என்கிறது[20].''

தரையிலிருந்து விமானத்தை நோக்கி துப்பாக்கி சூடு நடக்கும் போது சிக்கல் தொடங்கும். அது குறித்த செய்தியின்படி, ''அதன் பிறகு உலங்கு வானூர்தியின் பின்னிருக்கையில் அமர்ந்து இருக்கும் இலங்கை இராணுவ வீரர் திருப்பி சுடுவார். இப்போது எதிரியின் துப்பாக்கி சூட்டில் இருந்து தப்பும்படியாக வானூர்தியை செலுத்துவதில் அனுபவம் வாய்ந்த அந்த கே.எம்.எஸ் பைலட் கட்டுப்பாட்டை கையில் எடுத்துக் கொள்வார்''.

சபாரத்தினமும், அவரால் ஆதாரம் காட்டப்படுகிறவர்களும் சொல்வதிலுள்ள அதிர்ச்சியளிக்கும் உண்மை என்ன? முதல் ஈழப்போ ரில் (1983 - 1987) இந்த பிரிட்டிஷ் பாதுகாப்பு நிறுவனத்தின் முக்கியத்து வத்தை அறிய முனைவோமானால், கே.எம்.எஸ்-இன் பயிற்சியாளர்கள் குறைந்தது 35பேர் அதில் நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது தெரியவரும். அவர்கள் தங்களது சக பயிற்சியாளரான டிம் ஸ்மித் செய்த படுகொலைப்போல (ஐந்து மாதங்களில் 152-க்கும் மேலான படுகொலைகள்) தாங்களும் செய்திருப்பார்கள். இதை கணக்கிட்டுப் பாருங்கள். அப்படி நடந்திருந்தால், ஒரு சில மாதங்களிலேயே 5000-க்கும் மேற்பட்ட ஈழப்போராளிகளை படுகொலை செய்வதில் இந்த நிறுவன ஊழியர்கள் நேரடியாக ஈடுபட்டிருக்கக்கூடும்.

அதிநவீன சாதனங்களையும், தொழில்நுட்ப பயிற்சிகளையும் இந்த நிறுவனம் இலங்கைப் படையினருக்கு வழங்கியுள்ளதை பார்க்கும்போது, ஆரம்பகட்டத்தில் இருந்த போரை மேலும் தீவிரப்படுத் தியதிலும், அரச வன்முறையை அதிகப்படுத்தியதிலும் இவர்களின் சாதனைகள் என்ன என்பதை எளிதாக உணர்ந்து கொள்ளலாம். இலங்கை இராணுவத்தின் நெருக்கடியான காலங்களில், உயர் பிரிட்டிஷ் இராணுவ ஆலோசகர்களிடம் இருந்து கிடைத்த இந்த அளவிலான நேரடி உதவிகள் தான் விடுதலைப்புலிகளை எதிர்த்து போரிடுவதற்கான நம்பிக்கையை இலங்கை அரசிற்கு ஆழமாக ஏற்படுத்தியிருக்கக்கூடும். பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணாமல், போரைத் தொடர்வதென்ற இலங்கையின் முடிவுக்கும்கூட அதுவே காரணமாக இருந்திருக்கும்.

மற்றொரு எஸ்.ஏ.எஸ் வீரரான ராபின் ஹார்ஸ்ஃபால் (Robin Horsfall) இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சியளித்தமுன்னாள் கே.எம். எஸ் ஊழியர். இவர் 1986 வாக்கில் அப்பணியிலிருந்து விலகினார்.

அவர் கூறுவதாவது- ''நான் தவறான இடத்தில் வேலை செய்கிறேன் என்ற முடிவிற்கு பணியில் ஈடுபட்ட மூன்று மாதங்கள் கழித்துதான் வந்தேன். நான் அப்பணியில் இருந்த காலத்தில் இலங்கையில் பணியாற்றிக் கொண்டிருந்த மற்ற பிரிட்டிஷ்காரர்களிடம் இருந்து தொடர்ச்சியாக எனக்கு செய்திகள் வந்து கொண்டேயிருந்தன. அவை,இரண்டாம் உலகப் போருக்கு முன் யூதர்களை நாஜிகள் நசுக்கிய அதே விதத்தில்தான் இலங்கையிலும் சிறுபான்மையினரை சிங்கள இனவாத அரசு நசுக்குக்கிறது என்ற சித்திரத்தையே எனக்கு தோற்றுவித்தன[21].''

கெடுவாய்ப்பாக ஹார்ஸ்ஃபாலை போல மற்ற பிரிட்டிஷ் கூலிப் படையினர் நேர்மையானவர்களாக இருக்கவில்லை. ஆனாலும் ஒன்றும் கெட்டு போகவில்லை. மற்றவர்கள் சொல்லாததை ஹார்ஸ்பாலே சொல்லி விடுகிறார். அவர் மேலும் சொல்வதாவது;-

''இலங்கை விமானப்படை (SLAF - Sri Lankan Air Force) உருவாக் கப்பட்ட தொடக்க காலத்தில், அதில் துப்பாக்கி சுடுபவர்களின் (side gunners) எண்ணிக்கைக் குறைவாக இருந்தது. கெப்ரால் (Cabral) என்பவர் அப்பிரிவின் கமாண்டராகப் பொறுப்பேற்றுக் கொண்டப்பிறகு இந்நிலைமை மாறியது. அவர் தமது ஒட்டுமொத்த நோக்கங்களுக்கு இணங்க, இலங்கை விமானப்படையின் திறன்களை மேம்படுத்த உறுதி பூண்டுள்ளதாக தெரிவித்தார். கெப்ரால் எப்போதும் கிரிஸ் எல்கிங்டன் (Chris Elkington) என்ற முன்னாள் பிரிட்டிஷ் சிறப்பு வான்சேவை (SAS - Special Air Services) நிபுணரை புகழ்ந்து கொண்டேயிருப்பார். 'எல்கிங் டன் ஒரு பைலட்டாக மட்டும் செயல்படவில்லை என்றும் இலங்கை வான்படையினர் விமானத்திலிருந்து சுடுவதற்கான (air gunners) திறன்களை வளர்த்தெடுத்ததிலும் மிக முகாந்திரமான பாத்திரத்தை வகித்தார் என்றும் கேப்ரால் புகழ்ந்தார். உடன்பணியாற்றிய அனைவரும் எல்கிங்டனை சராசரிக்கு அப்பாற்பட்ட தனித்திறன்கள் படைத்த மகிழ்வான வீரர் என்றே எப்போதும் நினைவு கூருகின்றனர் என்றும்; அப்போதைய அதிபருக்கு பணியாற் றும் வாய்ப்பும் எல்கிங்டனுக்கு வழங்கப்பட்டது என்றும்; விமானத்தி லிருந்து துப்பாக்கி சுடுபவர்களுக்கு பயிற்சியளிப்பதில் இன்றியமையாத பாத்திரத்தை ஆற்றியதோடு, பயிற்சிகளில் எல்கிங்டனுக்கு இருந்த முக்கியத் துவம் விவாதத்திற்கு அப்பாற்பட்டது என்றும் கெப்ரால் அழுத்தமாக கூறு வார். கெப்ராலின் புகழ்ச்சிக்கு காரணம் எல்கிங்டன் போன்ற பிரிட்டிஷார் எந்த அளவு பயிற்சியளித்து இலங்கை இராணுவத்திற்கு உதவியிருக்கின்றனர் என்பதைத் தவிர வேறென்ன? [22]'' என்ற ஹார்ஸ்பாலின் கூற்று சரிதானே!

ஹார்ஸ்பாலின் கூற்றிலிருந்து இலங்கையின் வான்படை துப்பாக்கி சுடுதல் முதலானப் பயிற்சிகளில் பிரிட்டனின் பாத்திரத்தை நாம் உணர முடியும்.

1987-இல் தமிழ் போராளிக்குழுக்களை நிர்பந்தித்து ஆயுதங்களை ஒப்படைக்குமாறு இந்தியா தலையிட்டது. அப்போதும்கூட, பிரிட்டன் இலங்கையின் பாதுகாப்பு கொள்கைகளில் குழப்பம் விளைவித்த வண்ணம் இருந்ததாகவே தெரிகிறது. 1988-இல் இலங்கை யிலிருந்த இந்திய அமைதி காக்கும் படைக்கு பிரிட்டனின் எஸ்.ஏ.எஸ். அலுவலர் ஒருவர் அறிவுரைகள் வழங்கியதாக ஹிந்துஸ்தான் டைம்ஸ் சமீபத்தில் குற்றம் சாட்டியது.'' (இந்திய அமைதிப்படையான IPKF - Indian Peace Keeping Force என்பது, பொதுமக்களை படுகொலை செய்ததில் காட்டிய ஈடுபாட்டிற்காக 'அப்பாவி மக்களை கொல்லும் படை' IPKF - 'Innocent People Killing Force' என மாற்றி அழைக்கப்பட்டது என்பதை மறக்க முடியாது). அமிர்தசரஸ் பொற்கோவில்[23] தாக்குதலை 1984-இல் மேற்கொண்ட இந்திய இராணுவத்திற்கு ஆலோசனைகள் வழங்கிய அதே அதிகாரிதான் இந்திய அமைதிப்படைக்கும் அறிவுரை வழங்கியவர்'' என்ற அதிர்ச்சியூட்டும் செய்தியை சிறப்பு படைகளும் புலனாய்வு தரவுகளும் Special Forces and Intelligence sources'' என்ற அந்த பத்திரிக்கையின் கட்டுரை கூறியது.

உண்மையில், பிரிட்டனின் கைகள் கிளர்ச்சி நடவடிக்கைகளை ஒடுக்கும் ஆலோசனைகள் வழங்குவதன் பேரில் இலங்கை அரசின் உயர் மட்டம் வரை போயிருக்கக் கூடும். 1987 - 1989-இல் நிகழ்ந்த ஜெ.வி.பி எழுச்சியை (ஜெ.வி.பி அப்போது ஒரு சிங்கள முதலாளித்துவ எதிர்ப்பு இயக்கமாக இருந்தது) முறியடிக்க அதிபர் ஜெ.ஆர்.ஜெயவர்தனேவிற்கு 1980-களின் பிற்பகுதியில் பிரிட்டிஷ் மேஜர் ஜெனரல் ரிச்சர்ட் கிளட்டர்பக் (Richard Clutterbuck) ஆலோசனை வழங்கியதாக பயங்கரவாதம் பற்றிய ஆய்வு நிபுனரான (Terrorism Expert) பேராசிரியர் ரோஹன் குணரத்னா குற்றம் சாட்டுகிறார். ''இதில் கிடைத்த படிப்பினை களை ஈழத்தமிழர்களை நசுக்குவதற்கும் சுலபமாக அவர்கள் பயன்படுத் தியிருக்கக் கூடும்[24]. கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான மலயா போரில்[25] தடம் பதித்திருந்த கிளட்டர்பக் பிரிட்டனின் கிளர்ச்சிஎதிர்ப்பு கோட்பாட் டாளர்களில் மையமானவராவார்'' என்பது குணரத்னாவின் கருத்து.

**குறிப்புகள்:**

1 இந்த சம்பவங்கள் அனைவரும் அறிந்தது என்றாலும், இலங் கைத்தீவில் 1948-க்குப் பிறகான தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் வன் முறைகளுக்குத் தேவையான அனைத்துக் கூறுகளையும் பிரிட்டன் காலனியாதிக்கவாதிகள் விதைத்திருந்தார்கள் என்பது பெரும்பாலும் யாருக்கும் தெரியாமலேயே உள்ளது. சிங்கள மேலாதிக்கவாத கோட்பாட் டின் பல்வேறு கூறுகளும், ஒற்றை ஆட்சியை உருவாக்கும் திட்டமும், பிரிட்டனால் இந்திய பெருங்கடல் பகுதியில் தனக்கிருக்கும் கேந்திர நலன்களை மேலும் விரிவுப்படுத்த வேண்டி வடிவமைக்கப்பட்டதாகும். காலனிய காலகட்டம் குறித்த விவரமான கட்டுரையை ஜூலை 15, 2014 முதல் இந்த இணையதள முகவரியில் காணலாம். www.ptsrilanka.org

2 பவர்பேஸ் (Powerbase), ஜாக் மார்டன் (Jack Morton) http://www.powerbase.info/index.php/JackMorton (அணுகிய நாள், ஜூன் 21, 2014)

3 கள்ளக்கூட்டைப் பற்றியும், 1970-இல் ஆர்.யு.சி சிறப்புப்பிரிவை பற்றியும் மேலும் தெரிந்து கொள்ள பார்க்க-; அன்னாகாட்வாலடர் (Anne Cadwallader)-யின் ''மரண கூட்டாளிகள்'' எனும் நூல் (கார்க், மெர்சியர்பதிப்பகம், 2013).

4 மலேயா சிறப்புப் பிரிவின் பின்னணி பற்றி மேலும் அறிய-; லியோன்கோம்பர், மலாயாவின் இரகசியபோலீஸ் 1945-60, மலேயா அவசரகால நிலைமைகளில் சிறப்புப் பிரிவின் பங்கு, (சிங்கப்பூர் இன்ஸ்டிட்டியூட் ஆஃப் சவுத் ஈஸ்ட் ஏசியன் ஸ்டடீஸ், 2008).

5 நூலாசிரியர் தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் கீழ் விண்ணப்பித்து பெற்றது. மூல எஃப்.சி.ஓ ஆவணம் எஃப்.எஸ்.சி 382/1, இலங்கை காவல்துறைக்கு இங்கிலாந்தின் உதவிகள் 1983. 'இலங்கை காவல்துறை - 7-11 மார்ச் 1983-இல் கொழும்புவிற்கு வருகை தந்த வெளிநாட்டு காவல்துறை ஆலோசகர்' என்ற தலைப்பில் மார்ட்டனின் அறிக்கை குறிக்கப்பட்டிருந்தது.

6 மேற்குறிப்பிட்ட அறிக்கை. மூத்த துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் எச்.டபிள்யு.எச். வீரசிங்கே மற்றும் துணைகண்காணிப்பாளர் கே.எஸ். பட்டிவிட்டா ஆகியோர் அந்த இலங்கை காவல்துறை யினராவர்.

7 அட்ரியன் ருத்தர்ஃபோர்டு (Adrian Rutherford), இரத்தக்கரை படிந்த இலங்கை ஆட்சிக்கு, வடக்கு ஐயர்லாந்து காவல்துறையின் தலைமை ஆட்கள் ஆலோசனை வழங்கினர். பெல்ஃ பாஸ்ட்டெல கிராஃப்,15அக்டோபர்,2013,

http://www.belfasttelegraph.co.uk/news/local&national/northern&ireland/top&psni&men&advised&forces&of&bloody&srilankan&regime&29659207.html (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

8 FSC 382/1, 'இலங்கை காவல்துறை அதிகாரிகளுக்கான வெளி நாட்டுப்பயிற்சி', 15 ஏப்ரல் 1983, லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் பீல் மையத்திற்கு எழுதியகடிதம், இங்கிலாந்து காவல் பயிற்சிக் கல்லூரி

9 FSC 382/1, 'இலங்கைக் காவல்துறைப் பயிற்சி', 3 மே 1983, வெளிநாட்டுக் காவல்துறை ஆலோசகருக்கு தெற்காசிய துறையின் இரகசிய எஃப்.சி.ஓ கடிதம்.

10 உதாரணத்திற்கு, இங்கிலாந்து பாராளுமன்ற கீழவையின் 22 மே 1986 அன்றைய விவாதத்தை பார்க்கவும், ஹன்சார்டு தொகுதி 98 ]] 303&4 டபிள்யு, http://hansard.millbanksystems.com/writtenanswers/1986/may/22/srilankaS6CV0098P019860522CWA402 (அணுகிய நாள், ஜூன் 23, 2014)

11 இங்கிலாந்து தேசிய ஆய்வக காப்பகம், பி.ஆர்.ஈ.எம் 19/1395, 'இலங்கை: இராணுவ மற்றும் காவல்துறைப்பயிற்சி', 6 செப்டம்பர் 1984. இந்த இணைப்பில் காணலாம்.

http://www.jdslanka.org/images/artimg/newsfeatures/politicscurrentaffairs/peterrickertsletter.jpg (அணுகிய நாள், ஜூன் 21, 2014)

12 பி.ஆர்.ஈ.எம் 19/1395, 6 செப்டம்பர் 1984

13 சலாதின் இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்டு செயல்படும் ஒரு நிறுவனம், http://www.saladin&security.com/about&us.php (அணுகிய நாள், ஜூன் 21, 2014)

14 இங்கிலாந்து அரச இணையதளம் gov.uk, சர். பீட்டர் ரிக்கெட்ஸ் (Peter Ricketts) ஜி.சி.எம்.ஜி, ஜி.சி.வி.ஓ, https://www.gov.uk/government/people/peter&ricketts&&2 (அணுகிய நாள், ஜூன் 21, 2014)

15 இலங்கை காவல்துறை, சிறப்பு அதிரடிப்படையின் வரலாறு, http://www.police.lk/index.php/special&task&force (அணுகிய நாள், ஜூன் 21, 2014)

16 ஷமின்திரா ஃபெர்டினாண்டோ (Shamindra Ferdinando), பொட்டுவில் படுகொலைகளுக்கும் மர கடத்தல்காரர்களுக்கும் உள்ள தொடர்பை புலனாய்வு உறுதிசெய்தது, தி ஐலாண்ட், செப்டம்பர் 26, 2006,http://www.island.lk/2006/09/26/features3.html (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

17 சிறப்பு அதிரடிப்படை தியாகிகள் நாள் செய்தி, டெய்லிமிரர், செப்டம்பர் 1, 2006, http://archives.dailymirror.lk/2006/09/01/opinion/04.asp (அணுகிய நாள், ஜூன் 21, 2014)

18 டிம்ஸ்மித் (Tim Smith),'விருப்பமில்லாத கூலிப்படை' (சசெக்ஸ், திபுக்கில்டுலிட், 2002), பக்கம் 173

19 மாயன் விஜி (Mayan Vije), இலங்கையில் இராணுவ மயமாக்கல், தமிழ் தகவல் நடுவம், 1986

20 டி.சபாரத்னம் (T. Sabaratnam), 'பிரபாகரன்', அத்தியாயம் 24, தொகுதி 2, http://www.sangam.org/articles/view2/?uid=638 (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

21 ராபின் ஹார்ஸ்ஃபால் (Robin Horsfall), அச்சமூட்டும் மோதல் (லண்டன், கேசல் மிலிட்டரி பேப்பர் பேக்ஸ் பதிப்பகம், 2002), பக்கம் 221.

22 ஷமின்திரா ஃபெர்டினாண்டோ (Shamindra Ferdinando), முன்னாள் எஸ்.ஏ.எஸ் ஆட்களின் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனை களை இலங்கை விமானப்படை பெறுகிறது, திஐலாண்ட், ஏப்ரல்11,2013,

http://www.island.lk/index.php?pagecat=article&detailspage= article&detailscodetitle =7675 (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

23 சைக்காத் தத்தா (Saikat Datta), பிரிட்டனின் எஸ்.ஏ.எஸ் அதிகாரியின் இந்திய வருகையை இந்திய உளவுத்துறை ரா ஏற்பாடு செய்தது, ஹிந்துஸ்தான் டைம்ஸ், சனவரி 15, 2014, http://www.hindustantimes.com/india&news/operation&bluestar&raw&facilitated&britain&s&எஸ்.ஏ.எஸ்.&officer&s&india&visit/article1&1172981.aspx (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

24 ரோகன் குணரத்னா (Rohan Gunaratna), பாதுகாப்பு கருத்தரங்கு 2013, யூடியூப் இணையதள கானொலி 01:40https://www.youtube.com/watch?v=TykYCXSmb50 (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

25 பவர்பேஸ் (Powerbase), ரிச்சர்ட் கிளட்டர்பக், http://www.powerbase.info/index.php/RichardClutterbuck (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

# 3.விவேகத்துடனும் மேலும் தீர்க்கமான அறிவுடனும் போருக்கு செல்லல் (1990 - 2002)

விடுதலைப்புலிகளுடனான போர் உக்கிரமடைந்திருந்த 1990- களில், பிரிட்டன் - இலங்கை இராணுவ உறவுகள் தொய்வின்றி தொடர்ந் தன. ராயல் யுனைடட் சர்வீசஸ் நிறுவன (RUSI - Royal United Services Institute) பத்திரிகை கட்டுரை ஒன்றின்படி, சலாதின் செக்யூரிட்டி என்று பெயர் மாற்றப்பட்ட கே.எம்.எஸ் நிறுவனமும் இலங்கையில் பணியாற் றியதாகத் தெரிகிறது. 2000- ஆம் ஆண்டில் வெளிவந்த அந்த கட்டுரை யின்படி, ''கே.எம்.எஸ் பன்னாட்டு ஒப்பந்தங்களை மேற்கொண்டிருந்த வேளையில், ஆரம்பத்தில் சலாதின் (Saladin) உள்நாட்டு ஒப்பந்தங்களில் மட்டுமே பணியாற்றி வந்தது. ஆனாலும் 1990-களின் தொடக்கத்தில் கே.எம்.எஸ் நிறுவனத்தின் முடிவுக்குப் பிறகு சலாதின் பன்னாட்டள விலும் இயங்கி வந்தது. (இலங்கை மற்றும் மத்திய கிழக்கு ஆகிய இரண்டு பகுதிகளையும் மேற்கோள்காட்டி)[1] RUSI என்பது பிரிட்டிஷ் இராணுவத்தோடு நெருங்கிய தொடர்புகள் உள்ள பாதுகாப்பு குறித்த சிந்தனைக்களமாகும்'' என்று அறிய முடிகிறது.



*பிரிட்டிஷ் தயாரிப்பான இலங்கை இராணுவ வாகனத்தின் முன் நிற்கும் சிவராம்*

2007-ஆம் ஆண்டு கனடா நாட்டுப் பாராளுமன்றத்தில் நடந்த விவாதம் ஒன்றின்போது, 1998-இல்[2] ஆயுத வியாபரத்திற்கு எதிரான பரப்புரை இயக்கமானது (Campaign against Arms Trade) வெளியுறவிற்கான பாராளுமன்றத் தேர்வுக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலும் இதே குற்றச்சாட்டு இடம் பெற்றிருந்தது. அதே 2007-ஆம் ஆண்டு[3] இந்த குற்றச்சாட்டு ஸ்ட்ரெடஜீஸ் ஸ்டடீஸ் நிறுவனத்தாலும் (Strategic Studies Institute) முன்வைக்கப்பட்டிருந்தது.

பிரிட்டிஷ் தனியார் நிறுவனங்களின் உதவிகளோடு இங்கிலாந்து அரசாங்கமும் நேரடியாகவே இதில் ஈடுபட்டிருந்தது. காலஞ்சென்ற தமிழ்ப் பத்திரிக்கையாளர் சிவராமனை பொருத்தவரை, ''1997 வரை இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரிகள் இங்கிலாந்தில் பயிற்சிப் பெற்றனர்'' என்று திட்டவட்டமாக நம்புகிறார். தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான போரின் மேல் என்னவகை யான தாக்கங்களை இது ஏற்படுத்தியிருக்கும் என்பதை சிவ ராமன் நன்கு அறிந்திருந்தார். ''பிரிட்டிஷாரும், அமெரிக்க ரும்[4] கெரில்லா போர் எதிர்ப்பு நடவடிக்கைகளை பரிசோதித் துப் பார்க்கும் சோதனைச் சாலையாக இலங்கை மாறி விட்டதென்று தான் உணர்வதாக'' அவர் கூறினார். தனது வாழ்க்கை வரலாற்றை எழு திய ஆசிரியருடனான ஒரு உரையாடலில் சிவராம், ''கிளர்ச்சியாளர்களை ஒடுக்குவதற்கான நவீன வடிவம் என்பது, மலேசியாவில் பிரிட்டன் நிகழ்த்திய

வெற்றிகரமான கிளர்ச்சி எதிர்ப்பு போரிலும், இரண்டாம் உலகப் போருக்கு பிறகான பிரிட்டனின் பிற காலனியப் போர்களிலும் இருந்து தொடங்கியிருக் கலாம் என தனக்குத் தோன்றுவதாக'' கூறுகிறார். உண்மையாகவே இதன் உணர்வுப்பூர்வமான வரலாற்றைத் தெரிந்து கொள்ள பிரிட்டிஷ் இராணு வத்தின் கிளர்ச்சி எதிர்ப்புத் தளபதியான ஃப்ராங்க் கிட்சன் (Frank Kitson)-இன் எழுத்துக்களைப் படிக்குமாறு சிவராம் வலியுறுத்தினார். 1953 - 55 கென்யாவிலும், 1957

*இலங்கை ராணுவத் தலைமை மற்றும்படையினர் கல்லூரி யின் உள்சுற்றுப் பத்திரிக் கையான தி ஒவ்லெட், 1998 இதழில் வெளிவந்த ஒரு புகைப் படம்.(புகைப்படத்தில் இங்கிலாந்தின் குறுகிய கால பயிற்சிக் குழுவினர் இடம் பெற்றுள்ளனர்.*




மலேயாவிலும், 1962 - 64 சிப்ரசிலும், 1970 - 72 வடக்கு அயர்லாந்திலும்[5] தனது திறன்களைப் பட்டை தீட்டி யவர் ஃப்ரங்க் கிட்சன்.

கிட்சன் கென்யாவில் இயன் ஹெண்டெர்சன்னுடன் (Ian Henderson) பணியாற்றியவர். மௌ மௌக்களை வெற்றி கொண்டதைப் பற்றி 'குழுக்களும் எதிர் குழுக்களும்' (Gangs and Counter gangs) என்று கிட்சன் புத்தகம் எழுதியுள்ளார். இந்த புத்தகம் 1971-ஆம் ஆண்டு ஜெ. வி.பி எழுச்சியின்போது[6] இலங்கை பாதுகாப்பு (1972-இல்தான் இலங்கை என்று பெயர்மாற்றம் நடந்தது) அதிகாரிகளுக்குப் படிப்ப தற்காக நெரோபியிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தால் அனுப்பப்பட்ட விபரம் அவர்களின் புத்தகப் பட்டியலில் இடம் பெற்றிருந்தது.

சிவராம் 1995-க்கு பிறகு, தனிப்பட்ட முறையில் தனது அனுபவ மாகக் கூறுவதைப் பார்ப்போம்- ''அரசு கிளர்ச்சியை அடக்குவது பற்றிய விரிவான பார்வையையும் புரிதலையும் வளர்த்துக்கொள்ளத் தொடங்கி னேன். எனது நல்லநேரம், மது அருந்துவதில் பழக்கமாகி நண்பராகி விட்ட கொழும்புவில் இருந்த பாதுகாப்பு உயரதிகாரி இந்த விடயங்களில் நிபுணத்துவம் வாய்ந்தவராய் இருந்தார்.




*இயக்குனர் குழு*

அவருக்கு அயர்லாந்திலும் ஓமனிலும் பழுத்த அனுபவம் கிடைத்திருந்தது. நவீன எதிர் கிளர்ச்சி நுட்பங்களின் தந்தையான ஃப்ரங்க் கிட்சனின் சீடர் இவர் என்பது மிக முக்கியமான செய்தியாகும்[7].''

இலங்கை அதிகாரிகளுக்கான பயிற்சிகளை இங்கிலாந்து 1997-இல் முடித்துக் கொண்டதாக சிவராமின் சுயசரிதையில் குறிப்பிட்டி ருந்தாலும், உண்மையில் அதே ஆண்டு 'இராணுவத் தலைமை மற்றும் படையினர் கல்லூரி' (ACSC - Army Command  Staff College) என்ற ஒரு புதிய இராணுவப் பயிற்சிப் பள்ளியை இலங்கை தொடங்குவதற்கு பிரிட்டன்தான் காரணமாக இருந்தது. ( தற்போது அது இராணுவச் சேவைகள் தலைமை மற்றும் படையினர் கல்லூரி - Defense Services Command and Staff College என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது.)  விவேகத்துடனும் மேலும் தீர்க்கமான அறிவுடனும் போருக்கு செல்லல் என்பது அந்தக் கல்லூரியின் அறிவிக்கப்பட்ட தாரகமந்திரமாகும்.

அந்தக் கல்லூரியின் மாணவர்களுக்கான தனிச்சுற்று இதழ் தி ஒவ்லெட் (The Owlet) என்பதாகும். இதன் 1998-ஆம் ஆண்டு வெளியீட் டில், இந்த பயிற்சி நிறுவனத்தை அமைத்ததில் பிரிட்டன் ஆற்றிய முக்கிய பங்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த சஞ்சிகை செய்தியின் படி, அக்கல்லூரியை அமைப்பதற்காக 1997-இல் இங்கிலாந்து ஒரு 'குறுகிய கால பயிற்சி குழு'வை (Short Term Training Team-STTT) வழி மொழிந்திருந்தது. லெப்.கர்னல் சி.ஆர்.எஃப். கிறிஸ் ரைடர் (Chris Rider) மற்றும் லெப்.கர்னல் ஜி.எம் (GM - Geoft Moynan) ஆகிய இரு பிரிட்டிஷ் அதிகாரிகள்




முதல் அணி மாணவர்கள் ( 1997 - 1998) பிரிட்டிஷ் கர்னல் பீல்டு பின்னால் இருப்பவர் கமல் குணரத்னே, தி ஒவ்லெட் பத்திரிக்கை புகைப்படம்

இந்த முயற்சியில் தீர்மா னகரமான பாத்திரத்தை ஆற்றினார் கள் என்பது தெரிய வருகிறது.

அந்த ''கல்லூரியின் தளபதி இவ்வாறு சொன்னார்: பாடத் திட்டத்தை அளித்த பிரிட்டிஷ் இராணுவத்தின் பெருந்தன்மையும், கல்லூரியின் உருவாக்கத்தில் பங்கு பெற்ற அவர்களின் இரு உயரதிகாரிகளுடைய சேவையும்,இன்னமும் கூடுதலாக இந்த வரலாற்று முக்கியத் துவமுடைய லட்சிய முயற்சியைதீவிரமாக ஆதரிப் பதற்காக ஒரு பயிற்சி ஆலோ சகரை நியமித்ததும் மனதார பாராட்டத்தக்கதாகும்.''

அதன் பின்னர் கேணல் ஜான் எஸ். ஃபில்டு (John S Field CBE) என்ற ஒரு பிரிட்டிஷ் இராணுவ அதிகாரியை 1997 - 1998-இல் இராணுவ பயிற்சி ஆலோசகராக அந்த கல்லூரியில் நிரந்தரமாக இணைத்தனர்[8].



இளம்லெப்டினன்ட் கர்னல் கமல் குணரத்னே

கேணல் ஃபில்டு (இராணுவ பயிற்சி) கல்லூரியில் வகித்த பதவி

எவ்வளவு மூத்த பதவி என்பதைக் கல்லூரி சஞ்சிகையில் வெளிந்த புகைப்படங்கள் நமக்குத் தெளிவாக காட்டுகின்றன. பாடத்திட்டம் பிரிட்டிஷ் முறையை அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆயுத படைகளின் அனைத்துப் பிரிவுகளிலும் உள்ள மூத்த அதிகாரிகளுக்காக வடிவமைக்கப்பட்டிருந்தது. இலங்கையின் சூழலுக்குத் தகுந்தபடி கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகள் உருவாக்கப்பட வேண்டும் என்பதுதான் கேணல் ஃபில்டின் பதவிக்காலத்தில் பிரதான அம்சமாக




*வன்னி பெருநிலத்தை காட்டும் வடக்கு இலங்கையின் வரைபடம். அழுத்தமான கோடு*

இருந்தது. அந்த சஞ்சிகை மூன்றாம் பருவத்து பாடத்திட்டத்தை இப்படி விளக்கியிருந்தது:

‘‘தொடங்கியவுடன் மார்க்சிய, லெனினிய நூல்களை தொகுதி தொகுதியாக படித்துக்கொண்டே இருந்தோம். எங்களுடைய அடிப்படையே கெரில்லாப் போர் மற்றும் கிளர்ச்சிக்கான தத்துவங்களை எதிர்கொள்வதாகத்தான் இருந்தது. ஒரு வாரத்திற்குள்ளே மா சே துங், ஃபிடல் காஸ்ட்ரோ மற்றும் சே குவேரா போன்ற புரட்சியாளர்களெல்லாம் வகுப்பில் உடனிருக்கும் நண்பர்களைவிடப் பழக்கமானவர்களாக ஆகிவிட்டனர். இந்த பருவத்திற்கு மூன்று பயிற்சிகள் திட்டமிடப் பட்டன. ஆனால் முந்தைய பருவங்களைப் போலல்லாமல், அனைத்துப் பயிற்சிகளும் ACSC வளாகத்திற்குள்

நடத்தப்பட்டன. இந்தப் படைகளற்ற செயலுத்தி பயிற்சிகள் (Tactical Exercises Without Troops & TEWTS) நமது நாட்டில் நிலவும் தற் போதைய சூழலை அடிப்படையாகக் கொண்டதாகும். நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தில் எங்கள் அனைவருக்கும் முழுமுதல் அனுபவம் ஏற்கனவே கிடைத்திருந்ததால் எங்களுக்கு இந்தப் பயிற்சிகள் ஆர்வமூட்டுவதாகவும் மகிழ்வூட்டு வதாகவும் இருந்தது. இந்தப் பயிற்சிகளுக்கு 'மைத்தடங்கள்' (INK BLOT), 'வலுமிக்க சுத்தியல்' (SLEDGE HAMMER) மற்றும் 'தலைசிறந்த படை' (MAGNUM FORCE) என்று பெயரிடப் பட்டிருந்தது'' என்கிறது பத்திரிக்கை செய்தி,

1997 - 1998-இல் இந்த கல்லூரியிலிருந்து வெளிவந்த முதல் அணி மாணவர்களுள் ஒருவர் இளம் கமல் குணரத்னே. ''கல்லூரி சஞ்சிகையில் வெளியான புகைப்படம் ஒன்றில் பிரிட்டிஷ் கேணல் ஃபில்டுக்கு பின்னால் இவர் இருந்தார். 2009 போரின் இறுதிக்கட் டத்தில், மேஜர் ஜெனரல் கமல் குணரத்னேதான் கொலைக் களத்தின் மையப்பகுதியில் இருந்துள்ளார். தமிழ் பெண் பத்திரிக்கை யாளரான இசைப்பிரியாவைப்[9] படுகொலை செய்ததாகக் கூறப்படும் 53-ஆவது பிரிவின் கட்டளை தளபதியாக இருந்தார். விடுதலைப் புலிகளின் தலைவரின் மகன் பாலச்சந்திரனை சுட்டுக் கொன்றதை கமல் குணரத்னே நேரடியாக மேற்பார்வை செய்தார்'' என்று லங்கா நியூஸ் வெப் (LankaNewsWeb) மேலும் குற்றம் சாட்டுகிறது.

கேணல் பீல்டு கல்லூரியை விட்டு விலகியதும் அவருடைய பதவி இன்னொரு பிரிட்டிஷ் அதிகாரியால் நிரப்பப்பட்டதாக இலங்கையின் சண்டே டைம்ஸ் கூறுகிறது: ''பிரிட்டிஷ் இராணுவத்தை சேர்ந்த கேணல் ஜான் ஃபீல்டு ACSC-க்கான பிரிட்டிஷ் இராணுவப் பயிற்சி ஆலோசகராக (BMAT - British Military Advisor Training) நியமிக்கப் பட்டிருந்தார். அவர் கிளம்பியபிறகு, லெப்.கேணல். பிரையன் மார்ட்டின் (Brian Martin) பிரிட்டிஷ் இராணுவப் பயிற்சி தொடர்பு அதிகாரியாக (BATLO -British Army Training Liason Officer) நியமிக்கப்பட்டார். அவர் விரைவில் கல்லூரி வளாகத்திற்குள் குடிவர உள்ளார்[10]'' என்பது அப்பத்திரிகையின் செய்தியாகும்.

என்னால் நம்பகமான தரவாகச் சொல்ல முடியாவிட்டாலும், அந்தக் கல்லூரியின் விக்கிபீடியா இணையதளம், BALTO அதிகாரிகள் 2001-ஆம் ஆண்டுவரை இலங்கையில் நிலைகொண்டிருந்ததாகக் கூறுகிறது. ''பயிற்சிக் கல்லூரியை அமைத்ததிலும், குறிப்பாக பாடத்திட்டத்தையும், பயிற்சிக்குத் தேவையான புத்தகங்களை தயாரித்ததிலும், பிரிட்டிஷ் இராணுவத்திடம் இலங்கை இராணுவம் உதவி பெற்றது அதிர்ஷ்டவசமானது. ஆரம்ப ஆலோசனைகள் வழங்கவும் கற்றுக் கொடுக்கவும் ஒரு பிரிட்டிஷ் இராணுவக் கேணலோ அல்லது லெப்டி னன்ட் கேணலோ பயிற்சித்தொடர்பு அதிகாரியாக 1997 முதல் 2001 வரை நியமிக்கப்படுவது வாடிக்கையாயிருந்தது'' என்பது அந்த இணையத்தள செய்தியாகும்.

1997 மற்றும் 2001-க்கு இடையிலான காலம்தான் தமிழர்களின் போராட்டத்தில் அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் மிக முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டமாகும் என்பதை நாம் மறந்திருக்க முடியாது[11].

யாழ்பாணத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த இலங்கை அரசாங்கதின் வெற்றிகரமான இராணுவ தாக்குதல் நடவடிக் கைகளில் 1995-ஆம் ஆண்டு நடத்திய 'ரிவெரெசா' (சூரியகதிர் நடவடிக்கை - Operation Sunrays) முக்கியமான நடவடிக்கையாகும். அதை தொடர்ந்து, யாழ்ப்பாணத்தை இலங்கைத்தீவின் தெற்கு பகுதியோடு இணைக்கும் முதன்மைத் தரைவழி விநியோகப்பாதையை திறந்துவிட அரசு தீர்மானித்திருந்தது. ஆனையிறவையும், யாழ்குடா நாட்டின் நுழைவாயிலையும் உள்ளடக்கிய வடக்கு கிளிநொச்சி பகுதிகளை அரசு ஏற்கனவே தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. கூடவே வவுனியாவிற்கு தெற்கில் இருந்த பகுதிகளின் மேல் உள்ள தமது கட்டுப்பாட்டையும் தக்கவைத்திருந்தனர். 76 கி.மீ நீளமான ஏ-9 சாலையை கைப்பற்றி வவுனியாவையும் கிளிநொச்சியையும் இணைப் பது என்பதுதான் அவர்களது அடிப்படை நோக்கம். இது நடந்தால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளை இரண்டாகப் பிரித்து, புலிகளின் ஆற்றல்களை மோசமாகப் பலவீனப்படுத்தியிருக்கும். இந்தப் பாரிய போர் நடவடிக்கை (இது ஈழப்போர் வரலாற்றிலேயே, நீண்ட நாட்கள் நடந்த நடவடிக்கையாகவும் அறியப்படுகிறது) 1997 மே-யில் தொடங்கி 19 மாதங்கள் வரை நீடித்தது.

அப்போது தமது தெற்கு எல்லை நோக்கி முன்னேறி வரும் அரசப்படைகளை எதிர்த்து தமது நிலைகளைத் தக்கவைத்தபடியே, புலிகள் ஒரு மாபெரும் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டார்கள். செப்டம்பர் 1998-இல் தொடங்கப்பட்ட 'ஓயாத அலைகள் 2' என்று சங்கேத பெயரிடப்பட்டிருந்த அந்த நடவடிக்கையானது, தமது வடக்கு எல்லையில் இருந்து முன்னேறி, பலமாகப் பாதுகாக்கப் பட்டிருந்த கிளிநொச்சி இராணுவக் கோட்டையை கைப்பற்ற மேற்கொண்ட நடவடிக்கையாகும். புலிகளின் வழக்கமான இராணுவ வலிமையால் அரசாங்கம் தமது இராணுவ இலக்கை அடைய முடியாமல் பெரும் இழப்புகளை சந்திக்க நேர்ந்தது. நீண்ட நாட்களாய் நடந்து வந்த இராணுவ நடவடிக்கையை டிசம்பர் 1998-இல் இலங்கை இராணுவம் திரும்பப்பெற வேண்டியதாயிற்று. அதற்கு பதிலாக 'ரிவிரிசா' நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட குறைந்தபட்ச பகுதிகளை ஒருங்கிணைப்பதற்கு அரசு தமது முழு முயற்சியையும் செல விட்டது. ஆனால், அரசப்படைகள் தாம் மேற்கொண்ட நடவடிக்கை களிலேயே நீண்ட நடவடிக்கை மூலம் கைப்பற்றிய பகுதிகள் அனைத் தையும் புலிகள் ஓயாத அலைகள் 3 என்று சங்கேத பெயரிடப்பட்ட தங்களது ஆகப்பெரும் நடவடிக்கை மூலம் (நவம்பர் 1999-இல்) நான்கே நாட்களுக்குள் மீட்டு வெற்றி கொண்டனர்.

இப்போது, இராணுவப் பலத்தில் சந்தேகமின்றி தங்களது கை ஓங்கியிருந்த நிலையிலும் விடுதலைப்புலிகள் நவம்பர் 1999-இல் பேச்சுவார்த்தைக்கான தமது அழைப்பைப் புதுப்பித்தனர். பெரும் செலவிலான இராணுவப்பாதையை முன்னெடுப்பதை நிறுத்துமாறு அரசை வலியுறுத்தினர்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது நவம்பர் மாத மாவீரர் நாள் உரையில் இவ்வாறு பேசினார்:

''ஆட்பலம், ஆயுதபலம், இராணுவபலம், மக்கள் பலம் என்ற ரீதியில் சகல பலத்தோடும் நாம் வலுப்பெற்று நின்றபோதிலும்; எமது தாயகத்தை மீட்டெடுக்கும் போதிய சக்தி எம்மிடம் இருந்தபோதிலும் நாம் சமாதானப்பாதையைக் கைவிடவில்லை. உயிரிழப்பையும், இரத்தக்களரியையும் தவிர்த்துச் சமாதான வழியில் நாகரீகமான முறையில் தமிழரின் சிக்கலைத் தீர்க்கவே நாம் விரும்புகிறோம். சமாதானப் பேச்சுக்கள் ஒரு சமாதான நல்லெண்ணப் புறநிலையில் மூன்றாம் தரப்பு சர்வதேச மத்தியத்துவத்துடன் நடைபெற வேண்டும் என்பதையே நாம் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம்.''

பாரம்பரியமாய் தமிழர்களின் அரசியல் தலைமையைப் பிரதிநி தித்துவப்படுத்தும் தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் பாராளுமன்றக்குழுத் தலைவர் நவம்பர் 29-இல் ஆற்றிய உரை ஒன்றில், ''புலிகளின் சமாதான அழைப்பை ஏற்றுக்கொள்ளுமாறும் சமாதான பேச்சுவார்த்தை களைத் தொடங்குமாறும் அரசாங்கத்திற்கு'' முறையீடு செய்தார். ஆனால், அதற்கு எந்தப் பலனும் கிடைக்கவில்லை.

1999 டிசம்பர்-இல், ஆனையிறவு ஆதாரதளத்தின் தெற்கு பாதுகாப்பு எல்லையாயிருந்த வடக்கு கிளிநொச்சியில் இருந்த பரந்தன் பகுதியை விடுதலைப்புலிகள் வெற்றிகரமாக கைப்பற்றினர். இதனால் யாழ்ப்பாணத்தின் மீதான தனது பிடியைப் பாதுகாத்துக்கொள்ள இலங்கை இராணுவத்திற்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்த ஆனையிறவு இராணுவத்தளத்தின் பாதுகாப்பும் கடும் அச்சுறுத்தலுக்கு ஆளானது. இது இராணுவ வட்டாரத்தை பெரும் கவலைக்குள்ளாக் கியது. வன்னி பெருநிலம் முழுவதும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த பிறகு, யாழ்ப்பாணம் நோக்கி அணிவகுத்து வந்த புலிப்படையிடம் (அந்தப் பகுதியை பார்வையிட வந்திருந்த ஒரு அமெரிக்க இராணுவ அதிகாரியால் 'வெல்லப்பட முடியாத இராணுவ தளமாக' விவரிக்கப்பட்டது -சிவராம் கூற்றுப்படி), ஆனையிறவு இராணுவ தளம் ஏப்ரல் 2000-இல் வீழ்ந்தது. இந்த மோசமான இராணுவ பின்னடைவு இந்திய இராணுவ உதவியை நாடும்படி அரசை நிர்பந்தித்தது. அதோடு, (1991-க்கு பிறகு முறிந்து போயிருந்த) இஸ்ரேலு டனான இராஜதந்திர உறவுகளையும் மீண்டும் உடனடியாக புதுப்பித்துக் கொள்ளவும் நிர்ப்பந்தித்தது. அரசாங்கத்தின் இராணுவ ஆற்றல்களை தக்கவைத்துக் கொள்ள இது போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இருந்தபோதிலும், யாழ்குடா நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான சாவகச்சேரி மே 2000-இன் மத்தியில் புலிகளின் கையில் வீழ்ந்தது. மேலும் வடக்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த புலிகள் யாழ்ப்பாணத்தில் சிக்கியிருந்த இராணுவத்திற்குத் தெளிவான அச்சுறுத்தலாய் மாறியிருந்தனர்.

வடக்குப் பகுதியில் போர்ச் சூழலில் ஏற்பட்ட இம்மாற்றம்தான் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் நார்வேயின் முயற்சி களுக்கு அடிப்படையாயிருந்தது. அப்போது விடுதலைப்புலிகள் அடுத்த டுத்து வெற்றிகளையே பெற்றுக்கொண்டிருந்தபோதிலும் நவம்பர் 2000- இல், தமது சமாதான அழைப்பைப் புதுப்பித்து 24 டிசம்பர் 2000-இல் தாமே முன்வந்து போர் நிறுத்தத்தை அறிவித்தனர்.

21 டிசம்பர் 2000-இல் வெளியான புலிகளின் அறிக்கை இவ்வாறு குறிப்பிட்டிருந்தது:


*பேராசிரியர் பால் வில்கின்சன்*

''நமது இந்த ஒருதலைபட்சமான போர் நிறுத்தத்திற்கு இலங்கை அரசு சாதகமாகப் பதிலளிக்கும் என்ற நம்பிக்கையிலும் கிறிஸ்துமஸ், புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகை காலத்தில் சமாதனத்தை கடைபி டிக்குமாறு தமது இராணுவத்திற்கு அறிவுறுத்தவும் செய்யும் என்ற நம்பிக் கையிலும் இதை அறிவிக்கிறோம். போர் நிறுத்தத்திற்கான எமது முடிவை நல்லெண்ண நடவடிக்கையை வெளிப்படுத்தும் சமாதானத்திலும், பேச்சுவார்த்தையின் மூலமான அரசியல் தீர்வு காணுவதிலும் எமக்குள்ள உண்மையான விருப்பத்தின் வெளிப் பாடாகவே இதைப் பார்க்கவேண்டும். ஆயுத மோதல்களைத் தவிர்த்து இயல்பு நிலைத் திரும்புவதற்கானச் சூழலை உருவாக்குவதற்கு ஏதுவாக முன்முயற்சிகளை முன்னெடுக்கவும் செயல்படுத்தவும் இந்த அமைதிக் கான வாய்ப்பை நாம் வழங்குகிறோம்[12]'' என்றனர் புலிகள்.

பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் பீட்டர் ஹைன் (Peter Hain) முயற்சியில் டிசம்பர் 22, 2000-இல்[13] விடுதலைப்புலிகளின் ஒருதலைபட்சமான போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு வரவேற்கப்பட்டது.

எனினும், அதிபர் சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்காவால் வழிநடத்தப்பட்ட இலங்கை அரசானது, போர் நிறுத்த அழைப்பை நிராக ரித்து, டிசம்பர் 26, 2000-இல் ஒரு அறிக்கை வெளியிட்டது. அதில், ''இனச்சிக்கலுக்கு தீர்வு காண்பது போரை முடிவுக்கு கொண்டு வந்து நீடிக்கக்கூடிய அமைதியை ஏற்படுத்துவது போன்ற அடிப்படையான விவகாரங்கள் குறித்து விடுதலைப்புலிகளோடு பேசுவதற்கு அரசு தயாராக இருப்பதாக ஏற்கனவே தெளிவாக கூறியுள்ளது. எனவே மேலும் நல்லெண்ண அடிப்படையிலான செயல்பாடுகள் அவசியமில்லை என்று கருதுகிறது. பேச்சுவார்த்தைகள் இரு தரப்பிற்கும் திருப்திகரமாக நடை பெறுவதன் தொடர்ச்சியில்தான் போர் நிறுத்தம் சாத்தியம் என்று அரசாங்கம் கருதுகிறது. அமைதிக்கான இந்த வாய்ப்பை நேர்மையாக பயன்படுத்திக்கொள்ள விடுதலைப்புலிகளை இலங்கை அரசாங்கம் மீண்டும் கேட்டுக் கொள்கிறது. அதுவரை இராணுவ நடவடிக்கைகள் தொடரும்[14]'' என்று கூறப்பட்டது.


*கொழும்புவிற்கு வடக்கே 30 கி.மீ. தொலைவில் அமைந்திருந்த கட்டுநாயகா விமானதளத்தின் மேல் நடந்த அதிகாலை தாக்குதலில், 2 கே:பிர் ஜெட் போர் விமானங்கள், ஒரு எம்.ஐ. 24 துப்பாக்கி தாங்கும் உலங்கு வானூர்தி மற்றும் ஒரு எம்.ஐ. ஜி.27 ஜெட் போர் விமானம் உள்ளிட்ட 13 விமானங்கள் அழிக்கப்பட்டன. 3 இராணுவ பயிற்சி விமானங்களும் 5 பொதுமக்கள் பயன்பாட்டிற்கான ஜெட் விமானங்களும் அழிக்கப்பட்ட விமானங் களில் அடங்கும்.*

போர் நிறுத்த அறிவிப்பை இலங்கை அரசாங்கம் தொடர்ச்சியாக நிராகரித்து வந்த போதிலும்,

புலிகள் தங்களது போர் நிறுத்தத்தை ஏப்ரல் 2001 வரை நீட்டித்தனர். இருந்தபோதிலும், 28 பிப்ரவரி 2001 அன்று பிரிட்டனின் உள்துறை செயலாளர் ஜாக் ஸ்ட்ரா (Jack Straw), ''புதிய பயங்கரவாத சட்டங்களின்படி தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் விடுதலைப்புலிகள் அமைப்பும் சேர்க்கப்படும் என்றும், அவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தாம் நம்புவதாகவும்[15]'' அறிவித்தார்.



சர்.டிம் ஸ்பைசர், ஓ.பி.ஈ

பீட்டர் ஹென் (புலிகளின் போர் நிறுத்தத்தை ஆதரித்தார்) மற்றும் ஜாக் ஸ்ட்ரா (புலிகள் மீது தடையை கொண்டு வர காரணமா யிருந்தார்) ஆகியோர் ஒருமாத இடைவெளியில் முரண்பட்ட அறிக்கை களை வெளியிட்டதானது இங்கிலாந்தின் வெளிநாடு மற்றும் காமன்வெல்த் அலுவலகத்தின் (UK - Foreign Common wealth Office) போலித்தனமான நடவடிக்கைகளை வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. நார்வே மற்றும் ஜெர்மனியின் மத்தியஸ்தத்தின் பின்னனியில் சமாதானத் திற்கான பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த அதேவேளையில், விடுதலைப்புலிகளை நடைமுறையில் பலவீனப்படுத்துவதற்கான நடவ டிக்கைகளை பிரிட்டன் மேற்கொண்டது என்பதைத்தான் இது காட்டு கிறது.

விடுதலைப்புலிகளின் சார்பில் பேச்சுவார்த்தகளுக்கு தலைமை தாங்கிய ஆண்டன் பாலசிங்கம், தங்கள் மீதான தடை குறித்து இவ்வாறு சொன்னார்:

''கடந்த 25 ஆண்டுகளாக எமது மக்களின் அரசியல் உரிமைக ளுக்காக போராடிக்கொண்டிருக்கும், இலங்கைத்தீவிலுள்ள தமிழர்களின் உண்மையான பிரதிநிதியான எமது விடுதலை இயக்கத்தை, பிரிட்டனில் தடை செய்யப்பட்ட அமைப்புகளின் பட்டியலில் சேர்த்திருப்பது வருந்தத்தக்கது. பிரிட்டன் - தமிழர் உறவில் இது ஒரு சோகமான நாள். தடை முன்மொழிவை எதிர்த்து ஒரே குரலில் பரப்புரை செய்த தமிழ் மக்கள் அனைவரும் பிரிட்டனின்



Appendix 1 to
Protective Security Assessment
Sri Lanka

TRIDENT TEAM COMPOSITION

1. TIM SPICER OBE: Lieutenant Colonel , 20 years in the British Army. Expertise includes counter terrorism and protective security. CEO of TRIDENT
2. JOHN FARR MBE: 34 years experience in UK Special Forces. Project leader
3. HARRY DITMUS CB: Former Director and Coordinator of Transport Security for UK government.
4. TONY DAVIDSON MBE: 34 years experience in UK Special Forces and security policy.
5. MIKE COLDRICK MBE GM DSA: EOD/IED expert- UK Armed Forces and the Metropolitan Police.
6. TOM LOCKHART QGM, QCVS: UK Special Forces surveillance and technical surveillance expert
7. ROBERT HESLOP MBE: 30 years experience in UK Special Forces.
8. MICHAEL FISH MBE: 35 years experience UK Special forces.
9. JOHN WILSON QGM: Maritime Special Forces and methods of entry (MOE) expert.
10. BRYAN HUTCHINSON: 20 years experience in UK Special Forces.
11. TREVOR WILSON: 20 Years experience in UK Special Forces.
12. MICHAEL PEARSON: UK Armed Forces and Civil Aviation Security.
13. PHILIP SUGDEN: British Airports Authority and airline security.
14. RICHARD GARNER: Former head of British Airways overseas security.
15. MICHAEL SMITH: Civil Aviation Security and management.
16. GRAHAM WILSON: Professional photographer.

ஸ்பைசரின் குழுவினரைக் குறிக்கும் தொலைநகல்

இந்த முடிவால் கடும் ஏமாற்றத்திற்கு ஆளாவர். இந்தத் தடை தமிழர்களின் நலன்களை மோசமான பாதிப்புக்கு உள்ளாக்குவதோடு, தற்போதைய சமாதான முன்முயற்சிகளையும் கடுமையாக பாதிக்கும். மேலும், பிரிட்டனின் இந்த முடிவானது, அடக்கு முறையை அடிப்படையாகக் கொண்ட இலங்கை ஆட்சியை மேலும் சமரசமற்றதாகவும், சளைக்காமல் அரச வன்முறை, பயங்கரவாதம் மற்றும் போர் என்ற இராணுவப்பாதையை முன்னெடுக்கவும் ஊக்கமளிக்கும்[16]'' என்றார் அவர்.

விடுதலைப்புலிகள் மீதான பிரிட்டனின் தடையை இலங்கை ஆர்வத்துடன் எதிர்கொண்டது. அது சந்திரிகா குமாரத்துங்கா அரசுக்கு ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கான நேரத்தையும் கொடுத்தது. மார்ச் 2001-இல் இந்தியப் பத்திரிக்கையான 'ஃபிரன்ட்லைன்'க்கு வழங்கிய நேர்காணலில் சந்திரிகா இப்படிக் கூறினார்: ''விடுதலைப்புலிகளுக்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்காதவரை அவர்கள் சமாதனத்தில் ஆர்வம் காட்டமாட்டார்கள். ஏனென்றால் விடுதலைப்புலிகளுக்கு சமாதானத்தில் நம்பிக்கை இல்லை. அவர்கள் (இங்கிலாந்து) விடுதலைப் புலிகளை தடைசெய்ய வேண்டும் என நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கி றோம். ஏனென்றால் தற்போது பிரிட்டிஷ் மண்ணில் இருந்து இயங்கிக் கொண்டிருக்கும் புலிகள் அமைப்பு மிகப்பெரும் பயங்கரவாத அமைப்பாகும். பிரிட்டன் இயற்றிய புதிய சட்டமானது தடையை செயல் படுத்தும் வாய்ப்பை திட்டவட்டமாக வழங்கும்[17]'' என்று நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

பயங்கரவாத சட்டம் 2000 என்ற ஒரு வெற்று சட்டத்தின் மூலம், தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளுக்கான பட்டியலில் விடுதலைப்புலிகளை சேர்க்க பிரிட்டன் முடிவு செய்திருந்த வேளையில் இலங்கையில் கூட அவ்வியக்கம் தடை செய்யப்பட்டிருக்கவில்லை. 2001-இன் தொடக்கத்தில் (செப் 11-க்கு முன்பு), வேறு இருபது பயங்கர வாத அமைப்புளோடு சேர்த்து விடுதலைப்புலிகளையும் பிரிட்டன் தடை செய்திருந்தது. அந்த சட்டம் பன்னாட்டு ஆயுதக்குழுக்கள் சிலவற்றை விடுத்து, சிலவற்றை மட்டும் ஏன் தடை செய்தது என்பது இன்றும் கூட மர்மமாகவே உள்ளது.

இந்த சட்டத்தால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி விரிவான ஆய்வுகளை, இங்கிலாந்தை அடிப் படையாகக் கொண்டு இயங்கும் ''சமூகங்களை குற்றவாளிகளாக்கு வதற்கு எதிரான பரப்புரை இயக்கம் (CAMPACC - Campaign Against Criminalizing Communities)" என்ற அமைப்பு மேற்கொண்டது. அவ்வமைப்பு தனது ஆய்வில் அரசாங்கத்தின் நிபுணத்துவம் வாய்ந்த சிறப்பு ஆலோசகரான வில்கின்சன்- பயங்கரவாத அமைப் புகள் ஒவ்வொன்றும் சர்வதேச அளவில் கருத்தியல் ரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ, இராஜதந்திர ரீதியாகவோ தங்களுக்கான ஆதரவைப் பெற முயற்சித்த வண்ணம் இருக்கும் என எச்சரித்து இருக்கிறார். வில்கின்சன் சமீபத்தில் (புரூஸ் ஹோஃப்மேன் - Bruce Hoffman உடன்சேர்ந்து) 'பயங்கரவாதம் மற்றும் அரசியல் வன்முறை குறித்த ஆய்வு நடுவத்தை புனித ஆண்டுரூஸ் பல்கலைக்கழகத்தில் உருவாக்கியிருக்கிறார்.

அதோடு இந்த வேளையில், பயங்கரவாத 'நிபுணராக' மாறியிருந்த முன்னாள் இலங்கை அரசு ஊழியரான ரோகன் குணரத்ணா தனது முனைவர் பட்டத்திற்கான ஆய்வை புனித ஆண்டுரூஸ் பல்கலைக் கழகத்தில்தான் முடித்திருந்தார். ரோகன் குணரத்னாவின் 1996 - 1999 வரை மேற்கொள்ளப்பட்ட முனைவர் ஆய்வு, இங்கிலாந்து வெளியுறவு அலுவலகத்தின் உதவித்தொகை மற்றும் விருதுகள் திட்டத்தின் (The UK Foreign Office's Scholarships and Awards Scheme) கீழ்தான் நடந்தது. அவர் பிரிட்டிஷ் எப்.சி.ஓ இன் நிதியுதவி பெற்ற ஷேவனிங் கல்வித் திட்டத்தின் கீழ் படித்தார். அவரது முனைவர் பட்டம் புரூஸ் ஹோஃப்மேனால் மேற்பார்வை செய்யப்பட்டது. அவர் முனைவர் பட்டத்தை பெற்ற பிறகு பல்கலைக்கழகத்தின் பயங்கரவாதம் மற்றும் அரசியல் வன்முறை ஆய்வு நடுவத்தின் உறுப்பினரானார்[18] என்பதை'' பதிவுசெய்தது. CAMPACC -இன் கூற்றுப்படி, தடையை நிறைவேற்றும் பணியில் இங்கிலாந்தில் உள்ள தமிழ் மக்களிடமும், விடுதலைப் புலிகளிடமும் தகவல்களை சேகரித்தபடி குணரத்னாவும், வில்கின்சனும் இணைந்து பணியாற்றியுள்ளனர் என்பதும்; புனித ஆண்டுரூஸ் பல்கலைக் கழகத்திற்காக ஆய்வுப்பணிகளை செய்வதாக சொல்லி, குணரத்ணா பல்வேறு தமிழ் அமைப்புகளின் அலுவலகங்களுக்கு அடிக்கடி போயுள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

பிரிட்டனின் தடை நிறைவேற்றப்பட்ட கொஞ்ச நாட்களிலேயே, விடுதலைப்புலிகள் ஒருதலைப்பட்சமாக போர்நிறுத்தம் செய்திருந்த காலத்திலேயே ஆனையிறவை மீண்டும் கைப்பற்றும் நோக்கோடு இலங்கை அரசப்படைகள் புதிய தாக்குதலைத் தொடங்கினர். ஆனால் அரசாங்கத்தின்

அனைத்து முயற்சிகளையும் சில நாட்களிலேயே புலிகளின் கடுமை யான எதிர்தாக்கு தலால் வெற்றிகர மாக முறியடிக்கப் பட்டன.

ஜூலை 24, 2001- இல் விடுதலைப் புலிகள் கொழும்பு விலுள்ள பண்டார நாயகசர்வதேச விமா னதளத்தின் மீது ஒரு ஆற்றல் வாய்ந்த தாக்குதலை நடத்தினர்.அந்த தாக்குதலில் இலங்கை விமா னப் படையின் மூன் றில் ஒரு பகுதி விமானங்களும், பொது மக்கள் சேவை விமா னங்களில் பாதியும் அழிக்கப்பட்டன. இந்த தாக்குதலால் இலங்கையின் அனைத்து வணிக நடவடிக்கைகளுக்கான காப்பீட்டு தொகையையும் பெரிய அளவுக்கு உயர்த்த வேண்டியதாயிற்று. இதன் காரணமாகவே ஒருவேளை இலங்கை அரசு போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டிருக்கலாம். இந்த நேரத்திலும் பிரிட்டன் இலங்கைக்கு மீண்டும் ஒரு இராணுவ மாற்று வழியை வழங்கியது. கூடவே விடுதலைப்புலிகளின் எதிர்கால தாக்குதல்களில் இருந்து காத்துக்கொள்ளவும், துறைமுகங்களின் பாதுகாப்பை அதிகப் படுத்தவுமான திட்டமொன்றில் லண்டனின் லாயிட்ஸ் (Lloyd's) காப்பீடு முகவர்கள் இலங்கை அதிகாரிகளுடன் உடன்பட்டனர். இலங்கை அரசாங்கம், பிரிட்டிஷ் முன்னாள் சிறப்புப்படையின் வீரர்கள் அடங்கிய ஒரு குழுவை (Crack Team) இலங்கைத்தீவின் முக்கிய வர்த்தக மையங்களை (கொழும்பு, திருகோணமலைத் மற்றும் காலி[19]) பார்வையிட அனுமதித்தது. அரச கைக்கூலிகளில் பேர்பெற்ற டிம் ஸ்பைசர் (Tim Spicer) தலைமையில் அக்குழு இயங்கியது. இப்படியாக விடுதலைப் புலிகளின் தாக்குதலால் ஏற்பட்ட தீவிர பொருளாதார அழுத்தம் பிரிட்டனால் மட்டுப்படுத்தப்பட்டது.

இந்த நிகழ்வுகள் பற்றி எழுதிய மூத்த செய்தியாளரான டங்கன் காம்பெல் (Duncan Campell) இவ்வாறு கருத்துதெரிவித்தார்:

''ஸ்பைசரையும் மற்றும் ஒரு தொழில்முறை புகைப்பட கலைஞரையும் தவிர 15 பேர்கள் இக்குழுவில் இருந்தனர். சிப்பாய்கள் பட்டியலில் இருந்தவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஓய்வு பெற்ற பிரிட்டிஷ் சிறப்புப்படைகள் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் ஆவர். அவர்களில் மிக முக்கியமானவர் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் 'போக்கு வரத்து பாதுகாப்பின் முன்னாள் ஒருங்கிணைப்பாளராக' விவரிக்கப்படும் ஹாரி டிட்மஸ் (Harry Ditmus). முழுமையான விவரங்களை ஆராய்ந் தால் இவர் 'ஹால்' டொய்னே - டிட்மஸ் ('Hal' Doyne - Ditmus) என்ற பெயருடையவர் என்பதையும்; CB (Commander of the Bath) எனப்படும் பிரிட்டனின் தீவிர இரகசிய உள்நாட்டு பாதுகாப்புச் சேவை மையமான எம்.ஐ-5-இன்ஒரு மூத்த உளவுத்துறை அதிகாரி என்பதையும் நாம் அறியலாம். எம்.ஐ-5-இன் உதவி இயக்குனராக பணியாற்றியபிறகு, Doyne - Ditmus 1980-களின் மத்தியில் வடக்கு அயர்லாந்தில் உள்ள பெல்ஃபாஸ்டில் பணியமர்த்தப்பட்டார். ஐரிஷ்குடியரசு இராணுவத் துடனான இங்கிலாந்து அரசாங்கத்தின் 20 ஆண்டுகால போர் உச்சத்தில் இருந்தபோது இங்கிலாந்து அரசாங்க உளவுத்துறையின் இயக்குனர் மற்றும் ஒருங்கி ணைப்பாளராக பணியாற்ற அங்கு அமர்த்தப்பட்டார்'' என்கிறார் காம்பெல்.

இக்குழுவில் இருந்த இருவர் குறிப்பாக இரகசிய உளவுத்துறை ஆபரேட்டர்கள் என அடையாளம் காணப்பட்டனர். ஒருவர் ''ஊடுருவலுக்கான நிபுணத்துவம்'' பெற்ற ஜான் வில்சன் (John Wilson, QGM - Queen's Gallantry Medal) ஆவார். இன்னுமொருவர் ''இங்கிலாந்தின் சிறப்புப்படைகள் மற்றும் தொழில்நுட் பம் ஆகிய வற்றின் கண்காணிப்பு நிபுணர்'' - ஆன டாம் லொக்கார்ட் (Tom Lockhart, QGM, QCVS - Queens Commendation for Valuable Service) ஆவார். சிறப்புப் படையில் 30 ஆண்டுகளுக்கும் மேற்பட்டு சேவை யாற்றியதாக அணியில் இருந்த நால்வர் அறியப்பட்டனர்'' என்று மூத்த செய்தி யாளரான டங்கன் காம்பெல் (Duncan Campell) கூறுகிறார்.

அவர் மேலும்கூறு வதாவது;-''ஒரு காலத்தில் சிறப்புப் படை கிளப்பின் அலுவலராகவும் மிகவும் அலங்கரிக்கப்பட்ட இராணுவம் மற்றும் போலீஸ் வெடிகுண்டு அகற்றல் நிபுணராகவும் அறியப்பட்ட மைக்கொல்டிரிக்கும் (MikeColdrick) ஸ்பைசரின் குழுவில் இருந்தார். அது ஒருங்கிணைந்த பிரிட்டிஷ் உளவுத் துறை மற்றும் சிறப்புப்படை ஊழியர்களுக்கும் வீரர்களுக்குமான பிரத்தி யேக தனியார் கிளப் ஆகும்.

2002 தொடக்கம் முழுவதும் ஸ்பைசரின் குழுவினர் பாதுகாப்பு குறித்த மதிப்பீடு பணியைத் தொடர்ந்தனர். இந்த கட்டத்தில்தான் இலங்கை அரசு விடுதலைப்புலிகள் விடுத்த போர் நிறுத்தத்திற்கான அழைப்பை ஏற்றுக்கொண்டது. ஆனால் இந்த காலத்தில் இலங்கை அரசின் பலமும்

குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகப்படுத்தப்பட்டிருந்தது.

ஸ்பைசரின் பாதுகாப்பு ஆய்வு, விடுதலைப்புலிகளின் போர் நிறுத்தத்தை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்ட 2002-இன் முற்பகுதி யிலும் தொடர்ந்தது என்றாலும், இலங்கை அரசாங்கத்தின் கரத்தை பெரிதும் வலுப்படுத்துவதாகவே அந்த ஆய்வு இருந்தது'' என்பதுதான் டங்கன் காம்பெல்லின் கருத்து.

**குறிப்புகள்:**

1 கெவின் ஏ.ஓ. பிரைன் (Kevin A. O'Brien), தனியார் இராணுவ நிறுவனங்கள், கற்பனைகளும் கூலிப்படையினரும்: தனியார் இராணுவ நிறுவனங்கள் குறித்த விவாதமும்ஆர்.யூ.எஸ்.ஐ (RUSI & Royal United Services Institute) சஞ்சிகை, தொகுதி 145, இதழ் 1, (2000), இந்த இணைப்புகளில் அதன் ஒரு படியை காணலாம் https://web.archive.org/web/20030908191226/http://www.kcl.ac.uk/orgs/icsa/Old/pmcs.html (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

2 வெளிவிவகாரங்களுக்கான தேர்வுக்குழு, முதல்அறிக்கை, பின்னிணைப்பு 14, ஆயுத வியாபாரத்திற்கு எதிரான பரப்புரை இயக்கத்தால் சமர்ப்பிக்கப்பட்ட நினைவுக்குறிப்பு, சனவரி 1998,

http://www.publications.parliament.uk/pa/cm199899/cmselect/cmfaff/100/100ap15.htm (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

3 கனடா நாட்டு பாராளுமன்ற விவாதம், அக்டோபர் 25, 2007, http://www.parl.gc.ca/HousePublications/Publication.aspx?DocId=3085693Lan guage=EMode=1 (அணுகிய நாள், ஜூன் 22, 2014) மற்றும் டாக்டர். ஸ்டீவன் மெட்ஸ்(Steven Metz) இன்கட்டுரை, எழுச்சிகள் ஒரு மறுபார் வை,ஸ்டிரேட்டஜிக் ஸ்டடீஸ் இன்ஸ்டிட்டியூட், 2007, http://www.strategic studiesinstitute.army.mil/pubs/display.cfm?pubID=790

4 மார்க் வைட்டேக்கர் (Mark Whitaker), 'சிவராமிடம் இருந்து அரசியல் கற்றல்: இலங்கையில் ஒரு புரட்சிகர தமிழ்ப்பத்திரிக்கையாளரின் வாழ்வும் மரணமும்', (லண்டன், புளூட்டோபதிப்பகம், 2006) பக்கம் 134

5 வைட்டேக்கர், பக்கம் 135

6 16 ஏப்ரல் 1971 அன்று, கொழும்புவிற்கான பிரிட்டனின் தூதர், ஏங்கஸ் மேக்கிண்டோஷ் (Angus Mackintosh), எஃப்.சி.ஓ.வின் தகவல் ஆய்வுத்துறைக்கு பின்வரும் தந்தியை அனுப்பினார்: மலேயா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் கென்யாவில் நடந்த கிளர்ச்சிகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளுமாறும், அந்த நாடுகளிலும் பிறபகுதிகளிலும் எம்மாதிரியான சட்ட, பாதுகாப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்று விபரம் சேகரிக்கமாறும் இலங்கை வெளியுறவு அமைச்சகத்தின், அலுவலகப்பணி செய்யும் இராணுவ அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டனர். இங்குள்ள மற்ற அனைத்து அதிகாரிகளையும்போல, பூரண அறியாமை நிலையிலிருந்தே தொடங்கினார்கள். எனவே இதன் பின்புலம் குறித்து பதிப்பிக்கப்பட்ட தரவுகள் இருந்தால் பெரிதும் வரவேற்கலாம். தொடக்கத்திற்கு, ராபர்ட் தாம்சனின் (Robert Thompson) கம்யூனிஸ்ட் கிளர்ச்சிகளை எதிர்கொள்வது தொடர்பாக என்ற ஆய்வின் சில பிரதிகள்கூட சரியாகத்தான் இருக்கும். டி.என்.ஏ. எஃப்.சி.ஓ. 37/787 நைரோபி தூதரகம் இந்த தந்திக்கு பதிலளிக்கையில், 1953 - 1960 வரை கென்யாவின் மௌமௌ அடக்குமுறைகளை பிரிட்டன் மேற்கொண்டது தொடர்பாக ஒரு புத்தக பட்டியலையும் அனுப்பியது.

7 வைட்டேக்கர், பக்கம் 138

8 ஜிம்பாபேவிற்கான பாதுகாப்பு அதிகாரியாக பின்னாளில் ஃபீல்டு பணியமர்த்தப்பட்டிருக்கலாம்.

9. சேனல் 4 தொலைகாட்சிசெய்தி, இலங்கை இராணுவத்தின் 53 -ஆவது பிரிவு என்பது யார்?,திடம்பர் 8, 2010, http://www.channel4.com/news/who&are&sri&lanka&armys&53&division (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

10. ஹிரந்தி ஃபெர்னாண்டோ (Hiranthi Fernando), மேஜர்களை உருவாக்குதல், சண்டேடைம்ஸ் (இலங்கை), மார்ச் 21, 1999, http://www.sundaytimes.lk/990321/plusm.html (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

11 விக்கீபீடியா, பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் ஊழியர்கள் கல்லூரி,

https://en.wikipedia.org/wiki/DefenceServicesCommandandStaffCollege (அணுகிய நாள், மார்ச் 7, 2014)

12. தமிழ்நெட் இணையதளம், ஒருமாத நல்லெண்ண அடிப்படையி லான போர்நிறுத்தத்தை புலிகள் அறிவித்தனர், திடம்பர் 21, 2000, http://www.tamilnet.com/art.html?catid=13artid=5673 (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

13. தமிழ்நெட் இணையதளம், விடுதலைப்புலிகளின் போர்நிறுத்தத்தை பிரிட்டன் வரவேற்றது, திசம்பர் 22, 2000, http://www.tamilnet.com/art.html?catid=13artid=5675 (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

14. இலங்கை அரசாங்கம், விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் பதில்: பேச்சுவார்த்தைகள் தொடங்கிய பின்னரே போர் நிறுத்தம், திசம்பர் 26,2000,

http://www.priu.gov.lk/newsupdate/CurrentAffairs/ CA20001220001226ceasefireafternegotiationsproceed.htm (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

15. பி.பி.சி. செய்திகள், தடை செய்யப்பட்ட இயக்கங்களின் பட்டியலில் தமிழ்ப்புலிகள்,பிப்ரவரி 28, 2001, http://news.bbc.co.uk/1/hi/ukpolitics/1194949.stm (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

16.தமிழ்நெட் இணையதளம், இங்கிலாந்தின் தடை அமைதி பேச்சுவார்த்தைக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கிறது - விடுதலைப் புலிகள், பிப்ரவரி 28, 2001 http://www.tamilnet.com/art.html? catid = 13artid = 5821 (அணுகிய நாள், ஜூன் 24, 2014)

17. என்.ராம், ‘போர் தொடங்கிய காலத்தில் இருந்து அமைந்த மிகச்சிறந்த வாய்ப்பு’, ஃப்ரண்ட்லைன், தொகுதி 18, இதழ் 05, மார்ச் 3-16, 2001, http://www.frontline.in/static/html/fl1805/18050040.htm (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

18.பவர்பேஸ் (Powerbase), ரோஹன்குணரத்னா, http://www.power base.info/index.php/RohanGunaratnaSt.Andrews

19. டங்கன் கேம்பெல் (Duncan Campbell), புதிய ’போர்நாய்’களை சந்தைப்படுத்துதல், பொது ஒருமைப்பாட்டிற்கான நடுவம், அக்தோபர் 30, 2002,

http://www.publicintegrity.org/2002/10/30/5681/marketing&new&dogs&war (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

# ௪. போர்நிறுத்தம் முதல் முள்ளிவாய்க்கால் வரை (2002- 2009)

**இலங்கை அரசிற்கு சமமாக இருந்த விடுதலைப்புலிகளின் பலத்தை இலங்கை அரசுக்கு ஆதரவாக சிதைத்ததன் மூலம் 2002-இன் போர்நிறுத்த ஒப்பந்தத்தை அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் சீர்குலைத்ததில் பிரிட்டனின் பங்கு அளப்பரியது.** சமாதான காலத்தின்போதும் இலங்கை இராணுவம், காவல்துறை மற்றும் உளவுத் துறை அமைப்புகளுக்குப் பயிற்சியும், ஆலோசனையும் வழங்கி, வேண்டிய அனைத்தையும் கொடுப்பதைப் பிரிட்டன் தொடர்ந்து கொண்டேயிருந்தது. **பிரிட்டன், இலங்கைக்கு 2003 - 2006 வரை (போர் நிறுத் தத்தின் மிகவும் அமைதியான காலம்) விற்ற ஆயுதங்களின் அளவு முக்கியமானதாகும்.** அதேபோல ஜூன் 2007-இல் பயங்கரவாதிகள் தடைச் சட்டத்தின் மூலம் இங்கிலாந்தில் செயல்பட்டு வந்த முன்னணி தமிழ் செயற்பாட்டாளரான ஏ.சி.சாந்தன், விடுதலைப்புலிகளுக்குச் சாதனங்கள் அனுப்பி உதவியதாக கைது செய்யப் பட்டதும் சுட்டிக் காட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.2009 ஜூனில் சாந்த னுக்கு தண்ட னை வழங்கிய போது, நீதிபதி திரு.சாண்டர்ஸ் (Sannders) இவ்வாறு சொன்னார்:




*விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன்*

‘‘மார்ச் 2003 தொடங்கி ஜூன் 2006 வரையான மூன்று ஆண்டு காலத்தில், விடுதலைப் புலிகளுக்கு சரக்குகள் அனுப்புவதை சாந்தன் ஒருங்கிணைத்துள்ளார். இந்த நாட்டில் உள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமே சரக்குகள் வாங்க பயன்படுத்தப்பட்ட பணத்தின் ஒரு பகுதி பெறப்பட்டது என்று நான் நம்புகிறேன். மீதிப்பணம் விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்டது. பல்வேறுபட்ட பொருட்கள் அனுப்பப் பட்டுள்ளன. இராணுவ பயன்பாட்டு மடிக்கணினிகள்,

மின்சாதன பொருட்கள், அதிக வெளிச்சம் தரக்கூடிய டார்ச் விளக்குகள் ஆகியவை இருந்தன. இவை இராணுவ பயன்பாட்டிற்கோ அல்லது பொது பயன் பாட்டிற்கோ எப்படியும் பயன்படுத்தி இருக்கலாம். அனுப்பப்பட்ட சரக்கில் துப்பாக்கிகளோ, வெடிபொருட்களோ இல்லை. மிக அதிக அளவிலான சரக்குகள் இலங்கைக்கு சாந்தனாலோ, அல்லது இங்கிலாந்தில் வாழும் தமிழர்கள் தமது உறவினர்களை சந்திக்க இலங்கை செல்லும் போதோ கொண்டு செல்லப்பட்டது. வெளிப்படையாக இராணுவப் பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படக் கூடியவாறு அனுப்பப்பட்ட ஒரே பொருள் ஜேன் கையேடுகள்★ (Jane's Manuals) தான்[1] ’’ என்று நீதிபதி கூறினார்.

---

★ லண்டனை தலைமையகமாக கொண்டு செயல்படும் ஜேன்ஸ் இன்ஃபர்மேசன் குரூப் (Janes Information Group) என்பது ஒரு பிரிட்டிஷ் பதிப்பகமாகும். இது இராணுவ, விண்வெளி, போக்குவரத்து போன்ற தலைப்புகளில் சிறப்பியல்பான வெளியீடுகள் கொண்டுவரும் பதிப்பகமாகும். (மொ-ர்)

இங்கிலாந்து நீதிமன்றம் விடுதலைப்போராட்டத்திற்கு மலிவான பொருட்களை கடத்தியதாக கூறி சாந்தனுக்கு தண்டனை வழங்கிய அதே காலகட்டத்தில், சேஃபெர்வேல்டு (Saferworld -பாதுகாப்பான உலகம்) என்ற என்.ஜி.ஓ. நிறுவனத்தின் மூலம் பிரிட்டன் அரசு ஈழ மக்களை கொன்று கொண்டிருந்த இலங்கை அரசுக்கு கீழ்கண்ட சரக்குகளை வழங்கியது.

| |
|---|
| ***2003*** <br> இராணுவ வான்படை தொலைத்தொடர்பு கருவிகளுக்கான பாகங்கள், இராணுவ விமான எஞ்சின்களுக்கான பாகங்கள், இராணுவ விமான ஜி.பி.எஸ் கருவிகளுக்கான பாகங்கள், கப்பல்படை இலகுரக துப்பாக்கிகளுக்கான பாகங்கள், இலகுரக ஆயுதங்கள், வெடி மருந்துகளுக்கான பொருட்கள், கடற்படை இலகுரக துப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கான சாதனங்கள், மின்னொளி வீசுகின்ற விளக்குகள் (Illuminators), இராணுவ சரக்கு வாகனங்கள். கண்ணீர் புகை மற்றும் உறுத்தல் ஏற்படுத்தும் வெடி மருந்துகள், இராணுவ போக்குவரத்து விமானங்கள், இராணுவப் பயன்பாட்டு வாகனங்கள், கவச டேங்கர் வாகனங்கள், வறையறுக்கப்பட்ட பகுதியில் இருந்து இராணுவ விமானங்களை இயக்குவதற்கான சாதனங்கள், பொது இராணுவ விமானங்களுக்கான பாகங்கள், இராணுவ மின்னணு சாதனங்களுக்கான பாகங்கள். |
| ***2004*** <br> கவச டேங்கர் வாகனங்கள், இராணுவத் தகவல் தொடர்பு சாதனங்களுக்கான பாகங்கள், இராணுவப் பயன்பாட்டு உலங்கு வானூர்திகளுக்கான பாகங்கள், கடற்படை இலகுரக துப்பாக்கிகளுக்கான பாகங்கள், இராணுவ வாகனங்களில் பொருத்தக்கூடிய தகவல் தொடர்பு சாதனங்கள், ஏர் கன்கள், தாக்குதலுக்கு பயன்படும் துப்பாக்கிகளுக்கான பாகங்கள், போர் விமானங்களுக்கான பாகங்கள், கனரக இயந்திர துப்பாக்கிகளுக்கான பாகங்கள், செமி-ஆட்டொ மேட்டிக் கைத்துப்பாக்கிகளுக்கான பாகங்கள், செமி-ஆட்டொ மேட்டிக் கைத்துப்பாக்கிகள், சிறியரக ஆயுதங்கள், வெடிபொருட்கள், செமி-ஆட்டொமேட்டிக் கைத்துப்பாக்கிகளை இயக்குவதற்கான தொழில்நுட்பம், இராணுவ விமான எஞ்சின் பாகங்கள், இராணுவ போக்குவரத்து விமானங்களுக்கான பாகங்கள், இயந்திர கைத்துப்பாக் கிகள், கனரக இயந்திர துப்பாக்கிகள், இரவில் பார்க்கும் கண்ணாடி கள், பாகங்கள், இராணுவ அகச்சிவப்பு தெர்மல் இமேஜிங் சாதனம், இராணுவ பயன்பாட்டு வாகனங்கள், இராணுவ போக்குவரத்து விமா னங்கள் ஆகியவற்றிற்கான பாகங்கள், பொது பயன்பாட்டு இயந்திர துப்பாக்கிகளுக்கான பாகங்கள், துப்பாக்கி தாங்கிகள், இயந்திர கைத் துப்பாக்கிகள், துப்பாக்கியில் பொருத்தும் தொலை நோக்கிகள். |
| ***2005*** <br> கனரக இயந்திர துப்பாக்கிகளுக்கான பாகங்கள், இராணுவ பயிற்சி விமானங்களுக்கான பாகங்கள், இராணுவ பயன்பாட்டு உலங்கு வானூர்திகளுக்கான பாகங்கள், கடற்படை இலகுரக துப்பாக் கிகளுக்கான பாகங்கள், செமி-ஆட்டோமெட்டிக் கைத்துப்பாக்கிக ளுக்கான பாகங்கள், கனரக இயந்திர துப்பாக்கிகளுக்கான பாகங்கள், போர் விமானங்களுக்கான பாகங்கள். <br> இணைப்பாக: கடற்படை இலகுரக துப்பாக்கிகளுக்கான பாகங்கள், கவச தட்டு, ஏவுகணை தடுப்பு கேடயங்கள், கவச உடை, இராணுவ போக்குவரத்து விமானத்திற்கான பாகங்கள். |
| ***2006*** <br> ஏர்-கன்கள், இராணுவ விமான தகவல் தொடர்பு சாதனங்கள், கவச டேங்கர் வாகனங்கள், பொது பயன்பாட்டு இயந்திர துப்பாக்கிகளுக்கான பாகங்கள், கனரக இயந்திர துப்பாக் கிகளுக்கான பாகங்கள், இராணுவ விமான எஞ்சின்களுக்கான பாகங்கள், செமி-ஆட்டோ மேட்டிக் கைத் துப்பாக்கிகளுக்கான பாகங்கள், செமி-ஆட்டோமேட்டிக் கைத்துப்பாக்கிகள், சிறியரக ஆயுதங்கள், வெடிபொருட்கள், போர் விமானங்களுக்கான பாகங்கள், போர் உலங்கு வானூர்திகளுக்கான பாகங்கள், இராணுவப் போக்குவரத்து விமானங்களுக்கான பாகங்கள், போர் உலங்குவானூர்திகளைப் பயன்படுத்துவதற்கான சாதனம், இராணுவப் பயன்பாட்டு வாகனங்கள். |

யுத்த நிறுத்தத்தில் ஈடுபட்டிருந்த இருதரப்பில் ஒரு தரப்பை ஆயுத பாணியாக்கிய அதே நேரத்தில், இன்னொரு தரப்பை தடை செய்து பலவீனமாக்கியது இங்கிலாந்து அரசு. இலங்கைக்கு 'பாதுகாப்புத்துறை சீர்திருத்தங்கள்' என்ற பெயரில் தொடர்ச்சியான உதவிகளை வழங்கியது. இவற்றுக்கு இங்கிலாந்தின் குளோபல் கான்ஃபிலிக்ட் 'பிரிவென்சன்' பூல் Global Conflict 'Prevention' Pool (GCCP) - என்ற உலக போர் 'தடுப்பு' நடுவம் நிதியளித்திருந்தது. இது வெளிநாடு மற்றும் காமன்வெல்த் அலுவலகம் (FCO - Foreign and Commonwealth Office), பாதுகாப்பு அமைச்சகம், (MOD - Ministry of Defense) மற்றும் பன்னாட்டு முன்னேற்றத்திற்கான துறை (DFID - Department for International Development) ஆகிய மூன்று துறைகளின் முன்முயற்சியால் ஏற்படுத்தப்பட்டதாகும்.

ஏப்ரல் 2006-இல், பாராளுமன்ற விவாதத்தின்போது எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த பன்னாட்டு முன்னேற்றத் திற்கான துறையின் தலைவர் ஹிலாரி பென் (Hillary Benn); ''இலங்கை யிலும் இந்தோனேசியாவிலும் பாதுகாப்பு ஆய்வுகளுக்கு குளோபல் கான்ஃபிலிக்ட் 'பிரிவென்சன்' பூல் துணை புரிந்தது. பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் பன்னாட்டு முன்னேற்றத்திற்கான துறையைச் சேர்ந்த தொழில்நுட்ப ஆலோசகர்கள் அடங்கிய பாதுகாப்பு பிரிவை மேம்படுத்தும் ஆசோசனைக்குழு (SSDAT - Security Sector Development Advisory Team) மூலம் அனைத்து ஆலோசனைகளும் வழங்கப்பட்டன[2]'' என்று கூறினார்.

பிரிட்டனின் அறிவுரைகளுக்கு இணங்க இலங்கையில் பாது காப்பு ஆய்வு 2002-இன் ஆரம்பத்திலேயே தொடங்கியது[3].

2006 - 2009 வரையான காலத்தில், ' இங்கிலாந்து இலங்கையில் அமைதியைக் கட்டி எழுப்பும் யுத்தி'-யின் ஒரு பகுதியாக, SSDAT-இன் பணியை வெளியுறவு அலுவலகம் எடுத்துக்கொண்டது. 'முக்கிய நிறுவனங்களில், குறிப்பாக பாதுகாப்பு சேவையில் ஆட்சியியல் சீர்திருத்தத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, நிலைத்து நிற்கும் அமைதிக்கான அடிப் படைச் சூழலை வலுப்படுத்துவதே' இந்த யுத்தியின் ஒரு நோக்கமாகும் என்ற எஃப்.சி.ஓ மேலும் சொன்னது:

''பதட்டத்தையும் வன்முறையையும் குறைக்கும் வண்ணம் போர்ப்பகுதிகளை கட்டுப்படுத்துவதில் (policing) இங்கிலாந்து பாது காப்பு படைகள் நிபுணத்துவம் பெற்றுள்ளன. (முக்கியமாக வடக்கு அயர்லாந்து மற்றும் ஐ.நா. அமைதிகாக்கும் நடவடிக்கைகளின் மூலமாக). 2001-இல் பிரிட்டன் அரசானது செக்யூரிட்டி செக்டார் டெவலப்மெண்ட் அட்வைசரி டீம் எஸ்.எஸ்.டி.ஏ.டி (பாதுகாப்பு பிரிவு வளர்சிக்கான ஆலோசனைக்குழு)-ஐ உருவாக்கியது. இது பிரிட்டன் அரசால் ஆதரவளிக்கப்பட்ட பாதுகாப்பு துறை சீரமைப்பு நடவடிக் கைகளின் சிறப்பு மையமாகவும், அரசின் உலக மோதல் தடுப்பு நடவடிக் கைகளின் பகுதியாகவும் உருவமைக்கப்பட்டது. இந்த ஆலோசனைக் குழுவானது காவல்துறை நடவடிக்கைகள், நீதி வழங்குதல், பாதுகாப்பு, உளவு வேலைகள் மற்றும் இராணுவத் துறைகளில் மிக விரிவான அளவிற்கு நிபுணத்துவம் பெற்று இருந்தது. இக்குழுவினர் இலங்கையில் அமைதியைக் கட்டி எழுப்பும் திட்டத்தின் நோக்கங்களுக்கு நடைமுறை ஆதரவை வழங்க உள்ளனர்[4].''

இங்கிலாந்தின் நிபுணர்கள் எவ்வாறான செயல்களில் ஈடுபடுவார்கள் என்று அது மேலும் விரிவாக சொன்னது:

- பொதுமக்கள் இராணுவம் இடையிலான உறவுகள், பன்னாட்டு மனிதநேய சட்டம், ஆயுதப் போராட்டங்களின் சட்டம் ஆகிய வற்றுக்கான அமைதி காக்கும் நடவடிக்கைகளுக்கான பயிற் சியும், கொள்கையையும் வடிவமைப்பது.
- வெளிப்படைத்தன்மையையும், பொறுப்புடைமையையும் மேம்படுத்த பாதுகாப்பு கொள்கைகளையும், இராணுவ நடவ டிக்கைகளையும் மக்கள் மேற்பார்வையிடுவதற்கான முன் னெடுப்புகளுக்கு ஆதரவு தருதல்.
- பொதுமக்கள், பாதுகாப்புச் சேவை மற்றும் அரச நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு இடையே மேலும் சிறந்த ஒத்துழைப்பை ஏற்படுத்தி, பொதுமக்கள்-இராணுவ ஒத்துழைப்பை பிராந்திய அளவிலும்,தேசிய அளவிலும், உள்ளூர் அளவிலும் மேம்ப டுத்துவதற்கு ஆதரவு தருதல்.
- பாதுகாப்பு துறை மேம்பாட்டு திறன்களை வளர்க்க, இலங்கை இராணுவத்தோடு, கல்வி மற்றும் இருதரப்பு பரிமாற்ற நடவடிக்கைகள்.

- காவல்துறை, இராணுவம் மற்றும் நீதித்துறையில் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியறிவை மேம்படுத்தி, சமூகத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் தகவல் தொடர்பை மேம்படுத்துவதும், தேசிய மற்றும் உள்ளூர் அரசாங்க சேவைகளை மக்கள் அணு குவதை அதிகரித்தலும்.
- பொதுமக்களைக் காவல்துறை பணிகளில் பயன்படுத்திக் கொள்ளும் திட்டத்திற்கு ஆதரவாய் இலங்கை காவல் துறையுடன்இணைந்துப் பணியாற்றுதல்'' என்று எஃப்.சி.ஓ கூறியது.

இலங்கை இராணுவத்தோடு பணியாற்றுவது என்பது அதன் திட்டத்தில் தெளிவாக இருந்தது என்ற செய்தி, எஃப்.சி.ஓ இணைய தளத்தில் இருந்த பழைய பதிவிலும் உறுதியாகிறது. ''பாதுகாப்பு அமைச்சகத்தின் உயர் மேலாண்மை, பாதுகாப்பு கொள்கைகளை மேம்படுத்தல், உளவு மற்றும் காவல்துறைப் பணிகள் ஆகியவற்றில் பாதுகாப்புத்துறை மறுசீரமைப்புக்கான உதவிகளை புரியுமாறு இங்கி லாந்தை ஏப்ரல் 2006- இல் இலங்கை முறைப்படி வேண்டியது[5]'' என்பது அச்செய்தியாகும்.

கொழும்புவிலுள்ள பிரிட்டிஷ் தூதரகத்தில் 2004 - 2007 வரை பாதுகாப்பு ஆலோசகராய் இருந்த கொலின் மார்ட்டின், ஒ.பி.ஈ.★ அவருடைய பணிக்காலத்தில் ஈடுபட்ட விவகாரங்கள் குறித்து:

''இங்கிலாந்து அரசாங்கத்தின் பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் மூன்றுத் துறைகளை (பாதுகாப்பு அமைச்சகம்/எஃப்.சி.ஒ./ டி.எஃப். ஐ.டி) தான் பிரதிநிதித்துவப்படுத்தியதாகவும்; பாதுகாப்புத் துறை சீர்தி ருத்தம், ஆற்றல்களை வளர்த்தெடுத்தல், அரசாங்க முன்னெடுப்புகளை இலங்கை அரசாங்கத்தோடு இணைந்து செய்தல், இலங்கை இராணுவத்திற்கு விரிவான பயிற்சிகள் மற்றும் மேம்பாட்டு திட்டங் களைத் தூண்டுதல் ஆகியவற்றில் ஈடுபட்டதாகவும்[6]'' விவரிக்கிறார்.

தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் மூலம் ஆசிரியரால் பெறப் பட்ட (பின்னிணைப்பு-1) பட்டியலில், இங்கிலாந்து பாதுகாப்பு அமைச்சகம் இலங்கைக்கு 2007-இல் பயிற்றுவித்த அனைத்து படிப்புகளின் பட்டியலும் உள்ளன. மேலும் அதே நேரத்தில், அதிபர் ராஜபக் சாவின் மகன்களில் ஒருவரை கடற்படை அதிகாரியாக பிரிட்டனின் ராயல் நேவி பயிற்றுவித்தது[7]என்பதும் தெரிய வருகிறது.

ஏப்ரல்- மே 2008 வாக்கில், மார்ட்டினை (Martin) அடுத்து பாது காப்பு ஆலோசகராக பொறுப்பேற்றுக்கொண்ட லெப்டினன்ட் கர்னல் ஆண்டன் கேஷ் (Anton Gash), யாழ்ப்பானத்திற்கான இலங்கையின் பாது காப்புப்படை தளபதியான மேஜர். ஜெனரல். ஜி.ஏ. சந்திரஸ்ரீ (G A Chandrasiri) - யுடன் அப்போதைய பாதுகாப்பு சூழல் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினார். அதன் பிறகு காங்கேசன் துறையின் வடக்கு கடற் படை கட்டளைத்தளத்தையும், பலாலி விமானத்தளத்தையும்[8] பார்வை யிட சென்றார்



இடமிருந்து வலம்; லெப்டினன்ட் கர்னல் ஏ.எஸ்.கேஷ், மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரஸ்ரீ, லெப்டினன்ட் கர்னல் டேன் ரெக்ஸ் மற்றும் படைப்பிரிவு தளபதி ஆண்டி லீ, 2008

போர் நிறுத்த ஒப்பந்தம் முறிந்த பிறகும் SSDAT இலங்கையில் ஏப்ரல் 2008 வரை, ஒருவேளை மார்ச் 2009 வரையிலும் கூட 'பாதுகாப்பு துறை சீர்திருத்த' ஆலோசனைகள்[9] வழங்குவதோடு தீவிரமான செயல் பாட்டிலும் இருந்ததாக இங்கிலாந்து பாதுகாப்பு அமைச்சகத்தின் மற்றுமொரு மதிப்பீட்டு அறிக்கை உறுதி செய்கிறது.

★ஒ.பி.ஈ (OBE -Order of the British Empire) என்பது 1917-ஆம் ஆண்டில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரால் பிரிட்டன் மற்றும் காமன்வெல்த் நாடுகளில் சிவில் இராணுவ பிரிவுகளில் சாதனை புரிபவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மிக சிறப்புமிக்க கௌரவமாகும். (மொ-ர்)

பின்னிணைப்பில் உள்ள இராணுவப் பயிற்சிப் பட்டியலில் கண்டுள்ளபடி, பிரிட்டன் ஒரு இலங்கை அதிகாரிக்கு பன்னாட்டு உளவு இயக்கு நருக்கான படிப்பை மேற் கொள்ள ஜூலை 2007-இல் இங்கிலாந்து இராணுவ கல்லூரியில் இரண்டு வாரத்திற்கு இடம் ஒதுக்கீடு செய்தது. இலங்கையின் இராணுவ ஆற்றல்களை நவீனப்படுத்தும் முயற்சிக்கும், மூத்த இலங்கை இராணுவ அதிகாரிகளுடன் பணியாற்றும் வாய்ப்புக்கும் இது ஒரு முகாந்திர தேவையாக பார்க்கப்பட்டது. இந்தக் கால கட்டத்தில் இலங்கை உளவு அமைப்புகளுக்கு பிரிட்டன் ஆதரவாகச் செயல்பட்டதற்கு மேலும் பல தடயங்கள் உள்ளன. லிப்ரா ஆலோசனைக் குழு என்ற தனியார் 'மேம்பாட்டு சேவை நடுவம்' என்பதை SSDAT உறுப்பினர்களின் ஆதரவோடு 2007-இல் அமைத்தது என்பது அப்படியானதுதான்.

லிப்ராவின் இணை நிறுவனர்களின் ஒருவரான பீட்டர் வில்சன் (Peter Wilson) SSDAT-இல் தனது பணியை பற்றி விவரிப்பதிலிருந்து- ''அவர் உளவு மற்றும் பாதுகாப்பு ஆலோசகராக, உளவுச் சேவை சீர்திருத்தம், தேசியப் பாதுகாப்பு கவுன்சில் மற்றும் ஈராக், சிரியா, லியோன், எத்தியோப்பியா, இலங்கை, கொசாவா, மற்றும் போஸ்னியா -ஹெர்சகோவினா ஆகிய நாடுகளில் உள்துறை அமைச்சகங்களுக்காகப் பணியாற்றியுள்ளார்'' என்பது தெளிவாகிறது. இணையத்தில் காணப்படும் பீட்டர் வில்சனின் அனுபவ விவர குறிப்பில் (CV) 'உளவு மற்றும் பாதுகாப்பு ஆலோசகராக' பணிபுரிவதற்கான அனுபவத்தை எங்கிருந்து பெற்றார் என்பது தெளிவாக இல்லை. அவரது முன்னாள் பணி என்பது பிரிட்டிஷ் தூதரக சேவையில், தேசியப் பாதுகாப்பு விடயங்களில் நிபுணத்துவம் பெற்றதாக[10] இருந்தது -என்கிற விபரத்தின்படி வில்சன் ஒரு முன்னாள் எம்.ஐ.6 அதிகாரியாக இருந்திருப்பதற்கான அறிகுறி தென்படுகிறது.



*சர்.ஜான் சாயர்ஸ் (இடது) உடன் முன்னாள் இங்கிலாந்து வெளியுறவு செயலர் டேவிட் மிலிபாண்ட்*

வில்சனின் பணி குறித்த விபரத்திலிருந்து நாம் பின்வருபவற்றை அறிந்து கொள்ளலாம். இலங்கையில் லிப்ராவிற்கான பணிகளுள், இலங்கைக்கான பாதுகாப்புக் கொள்கைகளை உருவாக்குவதற்கு ஆதரவாக ஒரு திட்டத்தை வடிவமைப்பதும் நடைமுறைப்படுத்துவதும் என்பது முக்கியமாகும். அதோடு இலங்கையில் இங்கிலாந்து அரசின் முன்முயற்சியில் ஒரு காவல்துறை சீர்திருத்தத் திட்டத்தை[11] வடிவமைப்பதும், முன்னெ டுப்பதும் அதன் பணிகளாகும். இலங்கையின் ஸ்பெஷல் பிரான்ச் (எஸ்.பி.) மற்றும் ஸ்டேட் இண்டலிஜென்ஸ் சர்வீஸ் (எஸ்.ஐ.எஸ், இலங்கையின் உளவுத்துறை - மொ-ர்) ஆகியவற்றின் செயல்பாடு, மேலாண்மை பயிற்சிகள் மற்றும் ஆற்றல் வளர்ப்பு குறித்து பேச ஒரு பயிற்சி பட்டறையை ஏப்ரல் 2007-இல் ஏற்பாடு செய்ய வில்சன் திட்டமிட்டிருந்தார். அவரது இறுதி இலக்கு என்பது எஸ்.பி மற்றும் எஸ்.ஐ.எஸ் ஆகியவற்றை ''திறன்மிக்க'' அமைப்புகளாக மாற்று வதாகும்.

மகிந்த ராகபக்சா அரசாங்கத்தால் இலங்கைக்கான பாதுகாப்பு ஆலோசகராக அமர்த்தப்பட்ட சஞ்சய கொலோனே (Sanjaya Colonne) - உடன் ஒரு பாதுகாப்பு சீர்திருத்தக் கருத்தரங்கை நடத்த பீட்டர் வில்சன் திட்டமிட்டிருந்தார். இந்தக் கருத்தரங்கிற்கான செலவை பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள இருந்தது[12]. பல எஸ்.எஸ்.டி.ஏ.டி உறுப்பி னர்கள், குறிப்பாக லிப்ராவில் இணைந்தவர்கள், இங்கிலாந்தின் கிளர்ச்சி எதிர்ப்புக் கோட்பாட்டை தங்களது பாதுகாப்புத்துறை சீர்திருத்தங் களோடு மாற்றிப் புரிந்து கொண்டிருந்தனர். ஆண்டிரு ராத்மெல் (Andrew Rathmell)



*இலங்கையில்உள்ள இங்கிலாந்து தூதரகத்தின் அரசியல் பிரிவின் தலைவருடன் (இடது) சஞ்சய் கொலோனே, இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்திற்கான ஆலோசகர் (நடுவில் இருப்பவர்)*

ஈராக்கில் இருந்த இடைக்கால கூட்டணி அதிகார மையத் திற்கான முன்னாள் திட்டத்தலைவர், லிப்ராவின் இணை நிறுவனர்) எண் ணற்ற பல வெளியீடுகள் எழுதினார். அவை ஒவ்வொன்றிலும், 'கிளர்ச்சி-எதிர்ப்பு', 'அமைதியைக் கட்டியெழுப்புதல்', மற்றும் 'பாதுகாப்புச் சீர்திருத்தங்கள்[13]' போன்ற பதங்களை கிட்டத்தட்ட மாறி மாறி பயன்படுத்துகிறார். உள்நாட்டு மோதலை முடிவுக்கு கொண்டுவரல்: ஸ்திரத் தன் மைக்கும், கிளர்ச்சி எதிர்ப்புகளை கையாள்வதிலும் மாறுபட்ட அணுகு முறைகள் என்ற தலைப்பில் 2010-இல் லிப்ரா ஆலோசனைக் குழு ஏற்பாடு செய்திருந்த 3 நாள் கருத்தரங்கை பீட்டர் வில்சன் தானே தலைமை தாங்கி நடத்தினார். அந்த கருத்தரங்கு, ''ஸ்திரத்தன்மை மற்றும் கிளர்ச்சி எதிர்ப்பு தலையீடுகள் குறித்த 'அரசின் அனைத்து' அணுகு முறைகளுக்கு ஆதரவாக கோட்பாட்டையும்,ஆற்றல்களையும் வளர்த் தெடுப்பதில் மேற்குலக நாடுகள் கணிசமான முயற்சிகளை எடுத்துள்ளன என்றும்; அவை பரந்த அரச கட்டமைப்புகளை உருவாக்கவும், அமைதியை கட்டியெழுப்பும் நோக்கங்களை ஆதரிப்பதற்காகவும் வேண்டி செய்யப்பட்டன என்றும்; இருந்தபோதிலும், சர்வதேச அளவில் பாது காப்பு என்பது உத்தரவாதமற்ற நிலையில் இருக்கும்போது வளரும் நாடுகளே பெரும் சவால்களை எதிர்கொள்கின்றன என்றும்; வளரும் நாடுகளின் இத்தகைய அனுபவங்களுக்கு போதிய கவனம் கொடுக்கப் படவில்லை என்றும்[14]'' விளக்கியது.

இவ்வாறு போர் நிறுத்தத்தின்போது, ஒருதலைபட்சமாக இலங்கை அரசுடன் இணைந்து இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டே பிரிட்டன் விடுதலைப்புலிகள் மீது தடை விதித்து அரசியல் அழுத்தத்தைக் கொடுத்தது. விடுதலைப்புலிகளைத் தங்கள் நாட்டில் தடை செய்ததோடு பின்னர் அமெரிக்காவோடும் சேர்ந்து கொண்டு ஐரோப்பா முழுவதும் அந்த இயக்கம் தடை செய்யப்படுவதற்கு காரண மாகவும் இருந்தது. 2005-ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமை பிரிட்டனின் கையில் இருந்தபோது, விடுதலைப் புலிகள் உறுப்பினர்களுக்கு பயணக் கட்டுப்பாடுகளை[15] விதித்தது. மே 2006- இல் முற்று முழுதாக தடை செய்யப்படுவதற்கு இதுவே வழி கோலியது.

*2006 ஏப்ரல் 1 முதல் ஆகஸ்ட் 31 வரை இலங்கை கண்காணிப்பு குழுவின் தலைவராக இருந்த ஸ்வீடன் இராணுவ அதிகாரி, மேஜர் ஜெனரல் உல்ஃப் ஹென்ரிக்சன் (Ulf Henricsson) இந்த முடிவை கடுமையாக எதிர்த்தார். ''இலங்கை கண்காணிப்புக்குழு என்பது, தமிழ்ப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையே ஏற்பட்ட போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் உறுப்பாகும். சர்வதேச மத்தியஸ்தத்தால் ஏற்பட்டுள்ள அமைதிப் பேச்சுவார்த்தைகளின் மூலமாக ஒரு சமாதான தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அனைத்தும் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் கொடுத்த மிகையான அழுத்தத்தால்[16] இறுதியில் இல்லாமல் போனது. இது புலிகளோடு சண்டையிடுவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு இருந்த தடையை நீக்கியது'' என்று அந்த அதிகாரி கூறுகிறார்.*

இலங்கையில் இனப்படுகொலை நடந்ததற்கான ஆதாரம் இப்போது மறுக்க முடியாத ஒன்றாகி விட்டது. இந்த சூழலில், ராஜபக்சா அரசு மேற்க்கொண்ட போர்க் குற்றங்களை எதிர்ப்பது போலவும், இந்த கோரமான தாக்குதலை எதிர்கொண்ட தமிழ் மக்களின் பக்கம்தான் இருப்பது போலவுமான ஒரு தோற்றத்தை உருவாக்குவதில் பிரிட்டன் ஓரளவு வெற்றி கண்டுள்ளது என்றுதான் சொல்ல

வேண்டும். மார்ச் 2014- இல் பிரிட்டனும், அமெரிக்காவும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமை கவுன்சிலில் ஒரு தீர்மானத்தை கொண்டு வந்தன. 2009 போர்க்குற்றங்களுக்காக இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப்பது போல அவை பாசாங்கு செய்தன. முள்ளிவாய்க்கால் பேரவலம் முடிந்து ஐந்து ஆண்டுகள் கழித்து, ஐ.நா-வின் மனித உரிமை கவுன்சில் போன்ற ஒப் பீட்டளவில் அதிகாரம் இல்லாத ஒரு இடத்தில் தீர்மானத்தை கொண்டு வந்தது என்பது ஒரு ஏமாற்று. புலம்பெயர் தமிழர்களை குளிர்விக்கும் முயற்சியாக செய்யப்பட்டது இந்த நடவடிக்கை.

இதுமாதிரியான மேல்பூச்சு நடவடிக்கைகளால் 2009 பிப்ர வரியில் இலங்கை அரசானது இனப்படுகொலையை தீவிரப்படுத்தி யிருந்த நேரத்தில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில்[17] எடுத்த சில தடுப்பு நடவடிக்கைகளை திட்டமிட்டே பிரிட்டன் எதிர்த்தது என்ற உண்மையை மறைத்துவிட முடியாது.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் என்ற தனக் கிருந்த சிறப்புத் தகுதியைப் பயன்படுத்தி, அப்போதே இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானத்தை பிரிட்டன் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், ஐ.நா-விற்கான இங்கிலாந்தின் நிரந்தர பிரதிநிதியான சர்.ஜான் சாயெர்ஸ் (John Sawers), 2009 பிப்ரவரி இறுதியில் இவ்வாறு சொன்னார்:

‘‘விடுதலைப்புலிகள் இயக்கம் இங்கிலாந்து உட்பட பல நாடு களால் தடை செய்யப்பட்ட ஒரு பயங்கரவாத இயக்கமாகும். அவர்கள் ஓரங்கட்டப்பட்டும் அழுத்தம் கொடுக்கப்பட்டும் உள்ளனர். விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு, மக்களின் சுதந்திரமான நடமாட்டத்திற்கு அனுமதிப்பதும், அரசியல் நடவடிக்கைகளை தொடர்வதும்தான் தற்போதைய சிக்கலுக்கான தீர்வாகும்.’’

சர்.ஜான் ஹோம்ஸ் (John Holme) ஒரு பிரிட் டன் ராஜதந்திரி, அப்போதைய ஐ.நா-வின் மனித நேய ஒருங்கிணைப்பாளராக இருந்தவர்) என்பவரிடம் இருந்து ஒரு சுவாரசியமான தகவல் கிடைக்கப்பெற்றோம். **முகாம்களில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் நிலை நாம் முன்னர் அச்சப்பட்ட அளவிற்கு கவலையளிக் கக் கூடியதாய் இல்லை. பிரச்சினையே விடுத லைப்புலிகள் மக்களைப் பிடித்து வைத்திருப்பதுதான். ஐ.நா பொதுச் செயலாளரும், அவரது குழுவும் இந்த மனிதாபிமான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு அமைதி நடவடிக்கைகளுக்கு உதவலாம். இலங்கை மனித உரிமை அம்சங்களை பற்றி விளங்கிக் கொள்வதற்கு ஆதரவாகத்தான் பிரிட்டன் உள்ளது. ஆனால், இலங்கையை பாதுகாப்பு கவுன்சிலில் நிறுத்துவது தேவையில்லை என்பதில் பிரிட்டன் தெளிவாக உள்ளது. அப்படியான ஒரு சூழல் இப்போது இல்லை.**[18]’’ (அழுத்தம் சேர்க்கப்பட்டது) இத்தகவல்கள் மற்ற விடயங்கள் போலல்லாமல் தனிப்பட்ட முறையில் பெறப்பட்டதாகும். இவர்கள் இலங்கையை எந்த அளவில் பயன்படுத்துகிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

இலங்கையின் ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்த சில வாரங்களேயான ஜூன், 16, 2009 அன்று, பிரிட்டனின் இரகசிய உளவுத்துறை (எம்.ஐ.6)-இன்[19] அடுத்த தலைவராக சர். ஜான் சேயர்ஸ் இருப்பார் என்று அறிவிக்கப்பட்டது முக்கியமல்லவா!

வெளியுறவு செயலர் டேவிட் மிலிபேண்ட் (David Miliband) போரினால் வெளியேற்றப்பட்ட தமிழ் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டு மென்று வெளிப்படையாக கோரிக்கொண்டிருந்தார். அதேநேரத்தில் போரின் கடைசி ஆறு மாதங்கள் முழுவதும் எஃப்.சி.ஓ இலங்கைக் காவல்துறையுடன் தனது உறவுகளை இரகசியமாக விரிவுபடுத்திக் கொண்டிருந்தது. மருத்துவமனைகள் கூட[20] இலங்கை இராணுவத்தால் குண்டு வீச்சுக்கு ஆளாக்கப்பட்ட பிப்ரவரி 2009-இல் வடக்கு அயர் லாந்தின் மூத்த காவல்துறை அதிகாரிகள் அடங்கிய குழுவை எஃப்.சி.ஓ நெருக்கடிகால நண்பர்களாகக் கொழும்புவிற்கு அனுப்பி வைத்தது.

ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உயிரிழப்புக்களுக்கு மத்தியில், விடுதலைப்புலிகள் சரணடைந்து சரியாக ஒரு மாதம் கழித்தான 2009 ஜூன் 18-இல் பெல்ஃபாஸ்ட் நகரில் எஃப்.சி.ஓ இலங்கைப் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆலோசகரான சஞ்சய் கொலொனேவை சந்தித்து பேசியது. இலங்கைக் காவல்துறைக்கு இங்கிலாந்தின் வருங்கால உதவிகள் குறித்து முடிவு செய்வது பேச்சுவார்த்தையின் நோக்கமாக இருந்தது. இது மட்டும்தான் இந்த சந்திப்பு குறித்த ஒரே தகவல். இந்த சந்திப்பில் பேசப்பட்டதன் குறிப்பு களை[21] (Meeting's Minutes) தகவல்பெறும்

உரிமைசட்டத்தின் வாயிலாகக் கேட்டதற்கு கேட்கப் பட்ட வேண்டுகோள் தொடர்பாக வேறு ஏதேனும் தகவல் தம்மிடம் உள்ளதா என்பதை உறுதி செய்யவோ, மறுக்கவோ இயலா தென எஃப்.சி.ஓ கூறிவிட்டது. எனவே பாதுகாப்பு உறவுகள் என்ற திரைக்குப் பின்னால் பிரிட்டன் எடுத்த முடிவுகள் அனைத்தும் இன்னும் இரகசியமாகவே இருக் கின்றன[22].

**குறிப்புகள்:**

*1 ஆர். வி. அருணாச்சலம் கிருஷந்தகுமார்* (Arunachalam Chrishantha kumar), *ஜூன் 12, 2009*, இந்த இணைப்பில் காணக்கிடைக்கும் http://www.tamilnet.com/img publish/2011/08/CHRISHANTHAKUMARsr12jun09.pdf *(அணுகிய நாள், ஜூன் 22, 2014)*

*2 ஹன்சார்டு, பாராளுமன்ற விவாதம், ஏப்ரல் 25, 2006, பத்தி 1031பி* இந்த இணைப்பில் காணக்கிடைக்கும் http://www.publications.parliament.uk /pa/cm200506/cmhansrd/vo060425/text/60425w18.htm *(அணுகிய நாள், ஜூன் 22, 2014)*

*3 லூயிஸ் பெல்* (Louise Bell), *குளோபல் கான்ஃபிலிக்ட் பிரிவென்சன் பூல், மோதல்களை குறைப்பதற்கான இங்கிலாந்தின் கூட்டு அணுகு முறை (லண்டன், எஃப்.சி.ஓ., ஆகஸ்ட் 2003), 29, இந்த இணைப்பில் காணக்கிடைக்கும்*

http://webarchive.nationalarchives.gov.uk/+/http:/www.dfid.gov.uk/pubs/files/global&conflict&prevention&pool.pdf

*பாதுகாப்பு மதிப்புரை தொடங்கிய தேதியை அறிய, பார்க்க எலியோனர் பாவே* (Eleanor Pavey) *மற்றும் கிறிஸ் ஸ்மித்* (Chris Smith), *இலங்கையில் போருக்குப் பிந்தைய மறுகட்டுமானமும், பாதுகாப்புத் துறை சீர்திருத்தங்களும், சவாலான சூழல்களில் பாதுகாப்புத்துறை சீர்தி ருத்தங்கள், பதிப்பாசிரியர்கள், எச்.பார்ன்* (H. Born) *மற்றும் ஏ.ஷ்னேபெல்* (A. Schnabel), *லிட்வெர்லாக்பதிப்பகம், முன்ஸ்டர், (ஜெர்மனி) 2009, பக்கங்கள் 189-210*

http://www.ssrnetwork.net/documentlibrary/detail/5608/post&conflict&reconstruction&and&security&sector&reform&in&sri&lanka *(அணுகிய நாள், ஜூன் 22, 2014)*

*4 எஃப்.சி.ஓ. ,குளோபல் கான்ஃபிலிக்ட் பிரிவென்சன் பூல்ஸ்,இலங்கை, ஆகஸ்ட் 2007*, http://collections.europarchive.org/tna/20080205132101/www.GL¨.].K..gov.uk/servlet/Front/TextOnly?pagename=OpenMarket/Xcelerate/ShowPagec=Pagecid=1062157895923to=true *(அணுகிய நாள், ஜூன் 22, 2014)*

*5 லிங்க்டுஇன்* LinkedIn, *கொலின் மார்ட்டின் ஓ.பி.ஈ*, http://www.linkedin.com/pub/colin&martin&obe&fcmi&chartered&mcipd/*17/ச்86/211 (அணுகிய நாள், ஜூன் 20, 2013)*

*6 ஸ்ரீலங்கா டெய்லி நியூஸ், டார்ட்மௌத்தில் (*Dartmouth) *இலங்கை கொடி உயர பறக்கிறது*, January 14, 2008, http://archives.dailynews.lk/2008/01/14/fea01.asp *(அணுகிய நாள்,ஜூன்22, 2014)*

*7 இலங்கையின் டெய்லி மிர்ரர், அச்சு பதிப்பு, மே 7, 2008, மற்றும் தமிழ்கார்டியன், பிரிட்டனின் இராணுவக்குழு இலங்கை இராணுவத்தை யாழ்ப்பாணத்தில் சந்தித்தது, ஏப்ரல் 30, 2008*, http://www.tamilguardian. com/article.asp?articleid=1707 *(அணுகிய நாள், ஜூன்22, 2014)*

*8 எஃப்.சி.ஓ.,குளோபல் கான்ஃபலிக்ட் பரிவென்சன் பூல்ஸ், இலங்கை, மார்ச் 2007*, http://web.archive.org/web/20070804013454/http://www.fco. gov.uk/servlet/Front?pagename=OpenMarket/Xcelerate/ShowPage&c=Page&cid=1062157895923 *(அணுகிய நாள், ஜூன்22, 2014)*

9 இங்கிலாந்து பாதுகாப்புப் புள்ளிவிபரங்கள் 2009, அத்தியாயம் 7 - நீடித்தவளர்ச்சி, சிவில் அதிகாரிகளுக்கான இராணுவ உதவி மற்றும் மோதல்தடுப்பு, அட்டவணை 7.8 இங்கிலாந்தின் மோதல் தடுப்பு முன்னெடுப்புகளுக்குப் பாதுகாப்பு அமைச்சகத்தின் ஆதரவு: உதாரண மாக (நேரடி நடவடிக்கைகள் நீங்கலாக) 2008/09-இல் மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைகள்

https://web.archive.org/web/20110610150040/

http://www.dasa.mod.uk/modintranet/UKDS/UKDS2009/c7/table708.html (அணுகிய நாள், ஜூன்22, 2014)

10 ஒரேபாய்ச்சல், பீட்டர்வில்சன் (Peter Wilson), https://platform.oneleap.com/peterwilson (அணுகிய நாள், ஜூன்22, 2014)

11 லிப்ரா ஆலோசனைகுழு, தெற்காசியாவில் லிப்ராவின் செயல்திட்டங்கள், http://web.archive.org/web/20110224084500/

http://www.libraadvisorygroup.com/projects/south&asia.html (அணுகிய நாள், ஜூன்22, 2014) லிப்ராவின் 2007 தொடங்கிய ஆரம்பகட்ட பணிகளுக்கும் பின்னாளில் 2009 -இல் வடக்கு அயர்லாந்தின் காவல்துறை இலங்கை வந்ததற்கும் என்ன தொடர்பு என்று கேட்பது முக்கியமாகும்.

12 படக்காட்சி (Slideshow), 'உளவுச் சீர்திருத்தங்களும் பாதுகாப்புத் துறையும், பீட்டர் வில்சன் (Peter Wilson), உளவு மற்றும் பாதுகாப்பு ஆலோசகர், பாதுகாப்புத்துறை மேம்பாட்டு ஆலோசனைக்குழு, ஜி.எஃப்.என்-எஸ்.எஸ்.டி.ஏ.டி பயிற்சியாளர்கள் படிப்பு, பிரிமிங்ஹாம், 12 மார்ச்2007' மற்றும் எஃப்.சி.ஓ-விற்கு தகவல்பெறும் உரிமை சட்டத்தில் நூலாசிரியர் பெற்ற தகவல்கள் குறிப்பு 0502-14. பீட்டர் வில்சனுடனான ஒரு தொலைபேசி உரையாடலில், இலங்கை காவல் துறையுடனும் உளவு அமைப்புகளுடனுமான தனது பணி குறித்து பேசமறுத்து விட்டார்.

13 பவர்பேஸ் (Powerbase), Bsi¸ ராத்மெல் (Andrew Rathmell), http://www.powerbase.info/index.php/AndrewRathmell இதோடு, உதாரணத்திற்கு பின்வருவற்றையும் பார்க்கவும், ஆன்டிரு ராத்மெல், கிளர்ச்சிகளுக்கு எதிரான பாதுகாப்புத்துறை சீர்திருத்தங்களை புதுப்பித்தல் - அரசியலை சரியாகப் புரிந்து கொள்தல், லிப்ரா ஆலோசனை குழு 2010,http://web.archive.org/web/20100828084736/http://www.libraadvisorygroup.com/assets/docs/ReframingSSRforCounterinsurgency.pdf (அணுகிய நாள், ஜூன்22,2014)

14 1041-ஆவது வில்டன் பூங்கா கருத்தரங்கு நிகழ்ச்சி, உள்நாட்டு மோதலை முடிவுக்குக் கொண்டுவரல்: ஸ்திரதன்மைக்கும் கிளர்ச்சி எதிர்ப்புகளுக்குமான மாறுபட்ட அணுகுமுறைகள், ஜூலை 2010 https://www.wiltonpark.org.uk/wp&content/uploads/wp1041&programme.pdf (அணுகிய நாள், ஜூன்22, 2014)

15 பிபிசி சிங்களமொழி சேவை, புலிகள் மீதான பயணத் தடைக்கு வரவேற்பு, அக்டோபர் 3, 2005,http://www.bbc.co.uk/sinhala/news/story/2005/10/051003childreneuban.shtml (அணுகிய நாள், ஜூன்22, 2014)

16 உல்ஃப் ஹென்ரிக்சன் (Ulf Henricsson), மேஜர் ஜெனரல் உல்ஃப் ஹென்ரிக்சன் பதில்கள், மார்ச் 2007, http://www.friedenfuersrilanka.de/index.php?option=comcontenttask=viewid=19Itemid=27 மற்றும் பன்னாட்டு மனித உரிமை கழகம், பிரேமன், இனப்படுகொலையை முடிவுக்கு கொண்டுவர அமைதி நடவடிக்கைகள் அழைப்பு, http://www.ptsrilanka.org /images/documents/peaceprocesshaltsgenocideen.pdf (அணுகிய நாள், ஜூன்22, 2014)

17 ஐ.நா.சபையின் மனித உரிமை தீர்மானத்தை ஆராய்வோமானால் பல குழறுபடிகள் தெரிய வரும். அது புலம்பெயர் தமிழர்களின் 'சுதந்திரமான போர்க்குற்ற விசாரணைக்கு' செவி சாய்த்துள்ளது. ஆனால் அவ்விசார ணையை ஒன்றுமில்லாததாக்கும் நிபந்தனைகளையும் கொண்டுள்ளது. இத்தீர்மானம் ஒன்றுபட்ட இலங்கையைப் புனிதமாகப் போற்றுவதோடு; இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டைப் பாதுகாப்பதாகவும் உள்ளது. மேலும் போரினால் பாதிக்கப்பட்டவர்களைத் தமிழர்கள் என்று வரையறுக்க மறுக்கிறது. போக்குற்றங்களின் அடிப்படையான இனஅழிப்புத் தன்மையை மறைத்து தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்ட விவகா ரத்தை வெறும் பயங்கரவாதத்திற்கு எதிரானதாகவும்; இரு தரப்பிலான அத்துமீறல்களின் விளைவாகவும் சுருக்குகிறது.

18 தயா காமகே (Daya Gamage), ஏசியான் டிரிபன் (Asian Tribune)&இல் February 28, 2009-இல் எழுதிய கட்டுரை தலைப்பு- ''விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கீழே போட வேண்டுமென்றும்; மக்களை இலங்கை அரசு வசம் விட்டுவிட வேண்டுமென்றும் ஐ.நா-வின் தூதர் கருத்து''. விபரங்களுக்கு http://www.asiantribune.com/node/15821 (அணுகிய நாள், ஜூன் 22, 2014

19 மேத்தீவ் ரஸ்ஸல்லீ (Matthew Russell Lee), பின்தொடர்தல்: இங்கிலாந்தின் சிறந்த உளவாளியாக சாயெர்ஸ் (Sawers) ஆனதை ஒட்டி இரகசியத் தன்மையில் புதுவெளிச்சம், இலங்கை மற்றும் சூடானுக்கான யுத்தி, இன்னர் சிட்டி பதிப்பகம், ஜூன் 17, 2009

http://www.innercitypress.com/unmi6sawers061709.html (அணுகிய நாள், ஜூன்22, 2014)

20 அட்ரியன் ருத்தர்ஃபோர்டு (Adrian Rutherford), இரத்தக்கரை படிந்த இலங்கை ஆட்சியர்க்கு, வடக்கு அயர்லாந்து காவல்துறையின் தலைமை ஆட்கள் ஆலோசனை வழங்கினர், பெல்ஃபாஸ்ட்டெலகிராஃப், 15 அக்தோபர், 2013,

http://www.belfasttelegraph.co.uk/news/local&national/northern&ireland/top&psni&menadvised&forces&of&bloody&sri&lankan&regime&29659207.html (அணுகிய நாள், ஜூன்22, 2014)

21 தகவல் ஆணையர் அலுவலகத்துடனான நூலாசிரியரின் கடித தொடர்புகள், மார்ச் 3, 2014, குறிப்பு எஃப்.எஸ் .50512890, மேலும் பார்க்க, ஃபில் மில்லர், காவல்துறையின் நண்பர்களாக மக்களை ஆக்குவதா அல்லது பயங்கரவாத எதிர்ப்பா: பிரிட்டன் இலங்கையில் என்ன செய்து கொண்டிருக்கிறது?, ஓப்பன் டெமாகிரசி, ஏப்ரல் 1, 2014 http://www.opendemocracy.net/opensecurity/phil&miller/community&policingor&counterterrorism&what&was&britain&doing&in&sri&lanka (அணுகிய நாள், ஜூன்22, 2014)

22 தொடர்புடைய பெல்ஃபாஸ்ட் காவல்துறை அதிகாரிகள்,டங்கன் மெக்கௌஸ்லாண்ட் (Duncan McCausland) மற்றும் கேரி ஒயிட் (Gary White), அதன் பிறகு பணி ஒய்வு பெற்றுவிட்டனர். இந்த இருவரும் பின்னர் இனிக் (Ineqe) என்ற பெல்ஃபாஸ்ட்டில் இயங்கும் பாதுகாப்பு நிறுவனத்தில் இயக்குனர்களாக நியமிக்கப்பட்டனர் என்பது கூர்ந்து நோக் கத்தக்கது. பெல்ஃபாஸ்டில் இருந்த ஆர்.யு.சி. சிறப்பு பிரிவின் முன்னாள் தலைவர் ஜிம் கேம்பிள்தான் இனிக் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி (சி.ஈ.ஓ).

# 5.இறுதியுரை: புவி - அரசியலின் பின்னணியில்

பிரிட்டன் ஏன் விடுதலைப்புலிகளை நசுக்குவதில் மிகவும் ஆர்வமாக இருந்தது? இலங்கையில் பிரிட்டனுக்கு அப்படி என்ன நலன்கள் இருக்கின்றன? அது மிகக் குறைவே என்கிறார் டாக்டர் கிறிஸ் ஸ்மித். பிரிட்டனின் வெளியுறவு கொள்கைகளை வடிவமைக்கும் முதன்மை சிந்தனைக்களமான சதம் ஹவுஸ் (Chatam House)-இன் துணை ஆராய்ச்சியாளராக இருப்பவர் டாக்டர் கிறிஸ் ஸ்மித். இலங்கை பெரிய அளவு பூகோள அரசியல் முக்கியத்துவம் இல்லாத நாடு. அதனால் இலங்கைக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை என்று இதற்கு பொருள் இல்லை. ஆனால் போரை யும் போரில் ஈடுபட்டுள்ள இரு தரப்பின் நடவடிக்கைகளையும் தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் வசதி பெரும்பாலும் வல்லரசுகளுக்குத்தான் வாய்க்கின்றன. ஆயுத விற்பனை தளவாடங்கள் அனுப்புவது போன்ற இராணுவத் தேவைகளை வழங்குகிற வணிகநலன் என்பதை விட வேறு முக்கியமான நோக்கங்கள் வல்லரசுகளுக்கு இருக்கின்றன. திருகோணமலை துறைமுகத்தையோ, வருங்கால எண்ணெய் வளங்களையோ கட்டுப் படுத்தவும் ஆதிக்கம் செலுத்தவும் வெளிநாட்டு அரசுகள் முயல்வதாக கிளம்பும் வதந்திகளை கொஞ்சம் சந்தேகத்தோடுத்தான் அணுக வேண்டும்[1].



*டாக்டர் கிறிஸ்*

(திருகோணமலை தமிழர்கள் பெரும்பான்மையாக உள்ள இலங்கையின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள தனித்துவம் வாய்ந்த ஆழ்கடல் துறைமுகமாகும். விடுதலைப்புலிகள் அதைத் தங்கள் தலைநகரமாக ஆக்க விரும்பியிருந்தனர்)

எனினும் பல செல்வாக்குள்ள பிரிட்டிஷ் அரசியல்வாதிகள், இலங்கை மீது பிரிட்டனுக்குள்ள முக்கியத்துவம் குறித்து மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களாக தெரிவிக்கின்றனர். பிரிட்டிஷ் கடற் படையின் நாயகன் அட்மிரல் ஹோராட்டியோ நெல்சன், திருகோண மலை துறைமுகத்தை உலகின் சிறந்த துறைமுகமாக விவரிக்கிறார். ஜூலை 2011-இல், பிரிட்டனின் அப்போதைய பாதுகாப்புச் செயலராக இருந்த லியம் ஃபாக்ஸ் கொழும்புவில் ஏறத்தாழ இதேபோன்ற ஒரு கருத்தைத் தெரிவித்தார். சோமாலிய கடற்கொள்ளையர்களால் சர்வதேசக் கப்பல் போக்குவரத்துக்கு ஏற்பட்டிருக்கும் அச்சுறுத்தல் பற்றி பேசும் போது, ஃபாக்ஸ் இவ்வாறு கூறினார்:

''இலங்கையை போலவே இங்கிலாந்தும் தீவு நாடாக இருப் பதால், கடல் பாதுகாப்பு என்பது அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருக்கிறது. வளைகுடாவிலும், ஆப்பிரிக்க முனையருகிலும், வேறு பரப்புகளிலும் ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் பன்னாட்டு படைகளின் நடவடிக்கைகளால் கடல் பாதுகாப்பிற்கான சர்வதேச நடவ டிக்கைகள் வேகம் பெற்றுள்ளன. கடற்கொள்ளை மற்றும் ஆயுதமுனையில் கொள்ளைக்கு இலக்காகும் ஆசியக் கப்பல்களை, அதிலிருந்து பாது காக்க பிராந்திய ஒத்துழைப்புக்கான ஒப்பந்தத்தில் சேர இங்கிலாந்தும் கூட விண்ணப்பித்துள்ளது. **இலங்கையானது இந்திய பெருங்கடலில் ஒரு முகாந்திரமான இடத்தில் அமைந்துள்ளது. தூர கிழக்கு நாடுகள் மற்றும் வளைகுடா இடையிலான பெரும் சர்வதேச கடல் வழித் தடங்கள், உங்கள் கடற்கரையிலிருந்து 25 மைல்களுக்கு உள்ளாக இருக்கிறது. கடற்கொள்ளைக்கு எதிரான போராட்டத்திற்கு தேவை யான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த**

**சொத்தாக திருகோணமலை இருக்கிறது. இலங்கைக்கு திருகோணமலையில் இன்னும் முழுமை யாக புரிந்து கொள்ளப்பட வேண்டிய நிறைய விஷயங்கள் இருக்கிறது.** எனவே, கடற்கொள்ளைகளுக்கு எதிரான பிரச்சனைகள் போன்றவற்றில் பெரிய அளவில் பங்காற்ற இலங்கைக்குக் குறிப்பிடத்தக்க ஆற்றல் உள்ளது[2]'' என்பது பாக்சின் கருத்து(அழுத்தம் சேர்க்கப்பட்டது)

நன்கு அறியப்பட்ட மற்றொரு அரசியல்வாதி வின்ஸ்டன் சர்ச்சில். சர்வதேச கடல் வழித்தடங்களை பிரிட்டன் கட்டுப்படுத்துவதில் இலங்கையின் கேந்திர முக்கியத்துவத்தையும் உணர்ந்தவராக அவர் இருந்தார்.



கொழும்புவில் பேசுவதற்காக வருகை தரும் லையம் ஃபாக்ஸ் (முன் இடது) தனது அதிகாரபூர்வமற்ற ஆலோசகர் ஆடம் வெரிட்டி-யுடன் (பின்னால் இருப்பவர்) தொடர்பில் இருந்ததுதான் அவரது பணிவிலகலுக்கு இட்டுச்சென்றதே தவிர இலங்கை அரசை ஆதரித்தமைக்காக அல்ல. (இங்கிலாந்து எஃப்.சி.ஓ. புகைப்படம்)

இலங்கைதீவு, இரண்டாம் உலகப்போரின்போது 1942-இல் ஜப்பானியப் படையெடுப்பு முயற்சியை முறியடிக்க கிழக்கிந்தியத் தளம் தான் ராயல் கடற்படைக்கு பயன்மிக்கதாக இருந்தது. அதன் மூலம் அச்சு நாடுகள் இந்தியா மீது படையெடுப்பதற்கான தளமாக இலங்கையை பயன்படுத்துவது தடுக்கப்பட்டது. இது குறித்து 1945-இல் வின்ஸ்டன் சர்ச்சில் இவ்வாறு கருத்து தெரிவித்தார்:

''ஜப்பானிய கடற்படை நம் பார்வைக்கு தென்பட்டதுதான் போர்க்காலத்தின் ஆபத்தையும், கவலையையும் தவிர்ப்பதற்கான வாய்ப்பை வழங்கியது. அவர்கள் இலங்கையை கைப்பற்றி, அதன் விளைவாக இந்திய பெருங்கடலின் மீதான கட்டுப்பாடு அவர்களுக்குக் கிடைத்திருந் தால்; எகிப்தின் மீது ஒரு ஜெர்மன் படையெடுப்பின் சாத்தியமும் நடந்திருந்தால் அனைத்தும் முடிந்து நமது எதிர்காலம் சூனியமாக போயிருந் திருக்கும்[3]'' என்கிற சர்ச்சிலின் கருத்து மிக முக்கியமானதாகும்.

இந்தியப் பெருங்கடலை கட்டுப்படுத்தும் ஒரு களமாக இலங்கையைப் பார்த்த சர்ச்சிலின் பார்வை முக்கியமானது. விடுதலைக் கான பேச்சுவார்த்தையின்போது இங்கிலாந்து இலங்கையோடு செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கு அமெரிக்கா கவலை தெரிவித்த தற்கும் கூட இங்கிலாந்து சர்ச்சிலின் பார்வையோடு இருந்ததுதான் காரணம். இலங்கையின் பூகோள முக்கியத்துவம்[4] கருதி, இராணுவ தளங்களில் சிலவற்றை பங்கிட்டுக்கொள்ளும் விருப்பத்தை அமெரிக்கா தெரிவித்திருந்தது. உதாரண மாக, 1949-இல் திரு கோணமலையில் இருந்த அரச கடற்படையின் எண்ணைக் கிடங்குகளில் அமெரிக்காவை இலங் கை அனுமதித்திருந்தது. இந்த காலத்தின் பிரிட்டிஷ் கடற்படை ஆவணங்களை நாம் ஆராயும் போது, ''கொழும்பில் இருந்து 10 மைல் வடக் கில், வெலிசறா என்ற இடத்தில் கடற்படை தொலைத் தொடர்பு நிலையம் ஒன்றை நிறுவி தனது ஊழியர்களை அமர்த்த அமெரிக்காவும் விரும்பியது'' வெளிப்படும். ஏனெனில், ''பாரசீக வளைகுடாவில் இருந்து பசிபிக் இடையே நடக்கும் கணிசமான அமெரிக்க (எண்ணெய்) டேங்கர் போக்குவரத் துக்கும், செங்கடலில் உள்ள ஆமாரா நிலையத்திற்கும் பசிபிக் பகுதிக்கும் இடையில் அமெரிக்க கடற்படைக்கு வயர்லெஸ் நிலையம் இல்லா ததால் இந்திய பெருங்கடல் பகுதியில் ஏற்பட்டிருக்கும் இடைவெளியை குறைப்பதற்கும் அமெரிக்காவிற்கு இவ்விடம் முதன்மை தேவையாக இருந்தது '' என்பதை பிட்டிஷ் ஆவணங்கள் தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள பிரிட்டன் விரும்பினாலும், இறுதியில் இலங்கை அதற்கு ஒப்புக்கொண்டதா என்பது பற்றி அந்த ஆவணங்களில் குறிப்பு இல்லை. எது

எப்படி இருந்த போதிலும், இந்தியப் பெருங்கடலில் இலங்கைக்கு இருந்த புவியியல் முக்கியத்துவம் குறித்த அமெரிக்காவின் மதிப்பீடு எப்படி முன்னாள் பிரிட்டிஷ் அரசின் மதிப்பீட்டை ஒத்திருந்தது என்பதை ஆவணம் தெளிவாக காட்டுகிறது.

மற்றுமொரு உதாரணத்தைச் சொல்லவேண்டுமென்றால், 1956 அக்டோபர் 29-ஆம் தேதி எகிப்தின் சூயஸ் கால்வாய் பகுதியின் மீதான பிரிட்டன் - பிரெஞ்சு - இஸ்ரேல் கூட்டுப் படையெடுப்பைச் சொல்லலாம். இலங்கையில் இருந்து ராயல் கடற்படைத் தளத்தை திரும்பப் பெறுவது குறித்து இறுக்கமான பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை இந்தப் படையெடுப்பு நிகழ்ந்தது. 1956 அக்டோபர் 10-ஆம் தேதி காமன்வெல்த் அலுவலகத்திற்கு[5] கடற்படைத் தலைவர் எழுதிய ஒரு உயர் இரகசிய கோப்பில்,

''சூயஸ் கால்வாய் மீது போர் நடைபெறும் பட்சத்தில் இலங்கையை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்றும், (எகிப்தின் மீது) போர் ஆரம்பமான பிறகு, எரிபொருள் நிரப்பவும், வெடிபொருட் களை ஏற்றவும் திருகோணமலையை பயன்படுத்துவது கடற்படையின் நோக்கில் எவ்வாறு தவிர்க்க இயலாதது என்பதையும்[6]'' வலியுறுத்தி அவர் எழுதியுள்ளார்.




1956 இல் சூயஸ் கால்வாய் சிக்கலின் போதைய அதியுயர் இரகசிய கோப்பின் அட்டை

தீவின் மீது இந்தியாவிற்கு இருந்த மிகையான செல்வாக்கை கண்டு பிரிட்டன் பெரிதும் அஞ்சியது. விசுவாசமான சிங்கள மக்களாலும், வங்காள விரிகுடாவில் தனது கடற்படை மேலாண்மையை உறுதி செய்யும் தனித்துவம் வாய்ந்த ஆழ்கடல் (திருகோணமலை) துறைமுகத் தாலும் இலங்கையை ஒரு கோட்டை காலனியாகவே பிரிட்டன் நிர்வ கித்து வந்தது. இந்தியாவில் அமைதிக்கு பங்கம் ஏற்படும் சூழலில்[7] இது அவர்களுக்கு உதவியாயிருக்கும். விடுதலைக்கான பேச்சுவார்த்தை களின்போது, விமானப்படை தளபதி, பொதுப் பணியாளர்களின் அரச தளபதி மற்றும் கடற்படை துணைத்தளபதியால் கூட்டாக வெளியிடப்பட்ட அறிக்கை இவ்வாறு எச்சரித்தது: ''இலங்கையின் உள்நாட்டு அரசியலில் இந்தியா (குறிப்பாக காங்கிரசு இந்தியா) தலையிட்டு, சக்தி வாய்ந்த இந்திய சிறுபான்மையினரிடையே (அதாவது, தமிழர்கள்) அதிருப்தியை வளர்க்கும் அபாயம் எப்போதும் உள்ளது. இந்த அபாயம் எந்த அளவிற்கு இருக்கும் என்பது, இந்தியாவில் எதிர்கால அரசியலமைப்பு எவ்வாறு ஏற்படப் போகிறது என்பதை பொருத்தது. தாமாகவே உள்நாட்டு சிக்கல்களை ஏற்படுத்தக்கூடிய சிக்கல்கலான இன வேறுபாடு கள், ஐரோப்பிய எதிர்ப்புணர்வு, கம்யூனிசம், தொழிலாளர் கிளர்ச்சிகள் போன்ற சிக்கல்களும் இந்த அபாயத்தில் அடங்கும்.

இலங்கையின் உள்நாட்டு பாதுகாப்பிற்கு இலங்கை அரசாங்கம் தான் பொறுப்பு என்றாலும், நிலைமை அதன் கட்டுப்பாட்டை மீறிப் போகும்போதும், நமது இராணுவ நலன்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாக் கப்படும் போதும், நமது நலன்களை பாதுகாத்துக்கொள்ள படைகளை அனுப்பவும், தேவையான நடவடிக்கைகள் எடுக்கவுமான உரிமை நமக்கு இருக்க வேண்டும்[8]'' என்கிறது அவ்வறிக்கை.

நாம் இதுவரை பார்த்ததிலும், பொதுவுடைமை இயக்கங்களோ, இந்திய சிறுபான்மை (அதாவது தமிழர்கள்) இயக்கங்களோ இலங்கை அரசாங்கத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியபோது பிரிட்டன் தனது படைகளை அனுப்பவும், தேவையான நடவடிக்கைகள் எடுக்கவுமான செயல்களில் இறங்கியது தெரிகிறதல்லவா. சிங்களப் பொதுவுடைமைக் கட்சியான ஜெ.வி.பி 1971-இல் ஒரு எழுச்சியை அரங்கேற்றியது. திருகோண மலை துறைமுகத்தின் மீதும் சர்வதேச கப்பல்

போக்குவரத்தின் மீதும், பிரிட்டனுக்கு இருந்த கவலைதான் மேற்கண்ட கிளர்ச்சியின்போது கிளர்ச்சியாளர்களைக் காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்க துணைப்போவதை நியாயப் படுத்த உதவியது[9] என்பதும் தெரிகிறது தானே.

சிறைபிடிக்கப்பட்ட ஜெ.வி.பி தலை வரான ரோஹன விஜயவீரா மீது இங்கிலாந்து மகாராணிக்கு எதிராக போர்தொடுத்ததாக குற்றம் சாட்டப்பது. ரோஹன விஜயவீரா தனது நீதிமன்ற உரையில் இதைக் குறிப்பிட்டு காட்டினார்.

''எங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் கொடுமையானவை தண்டனைச் சட்டத்தின் 114 மற்றும் 115 பிரிவுகளின் கீழ் நாங்கள் குற்றம் சாட்டப்பட்டுள்ளோம். அப்போதைய கவர்னர் ஜெனரல் உங்களுக்கு கொடுத்த ரிட் மனுவின்படியும், எங்கள் மேல் சுமத்தப்பட்ட குற்றப்பத்தி ரத்தின்படியும் பிரச்சினைக்குரிய காலமானது, 1968-இன் தொடக்கத் துக்கும் 1971-இன் முடிவிற்கும் இடைப்பட்ட காலமாகும். இந்த கால கட்டத்தில்தான் நாங்கள் 'மகாராணியின் பேரரசிற்கு எதிராக சதி செய்ததாக' சொல்லப்படுகிறது. இந்தக் காலகட்டத்தில் நாங்கள் இலங்கை அரசாங்கத்தைத் தூக்கியெறிய சதி குற்றம் செய்ததாகவும் சொல்லப் படுகிறது. 'மகாராணிக்கு எதிராகப் போர் தொடுத்ததாக' அல்லது அதற்கு உடந்தையாக இருந்ததாகவும் சொல்லப்படுகிறது[10].''



அலெக் டக்ளஸ் ஹோம்

ரோஹன விஜயவீரா தனது நாடான இலங்கை இன்னமும் பிரிட்டன் காலனியாகவா உள்ளது? என்ற கேள்வியைத்தான் இப்படி கேட்டுள்ளார்.

1971 ஏப்ரலில், இலங்கைக்கு ஆயுதங்களை விற்பது சரியா என்பது குறித்து விவாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் எழுந்தது. அப்போது வெளியுறவு செயலரான அலெக் டக்ளஸ் ஹோம் (Alec Douglas - Home), ''தங்கள் நாட்டின் இந்த தீவிர கிளர்ச்சிகளை ஒழித்துக்கட்ட அவர்களால் முடியும் என்றால் அனைத்தையும் செய்ய தீர்மானமாய் இருக்கும் இலங்கை அரசுக்கு, 'மத்தியஸ்தம் தேவை இல்லை[11]'' என்று வலியுறுத்தினார். பாராளுமன்ற உறுப்பின ரான டாம் தேல்யெல் (Tam Dalyell, MP) வெளியுறவு செயலருக்கு ஏப்ரல் 27-ஆம் தேதி எழுதிய கடிதத்தில், ''மத்தியஸ்தம் தேவை இல்லை என்ற நிலைப் பாடு எடுப்பது இலங்கை அரசாங்கத் திற்கு அவ்வளவு நல்லதல்ல. பயன்பாட்டில் இருக்கும் உலங்கு வானூர்திகளை உற்பத்தி செய்பவர்கள் நாம் எனும்போது, நம்மை அவர்கள் புறக்கணிப்பதை ஏன் ஏற்க வேண்டும்? மேலும் 'ஒழித்துக் கட்டுவது' என்ற வார்த்தையை எந்த பொருளில் பயன்படுத்துகிறீர்கள்? பிரிட்டிஷ் ஆயுதங்களை பயன்படுத்தி எவரையாவது 'ஒழித்து கட்டுவதற்கும்', அவர்கள் 'தீவிர கிளர்ச்சியாளர்களாய்' இருந்தாலும் கூட அப்படி ஒரு முடிவை ஆதரிப்பதற்கும் முன்னால் நமக்கு உண்மையில் இந்தச் சிக்கல் குறித்து இன்னும் அதிகமாகத் தெரிந்திருக்க வேண்டும்'' என்று வாதிட்டார்.

எஃப்.சி.ஒ-வின் தெற்காசியத்துறைத் தலைமையிலிருந்து மூத்த அரசு ஊழியர்களுக்கு அதே நாளில் அனுப்பிய ஒரு குறிப்பாணையில், மிதமான போக்கு தேவையற்றது என்பதைத் தெளிவுபடுத்தியிருந்தது. ''இலங்கையில் பிரிட்டனின் வணிக நலன்களின் அடிப்படையிலும் சரி,

நமது பொதுவான அரசியல்- கேந்திரிய நலன்களின் அடிப்படையிலும் சரி, பொதுவான உதவி செய்வதாகவும், அனுதாபம் காட்டுவதாகவும் தோற்றத்தை காட்டிக்கொண்டே நமது ஆதிக்கத்தைப் பாதுகாப்பதுதான் சரியான முடிவாக இருக்கும். கொழும்புவில் உள்ள பிரிட்டிஷ் தூதர் திரு.மெக்கிண்டோஸ் (Mackintosh) அறிவுறுத்துவதைப்போல, ஆயுதங்க ளையும் தளவாடங்களையும் நம்மால் இயன்றவரையும், இலங்கைக்கு உண்மையாக தேவையான அளவிற்கும் வழங்குவதைத் தொடர வேண்டும்[12]'' என்கிறது அக்குறிப்பானை.

இது கிளர்ச்சி எதிர்ப்புக் கோட்பாட்டிற்கும் இங்கிலாந்து அரசின் கேந்திரிய - புவியியல் நலன்களுக்கும் இடையே உள்ள உறவை உறுதி செய்யும் முக்கியப் புள்ளியாக இருக்கிறது. கிளர்ச்சி தொடங்கி ஒரு மாதம் கழித்து, இங்கிலாந்து அரச திட்டமிடுபவர்கள் (Whitehall Planners) ஒரு எளிய கணக்கை போட்டிருந்ததாக தெரிகிறது. கிளர்ச்சி யாளர்களான ஜெ.வி.பி-யினர் திருமதி பண்டாரநாயகா அரசின் தீவிர இடதுசாரிகளாக (more to the left of) இருப்பதால், பிரிட்டிஷ் கட்டுப் பாட்டிற்கு அடங்குவதென்பது அவ்வளவாய் சாத்தியமில்லை. இந்திய பெருங்கடலின் கப்பல் வழித்தடத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்துள்ள இலங்கை எதிரிகளுக்கு ஒரு அடித்தளமாய் அமைவதை அனுமதிக்க முடியாது என்பதே பிரிட்டனின் கணக்காக இருந்திருக்கிறது.

தமிழ்ப் பத்திரிக்கையாளரும் இராணுவ ஆய்வாளருமான தர்ம ரத்னம் சிவராம் பின்னாளில் இவற்றைக் கணக்கில் கொண்டே தனது வாதங்களை முன்வைத்தார். அதாவது ''இலங்கை தொடர்பான இங்கி லாந்து மற்றும் அமெரிக்காவின் கொள்கைகள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்துள்ள தீவின் தன்மையினால் ஆதிக்கம் செலுத்தப்பட்டதாகவே உள்ளது என்பதையும்; மேற்கத்திய நலன்களை பராமரிக்க வேண்டி கொடுமையான கிளர்ச்சி எதிர்ப்பு




*இந்தியப்பெருங்கடலின் மையப்பகுதியில் அமைந்துள்ள இலங்கையைக் குறிக்கும் வரைபடம். தகவல் தொடர்பு கடல்வழித் தடங்கள் , குறுகலான கடல்வழிப் பாதைகள் மற்றும் அமெரிக்க கடற்படை தளமான டியாகோ கார்சியாவும் காட்டப்பட்டுள்ளன.*

நடவடிக்கைகள கட்டவிழ்ப்பதுவரை அது நீளுகிறது என்பதையும் அடிப்படையாக் கொண்டு அவர் வாதிட்டார்''.

மிக மூத்த பிரிட்டிஷ் பாதுகாப்பு தலைவர்கள் மற்றும் ஒருங்கிணைந்த புலனாய்வு குழுவினரால் (JIC - Joint Intelligence Committee) 1971 மே 6 -ஆம் தேதியில் இலங்கையில் நிலவும் சூழல் குறித்து விவாதிக்கப்பட்டது. புலனாய்வுக்குழு அமைச்சரவையில் உள்ள மதிப்பீட்டு அதிகாரியும் பாதுகாப்பு அமைச்சகம் தலைமை அமைச் சருமான எட்வர்ட் ஹீத் (Edward Heath) - க்கு அனுப்ப ஒரு ரகசிய குறிப்பா ணையை தயார் செய்தது. அதில் பிரிட்டிஷ் நலன்களின்மேல் இந்த எழுச்சி ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் பற்றி சொல்லப்பட்டிருந்தது. பின்னிணைப்பு-2. அதில், இங்கிலாந்து மற்றும் மேற்கு ஐரோப்பாவின் முக்கியமான கடல்வழி வணிக பாதைகள் இருக்கும் இந்திய பெருங் கடலில் ஒரு மையப் பகுதியில் இலங்கை அமைந்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டிருந்தது. எழுச்சி தொடங்கி ஒரு மாதம் கழித்து, தலைமை அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த ஆணை தயாரிக்கப்பட்டது. தடையில்லா வர்த்தகத்திற்கும், கப்பல் வழித் தடங்களின் பாதுகாப்பிற்கும் அவசியமிக்க இந்திய பெருங்கடல் மற்றும் திரு கோணமலையின் கேந்திர முக்கியத்துவத்தை குறித்து அக்குறிப் பாணையில் பிரிட்டிஷ் அரசிற்காக திட்டமிடுபவர்கள் சிறப்பித்துச் சொல்லியிருந்தார்கள். குறிப்பாணையில் இருந்தவற்றை முழுமையான பொருளில் புரிந்து கொள்ளாமல் பிரிட்டிஷ் உளவு அமைப்பை (எம்.ஐ.5) இலங்கைக்கு கிளர்ச்சி எதிர்ப்பு ஆலோசகர்களாக ஹீத் அனுப்பியிருக்க முடியாது.

இலங்கையில் பிரிட்டனுக்கு உள்ள புவியியல் - கேந்திர நலன்களை பற்றிய இங்கிலாந்து அரசின் பார்வை, 1971-ஆம் ஆண்டின் அவர்களது கோப்புகள் முழுக்கவும் தொடர்ச்சியாக இழையோடுகிறது. உதாரணத்திற்கு, 'இலங்கையின் வருங்காலம்' என்ற தலைப்பில், 1971 ஜூலை 8-ஆம் நாள் கொழும்பில் உள்ள பிரிட்டிஷ் தூதரால் வெளியிடப்பட்ட அரச அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது:

''நமது சொந்த நாட்டு நலன்களை பாதுகாப்பது மட்டும் அல்ல நமது கவலை. இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத் தன்மையில் நமக்கு பரந்த அக்கறை உள்ளதோடு, நமது கொள்கைகள் இலங்கையில் உள்ள கேந்திர முக்கியத்துவத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டதாக இருக்க வேண்டும்.

(....)

நமது சொந்த நாட்டு நலன்களைப் பாதுகாப்பது மட்டும் நமது கவலையில்லை என்பதை நான் உணர்கிறேன். இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையிலும், அதோடு நல்லுறவைப் பேணுவதிலும் நமக்கு விரிந்த அக்கறை உண்டு. இந்தியப் பெருங்கடலில் இலங்கைக்கு உள்ள கேந்திர முக்கியத்துவத்தைப் பற்றிய நமது பார்வையும், சீனா அல்லது ரஷ்யாவின் ஆதிக்கம் விரிவடைவதால் நமக்கு ஏற்படும் தாக்கத்தைப் பற்றிய நமது கணிப்பும் நம் கொள்கை களை தீர்மானிப்பதில் பெரிய பங்காற்ற வேண்டும்[13]'' என்று அவ்வறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

அமைச்சரவைக்கும், வெளிநாட்டு பாதுகாப்பு கொள்கைக் குழுவிற்கும் 1971 - அக்டோபர் 5 ஆம் தேதியில் வெளியுறவுச்செயலர் தயாரித்த வரைவுக்குறிப்பாணை இந்தக் கூற்றை இன்னும் கச்சிதமாக வெளிப்படுத்தியது.

'' இதுவரை இந்தியப் பெருங்கடலில் கப்பல் வழித்தடங்களின் பாதுகாப்பை பொறுத்தவரை நமது அக்கறையெல்லாம் நமது எதிரி நாடுகள் இலங்கையின் தளங்களைப் பயன்படுத்துவதை நாம் தொடர்ந்து நிராகரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதாகவே இருந்தது.

இலங்கை குறித்த நமது வருங்காலக் கொள்கைகளை நாம் உருவாக்கும்போது, தீவிரமானப் பகை நாடாக இலங்கை மாறிவிட்டால் நாம் அதற்கு கொடுக்கவேண்டிய விலை என்னவாக இருக்கும் என்பதை எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்திய துணைக்கண்டத் தின் ஸ்திரத்தன்மை மற்றும் இந்தியப்பெருங்கடலின் கடல்வழித் தடங்கள் மீதும் அது ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் என்பது பிரிட்டனின் நலன்களுக்கு ஊறுவிளைவிப்பதாகவே அமையும். எனவே, இலங்கை அரசாங்கத்தோடு நிறைவான இருதரப்பு உறவுகளை பேணுவதில் நம்மா லான அனைத்தையும் தொடர்ந்து செய்யவேண்டும் என்பதே எனது முடிவாகும். இலங்கை பொருளாதாரத்திற்கு ஆதரவாக

பிரிட்டிஷ் முதலீடுகள் குறித்த அரசின் கொள்கைகள் அனுமதிக்கும் எல்லை வரை செல்லவும், இப்போது நாம் வழங்கிக் கொண்டிருக்கும் உதவிகளை தொடர்ந்து செய்யவும் வேண்டும் என்கிற நமது விருப்பம் தவிர்க்க முடியாததாகும்[14]'' என்கிறது அவ்வரைவு அறிக்கை.

'இலங்கையில் பிரிட்டனின் வணிகநலன்கள்' என்ற தலைப் பிட்ட எஃப்.சி.ஓ - வின் 1977 சனவரி கோப்பிலும் இலங்கை மீதான பிரிட்டனின் புவியியல் - கேந்திர நலன்கள் மீண்டும் தலைகாட்டின. தேசியமயமாக்கல் குறித்தும், இலங்கை அரசாங்கம் சிறப்பான தளங்களைத் தங்கள் கட்டுபாட்டிற்குள் எடுத்துக்கொள்வது குறித்தும் மேற் கொள்ளப்பட்ட இலங்கையின் தொடர்ச்சியான முடிவுகள் நமது வணிக ஆதாயங்களை பெரிதும் குறைத்துள்ளது என்று கொழும்பில் இருந்த பிரிட்டிஷ் தூதரகம் புலம்பியது. இருந்தாலும் அந்த ஆவணம் இவ்வாறு எச்சரித்தது:

''இலங்கையில் பிரிட்டனின் நலன்களானது வணிக மற்றும் பொருளாதார உறவுகளை தாண்டி பரந்து விரிந்தது. நமது முக்கியமான வணிகம் நடைபெறும் ஒரு பெருங்கடலின் நடுவில் இந்த நாட்டின் புவியியல் அமைவு இருக்கிறது. இதில் நாம் அலட்சியம் செய்ய முடியாதபடி கேந்திர முக்கியத்துவம் உள்ளது.[15]''

1970-களில், ஷெல் மற்றும் லீலேண்ட் போன்ற நிறுவனங்கள் தேசியமயமாக்கலை ஒட்டி, இழப்பீட்டிற்கான பேச்சுவார்த்தை நடத்தி வெளியேறிய பிறகு இலங்கையில் பிரிட்டனின் வணிக நலன்கள் குறைந்தன. ஆனால் ஆயுதம் தாங்கிய தமிழர் போராட்டம் தொடக்க நிலையில் இருந்த காலத்தில், புவியியல் - கேந்திர நலன்கள் உச்சத்தில் இருந்த தாகவே இந்த கோப்பு கூறுகிறது. இதற்கு மேல் பிரிட்டிஷ் அரச ஆவணங்களை அணுக முடியாமல், அரச ஆவணங்கள் சட்டம் தடை செய்துள்ளது. இந்த சட்டம்தான் இங்கிலாந்து அரச ஆவணங்களை 30 ஆண்டுகளாக இரகசியமானதாக வைத்துள்ளது. இருந்தாலும், லயம் ஃபாக்ஸ் (Liam Fox) 2011-இல் கருத்து தெரிவித்ததைப்போல இலங்கையின் புவியியல் - கேந்திர முக்கியத்துவம் பற்றிய பிரிட்டனின் மதிப்பீடு மாறிவிட்டதாய் நம்புவதற்கு ஒரு காரணமும் இல்லை.

**குறிப்புகள்:**

1 டாக்டர் கிறிஸ்ஸ்மித் (Chris Smith), இலங்கையில் உள்நாட்டுப்போரும், இலங்கைப் போரின் சர்வதேசப் பரிமாணங்களில் இங்கிலாந்தின் பங்கும் செல்வாக்கும், 2008, பக்கம் 99

2 லக்ஷ்மன் கதிர்காமர் (Lakshman Kadirgamar) நினைவேந்தல் கூட்டத்தில் July 9, 2011 அன்று லயம்ஃபாக்ஸ் (Liam Fox) -இன் சொற்பொழிவு, இந்த இணைப்பில் காணக்கிடைக்கும்

http://dailymirror.lk/top&story/12346&looking&forward&to&llrc&report&fox.html (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

3 மார்க் மாண்ட்கோமரி (Marc Montgomery), 'இலங்கையையும், ஓரளவிற்கு அதன் போரையும் காத்த கனடியர்', ரேடியொ கனடா இண்டர்நேசனல், ஏப்ரல் 4, 2014,http://www.rcinet.ca/en/2014/04/04/the&canadian&who&saved&ceylon&and&tosome&extent&the&war/ (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

4 இங்கிலாந்து தேசிய ஆய்வகக் காப்பகம், டி.ஓ 35/2408 தலைப்பு '1948/49 இலங்கை: ஒரு கடற்படைத் தகவல்தொடர்பு பிரிவுகளுக்கான வசதிகளை இலங்கையில் நிர்மாணிக்கவும், ஒரு அமெரிக்க்க கப்பல்படை அதிகாரியைப் பணியமர்த்தவுமான அமெரிக்காவின் வேண்டுகோள்.

5 இந்த சமயத்தில், காமன்வெல்த் உறவுகளுக்கான அலுவலகம்தான் இலங்கையுடனான வெளியுறவுக் கொள்கைகளைக் கையாண்ட பிரிட் டனின் அரசுத்துறையாகும்.

6 டி.ஓ 35/6571

7 காலனிய காலகட்டம் குறித்த விவரமான கட்டுரையை ஜூலை15, 2014 முதல் இந்த இணையதள முகவரியில் காணக்கிடைக்கும் www.ptsrilanka.org.

8 'இலங்கைக்கானப் பாதுகாப்புத் தேவைகள்', ஜூன் 9, 1947 அன்று அமைச்சரவைக்காகத் தயாரிக்கப்பட்ட ஆவணம், 'உயர்மட்ட இரக சியம்' என்று குறிக்கப்பட்டிருந்தது, சான்று சி.பி. (47)179. இந்த இணைப்பில் காணக்கிடைக்கும் http://www.tamilnet.com/img/publish/2013/12/19470609&CAB:129:19.pdf (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

9 இந்த அடக்குமுறையை பிரிட்டன் ஆதரித்தது குறித்த தகவல்களுக்கு, பார்க்க, ஃபில் மில்லர், இலங்கையில் எம்.ஐ.5 - சொல்லப்படாத கதை, நவம்பர் 5, 2013, www.opendemocracy.net/opensecurity/phil&miller/mi5&in&ceylon&untold&story (அணுகிய நாள், ஜூன் 22, 2014)

10 ரோகன் விஜயவீரா (Rohan Wijeweera), குற்றவியல் நீதிகமிசன் முன்பாக இறுதி சமர்பிப்பு,நவம்பர் 2, 1973

11 ஹன்சார்டு, பாராளுமன்ற விவாதம், ஏப்ரல்26, 1971 தொகுதி 816 சி.சி. 33-4, http://hansard.millbanksystems.com/commons/1971/apr/26/ceylon

12 இங்கிலாந்து தேசிய ஆய்வகக் காப்பகம், எஃப்.சி.ஓ.,எஃப்.சி.ஓ. 37/787

13 இங்கிலாந்து தேசிய ஆய்வகக் காப்பகம், எஃப்.சி.ஓ.,எஃப்.சி.ஓ. 37/789

14 இங்கிலாந்து தேசிய ஆய்வகக் காப்பகம், எஃப்.சி.ஓ.,எஃப்.சி.ஓ. 37/790

15 இங்கிலாந்து தேசிய ஆய்வகக் காப்பகம், எஃப்.சி.ஓ.,எஃப்.சி.ஓ. 37/1898

## 6.முடிவுரை

மேலே காட்டப்பட்ட அனைத்து ஆதாரங்களின் அடிப் படையில், எந்தக் கட்டத்தில் பிரிட்டன் இலங்கையின் உள்நாட்டுப் போரில் தீவிரமாக பங்கு பெற்றது? என்ற கேள்வியை எழுப்புவது முக்கியமானதாகும். தனக்கு தொடர்பே இல்லாத, உலகின் வேறொரு பகுதியில் நடைபெற்ற ஒரு போரில் பிரிட்டன் ஏன் சண்டையிட்டது? என்பது இன்னும் முக்கியமான கேள்வியாகும்.

1948-இல் இலங்கைக்கு சுதந்திரம் தினத்தன்று பாதுகாப்பு பணியாளர்களின் தலைமை தயாரித்த உயர்மட்ட இரகசிய ஆவணத்தை நாம் இப்போது பார்ப்போம்: ''இலங்கை அரசு உள்நாட்டு பாதுகாப்புக்கு பொறுப்பு ஏற்க வேண்டும் என்றாலும், நிலைமை அதன் கட்டுப்பாட்டை மீறினாலோ, நமது பாதுகாப்பு நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டாலோ, நமது நலன்களைப் பாதுகாக்க படைகளைப் பயன் படுத்தவும், தேவையான நடவடிக்கைகள் எடுக்கவுமான உரிமை நம்மிடம் இருக்க வேண்டும்'' என்பது நம்மை உண்மைக்கு அருகில் அழைத்து செல்கிறது.

இந்த உண்மையோடு இப்போதைய இங்கிலாந்தின் நடவடிக்கைகளைப் பொருத்திப் பார்க்க முடியும். நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் செல்வதாகத் தெரியும்போது, ''தமிழ் இனச்சிக்கலை எதிர் கொள்வதில் இலங்கைப் பாதுகாப்புப்படைகளின் மனநிலையும் அமைப்பு வடிவமும் விரக்தியூட்டுவதாக உள்ளதாக'' பிரிட்டிஷ் பாது காப்பு நிபுணர்கள் புலம்பினார்கள் என்பதும் இப்போது நமக்கு தெரியும். உடனே உளவுத்துறையின் மொத்த மறுசீரமைப்பு பற்றி ஆலோசனை வழங்க முன்னாள் எம்.ஐ-5-இன் இயக்குனர் இலங்கைக்கு அனுப்பப் பட்டார். முள்ளிவாய்க்கால் முடிவின் போது எஃப்.சி.ஓ-வின் தலைவராக வரவிருந்த பீட்டர் ரிக்கெட்ஸ் (Peter Ricketts), கருப்பு ஜூலைக்கு சற்று பின்னர் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கு ஒரு செய்தியை சொன்னார். அதில், இலங்கை பாதுகாப்புபடையினர் தமிழ்ப் பயங்கரவாத நடவடிக்கைகளை கையாள்வதில் தேர்ச்சி பெற்றவர்களாக இல்லை என்பதை நிரூபித் துள்ளனர் என்று சொன்னார். பிரிட்டிஷ் கூலிப்படையினர் இலங்கையில் பணியாற்றுவதற்கான கள்ள ஒப்புதலை அவரது கடிதம் தந்தது.

1980-களில் பிரிட்டிஷின் இரகசிய இராணுவத் தலையீடுகளுக்கும், 1990-களில் மேலும் கூடுதலான முன்னெடுப்புகளுக்கு மத்தியிலும் கூட விடுதலைப்புலிகள் இலங்கை அரசை எதிர்த்து நின்றனர். அது 2001-இல் இலங்கை அரசு ஸ்தம்பிக்கும் அளவுக்கு போராட முடிந்திருந்தது.

தீவில் ஒரு சமநிலை நிறுவப்பட்டு, சர்வதேச ஆதரவுடன் சிங்களம் மற்றும் தமிழ் மக்களுக்கு இறையாண்மையுள்ள ஒரு தீர்வு கிட்ட வாய்ப்புகள் இருந்த வேளையில், பிரிட்டன் (தனது நண்பனான அமெரிக்காவுடன் சேர்ந்து) சர்வதேச அளவில் சரிசம நிலையை குலைக்கும் வண்ணம் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட தொடர் நடவடிக்கைகளில் இறங்கியது. பேச்சுவார்த்தைகள் தொடங்கிய ஆரம்ப கட்டத்திலேயே, பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்த ஒரு தரப்பை இங்கிலாந்து, சட்டத்தின் மூலம் 2001-இல் தடை செய்ததில் தொடங்கி, அதன் பிறகு 2005 -2006-இல் ஐரோப்பிய ஒன்றிய மட்டத்திலும் தடை செய்து, இறுதியாக கொடூரங்கள் எந்த அளவில் நடந்தேறின என்று தெளிவாக தெரிந்த பின்னரும் 2009-இல் ஐ.நா பாதுகாப்புசபையில் இந்த நிலை எடுத்தது வரை தொடர்ந்தது.

கேள்வி இதுதான். ஒரு சூழ்ச்சிகள் நிறைந்த, இழிவான தந்திரங்களோடு இன அழிப்புப் போரை நடத்தி விட்டு பிரிட்டன் தன்னை கறை படியாத நாடாக காட்டிக்கொள்ள முடியுமா?

# பின்னிணைப்பு – I

இங்கிலாந்து அரசின் பாதுகாப்பு அமைச்சகம் இலங்கை இராணுவத்திற்கு 2007-இல் வழங்கிய பயிற்சிகள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த தகவல்களை வேண்டி தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் நூலாசிரியர் விண்ணப்பித்திருந்தார். அதையொட்டி அவருக்கு கிடைத்த தகவல்கள் முழுமையாக இங்கே இணைக்கப் பட்டுள்ளது.

## UK military courses for Sri Lanka in 2007

Ministry of Defence

Ministry of Defence
Main Building (04/B/41)
Whitehall
London SW1A 2HB
United Kingdom

+44 (0)20 7218 9000

IPP-Sec@mod.uk

Our Ref: 06-06-2013-094628-008

12 Aug 2013

Dear

Thank you for your email of 11 July 2013 where you requested information as follows:

"I request an overview of what training and development programmes for the Sri Lankan Armed Forces that the UK MOD facilitated their participated in during 2007. I expect that an overview would include the aims, objectives and desired outcomes of the training and development programme provided, as well as their date, course title/reference number and location."

I am treating your correspondence as a request for information under the Freedom of Information Act 2000. A search for the information has now been completed within the Ministry of Defence and I can confirm that information in scope of your request is held. The information you requested is enclosed in tables 1 and 2.

It is a matter of UK government policy to offer training to our allies and other countries which share our goal of securing a more peaceful world. In most cases international personnel will have the opportunity to train alongside British service personnel and civilians. Further information on International defence training can be found at https://www.gov.uk/international-defence-training-idt. Our training establishments run many hundreds of courses and by clicking on the links on that page you will be able to access online course details for all three services.

Enclosure:

1. Number of Sri Lankan students trained in the UK by year.
2. Overview of training and development programmes.

1

| Year | Organisation | Number of Students |
|---|---|---|
| 2006/07 | Army | 4 |
| | Land Warfare Centre | 2 |
| | Royal Navy | 4 |
| | Royal Air Force | 1 |
| 2007/08 | Army | 4 |
| | Land Warfare Centre | 2 |
| | Royal College of Defence Studies | 1 |
| | Royal Navy | 1 |
| | Royal Air Force | 1 |

Table 1. Number of Sri Lankan students trained in the UK by year.

| Ref Number | Course Title | Course Provider or Location | Overview of Aims and Objectives |
|---|---|---|---|
| SRL6004 | Army Commissioning Course at Royal Military Academy Sandhurst for 1 student from 10 Sep 06 – 17 Feb 07. | Royal Military Academy (Sandhurst) | Aims and objectives and further information can be found at http://www.army.mod.uk/training_education/24475.aspx |
| SRL6005 | RN Young Officers' Course at BRNC Dartmouth for 1 student 12 Jun 06 to 8 Jun 07.<br>RN Young Officers' Course at Britannia Royal Naval College Dartmouth for 1 student 03/01/07 to 07/12/07. | Britannia Royal Naval College (Dartmouth) | Aims and objectives and further information can be found at http://www.royalnavy.mod.uk/Careers/How-to-Join/Royal-Navy-Officer-training |
| SRL6006 | Initial Officer Training at Royal Air Force College Cranwell for 1 cadet from 9 Oct 06 – 1 Jun 07. | Royal Air Force College (Cranwell) | Aims and objectives and further information can be found at http://www.royalnavy.mod.uk/Careers/How-to-Join/Royal-Navy-Officer-training |
| SRL7001 | Support to Sri Lanka Defence Review. New impetus to the Review in 06 when Sri Lanka asked UK to assist. This serial provides for continuation work in 07/08. | N/A | |
| SRL7002 | High-Level Political-Military Visits both from, and to, the UK - to be detailed when known | N/A | Aspiration for New Sri Lanka CDS/Defence Secretary to visit UK. |
| SRL7004 | Initial Officer Training at RAFC Cranwell from 19 Nov 07 – 12 Jul 08. | Royal Air Force College (Cranwell) | See above.<br>Place and funding confirmed on 3 Sep 07 |
| SRL7005 | Army Commissioning Course at RMA Sandhurst for 1 student. | Royal Military Academy (Sandhurst) | See above |
| SRL7008 | Defence Diplomacy Scholarship Scheme: Managing Defence in the Wider Security Context, in the UK from 10 Mar – 25 Apr 07. | Joint Services Command & Staff College (JSCSC) in Shrivenham | The 7 week UK residential Managing Defence in the Wider Security Context course introduces international students to the principles and practices underpinning good governance, leadership and management of the defence and security sectors. The course is held annually. A one or two week Export variant can be delivered and is conducted on either a national or regional basis. |

| | | | |
|---|---|---|---|
| SRL7009 | A short term training team[1] of Central Flying School instructors to carry out instrument assessment ratings. | Sri Lanka | The Central Flying School will assess student pilots and aircrew. A report would be produced which grades the crews on parameters such as flight safety, airmanship, rules of the air and radio procedure. |
| SRL7010 | Marker for Ground Defence Training for Security of Colombo International Airport. Dependent on progress in 06/07. | Sri Lanka | The Sri Lankan armed forces require a STTT to deliver airfield defence following a previous attack on the international airport. Running this course will help the UK to maintain & strengthen our relationship with Sri Lanka in order to satisfy our overall objectives. |
| SRL7012 | International Intelligence Directors' Course for 1 officer for two weeks from 2 – 13 Jul 07. | Defence College of Intelligence | Seen as a key requirement in an effort to modernise Sri Lanka's capabilities and an opportunity to engage with senior Sri Lanka military. |
| SRL7013 | On an opportunity basis to provide an attachment of Sea Riders with Royal Navy ships. | Sri Lanka | Blue water experience for young Sri Lanka Navy Officers. The Royal Navy will also gain experience of operations within this part of the world. |
| SRL7014 | International Peace Support Briefing Programme in UK for 2 students for 2 weeks 22 Oct 07 – 31 Oct 07. | UK | Sri Lanka will become a major UN PSO contributor. The UK needs to be involved in shaping and training their capability. An important course to shape Sri Lankan thinking and improving international recognition. |
| SRL7015 | Short term training team to deliver Formation and Unit preparation training for UN/PSO deployments. Phase 4 of PLAN. | Sri Lanka | During this course the training for UN Peace Support Operations. Individual and collective training, including public info and Rules of Engagement. In addition Sri Lanka PSO instructors need opportunity to visit OPTAG during unit collective training periods. |
| SRL7016 | Short term training team to provide International Humanitarian Law / Law of Armed Conflict Course | Sri Lanka | To cover obligations of International Law. |
| SRL7017 | International Sub Lieutenant (Executive) Course for 1 officer for 18 weeks. | UK | Essential career development module. To train junior officers in the duties and responsibilities of an Officer of the Watch and to provide a basis for further warfare training. |
| SRL7018 | Royal College of Defence Studies and associated English Language Training if required to for academic year 2007/8. | Royal College of Defence Studies (Seaford House) | The RCDS Course is an annual course for Officers of OF5 (Colonel and equivalent) rank and above. Language training begins in July and the main course runs from September to July of the following year. There are up to 55 places available for International students. |

[1] The delivery of International Defence Training to support Military Tasks may require an integrated training solution. Non-operational Short-Term Training Teams (STTT) is options for the delivery of in country training. A typical training solution to meet the stated requirement is likely to be preceded by a Training Needs Analysis (TNA) and scoping visit. Where deployment of a STTT is appropriate, the training must be integrated with any training provided by an overseas-based British training team or UK based course.

| | | | |
|---|---|---|---|
| SRL7019 | Advanced Command and Staff Course (ACSC) at the Joint Services Command and Staff College (JSCSC) to run from 6 Aug 07 – 17 Jul 08. | Joint Services Command & Staff College (JSCSC) in Shrivenham | Selected officers at OF3/4 level (Major and Lieutenant Colonel, or equivalents) attend the Advanced Command and Staff Course (ACSC). The pre-course begins in August and the main course finishes in July of the following year with two weeks leave at Christmas and Easter. For those officers who so choose and have the necessary ability, successful completion of the ACSC, together with a small amount of additional work and an examination, gains accreditation for a Masters Degree in Defence Studies from King's College London. |
| SRL7020 | Advanced Command and Staff Course Overseas DS Course to run from 29 Oct – 9 Nov. | Sri Lanka | This is an export version of the course described at SRL7019. |

Table 2. Overview of training and development programmes.

# பின்னிணைப்பு -2

***திருகோணமலை துறைமுகத்தில் பிரிட்டனின் நலன்கள், 1971***

***மே 1971-இல் தலைமை அமைச்சர் எட்வர்ட் ஹீத்-க்கு பாதுகாப்பு அமைச்சகம் தயாரித்த இரகசிய கடிதம்.***

இலங்கைக்கு சோவியத்தின் இராணுவ உதவிகள்: திருகோண மலை கடற்படைத்தளங்களை சோவியத் ஒன்றியத்திற்கு அனுமதிப்பதன் விளைவுகள்

கிளர்ச்சியைக் கையாள்வதற்கு இலங்கை அரசாங்கம் சோவியத் இராணுவ உதவிகளைக் கோருமாறு ஒரு சூழல் உருவாகியுள்ளது. இலங்கையில் தற்போது நிலவும் இந்த சூழலுக்கு இணையாக வேறு ஒரு சூழல் இதுவரை உருவாகியதில்லை. நைஜீரியா உள்நாட்டு போர்ச் சூழலை ஓரளவு இதோடு ஒப்பிடலாம். ஆனால் இதில் சோவியத் அதிகாரிகளின் தீவிர பங்களிப்பு இல்லை. அதுவுமல்லாமல், சோவி யத்தின் இராணுவ உதவிகள் அதன் இராணுவ இருப்பிற்கு வழி வகுக்க வில்லை. மத்திய கிழக்கு நாடுகளில், சிரியா, ஈராக் மற்றும் அல்ஜீரி யாவில், ஐக்கிய அரபு குடியரசிலும் கூட இரசியர்களின் இராணுவ இருப்பு மாறுபட்ட அளவில் இருக்கிறது. அவர்கள் ஒரு இடத்தில் கால்பதித்துவிட்டால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு சுரண்டுவார்கள் என்பதோடு, அதன் பிறகு அவர்களை விரட்டுவதும் ஒப்பீட்டளவில் கடினமாகிவிடும் என்பதை அவர்களது நடவடிக்கைகள் நமக்கு உணர்த்தியிருக்கின்றன. இலங்கையை பொருத்தவரை இரசியர்கள் தங்களது இராணுவ இருப்பை வைத்துக்கொள்ள ஆர்வம் காட்டுவார்கள் என்றோ, இலங்கை அரசாங்கம் அதை அனுமதிக்கும் என்றோ நாம் இப்போது ஒரு முடிவுக்கு வர முடியாது.

2. பிரிட்டனின் இராணுவம் திருகோணமலையை இதற்கு மேல் பயன்படுத்தப் போவதில்லை. பயன்படுத்துவதற்கான திட்டமும் இல்லை. இந்தியப் பெருங்கடலிலோ - அல்லது வேறு எங்கு வேண்டு மானாலும் - கடற்கரையில் தங்களுக்கு அடித்தளம் இல்லாத சூழலிலும் அதிக காலத்திற்கு இயங்க முடியும் என்பதை சோவியத் கடற்படை ஏற்க னவே நிரூபித்துள்ளது. இருந்தபோதிலும், திருகோணமலையின் கப்பல் தளங்களை பயன்படுத்துவது இரசியர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவு சாதகமாகவே இருக்கும். அதன் மூலம், இந்திய பெருங்கடலில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தமது கப்பல் தளங்களை இன்னும் சிறப்பாக பயன் படுத்த முடியும். தொலைதூர சோவியத் துறைமுகங்களைச் சார்ந்தி ருக்கிற சிரமம் குறைவதோடு, குறிப்பிட்ட நிலையத்தில் தங்களது நேரத் தை அதிகமாக்கலாம். (விளாடிவொஸ்டாக் துறைமுகம் இலங்கையிலிருந்து 15 நாட் -மணிக்கு 17 மைல்வேகத்தில் சென்றால்- ஏறத்தாழ 13 நாள் பயணமாகும்). பிரமாண்டமான உள்கட்டமைப்புடன் இருக்கும் சோவியத் கடற்படைக்கு குறைந்த பட்சம் - எடுத்த எடுப்பிலேயாவது - அப்படியொரு கடற்படை தளத்தின் தேவை இருக்காது. ஆனால் கப்பல்களை பாதுகாப்பாக நங்கூரமிடும் இடத்தை பயன்படுத்துவது என்பது சரக்குகள் ஏற்றுவதற்கும், எரிபொருள் நிரப்பு வதற்கும் மற்றும் சிறு அளவிலான பழுதுகளை சரி செய்யவுமான பணிகளுக்கு உதவக்கூடும். அதுபோக அடிப்படையான கடற்கரை வசதிகளும், தங்கும் வசதிகளும் மட்டுமே தேவைப்படலாம். கரையில் குறைந்தபட்ச சோவியத் இருப்பை வைத்துக்கொண்டே திருகோணமலையில் இது போன்ற வசதிகளை செயலாக்கலாம்.

3. எகிப்து துறைமுகங்களை பயன்படுத்தியதன் மூலம், மத்திய தரைக்கடல் பகுதியில் தமது நடவடிக்கைகளை சோவியத் கடற்படை எப்படி எளிதாக்கியதோ, அதேபோல திருகோணமலையை பயன் படுத்தினால் இந்திய பெருங்கடலில் தமது தளங்களை நிர்மாணிக்கும் ஆற்றல்களை சோவியத் கடற்படை எளிதாக்கி மேம்படுத்திக்கொள்ளும். மேலும், **இங்கிலாந்து மற்றும் மேற்கு ஐரோப்பாவின் முக்கியமான வணிகப் பாதைகள் செல்லும் இந்திய பெருங்கடல் பகுதியில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை பெறுவதை இரசியர்களுக்கு அது எளிதாக்கிவிடும். சிங்கப்பூரிலும், மொரிஷியசிலும் தாங்கள் எதிர்பார்க்கும் வசதிகள் கிடைக்காத பட்சத்தில், திருகோணமலை அவர்களுக்குக் குறிப்பிடத்தக்க வாய்ப்பாகயிருக்கும்** (அழுத்தம் சேர்க்கப்பட்டது.)

ஆதாரம்: தேசிய ஆய்வகக் காப்பகம், எஃப்.சி.ஓ 37/810

'''நமது அவல நிலையை இந்த முழு உலகமும் கண்டுகொள் ளாமல் இருப்பது ஏன்?' என்ற கேள்வி சில தசாப்தங்களாகவே ஈழத் தமிழர்களை தாங்க முடியாதத் துயரத்திற்கு ஆட்படுத்தியுள்ளது. காலனிய காலத்திற்கு பின்னால் இங்கிலாந்து என்ன செய்கிறது என கவனம் செலுத்திய ஃபில்-லின் கடும் உழைப்பால் விளைந்த இந்த நூல் அந்த கேள்விக்கான பதிலை வெளிக்கொண்டுவருகிறது. ஈழத்தமிழர்கள் ஒவ்வொருவரும் அவசியம் படிக்க வேண்டிய நூல்'' - டாக்டர். ந.மாலதி, 'எனது நாட்டில் ஒரு துளி நேரம்' நூலின் ஆசிரியர்.

''கவர்ந்திழுக்கிற, உண்மை தகவல்களைக் கொண்ட, மிகவும் நன்கு ஆய்வுசெய்யப்பட்ட நூல் இது. ஈழ விடுதலைப் போர் குறித்து பிரிட்டனின் இழிவான எதிர் பரப்புரையின் இருண்ட வரலாற்றில், வரவேற்கத்தக்க வெளிச்சக் கீற்றாக இது ஒளிறும்'' - பால் ஓ'கொனர், பேட் ஃபினுக்கேன் நடுவம் (ஐயர்லாந்து மனித உரிமை அமைப்பு)

''தமிழர்களுக்கு எதிரான இலங்கை அரசின் அரச பயங்கர வாதத்திலும், வன்முறையிலும் 30 ஆண்டுகளுக்கு மேலாக பிரிட்டன் உடந்தையாயிருந்ததைப் பற்றிய இந்த புலனாய்வு அவசியம் படிக்க வேண்டிய நூலாகும்.
இலங்கையின் கொடூரமான உள்நாட்டுப் போரின் இறுதி காலத்தில், மனித இனத்திற்கு எதிரான குற்றங்கள் செய்ததாக யார் மீது குற்றம் சாட்டப்பட்டதோ, அந்த கொலைகார குண்டர்களுக்கு பயிற்சி யும் ஆயுதமும் கொடுப்பதில் லண்டனின் பேரார்வத்தை விவரிக்கும் பல பல ஆவனங்களை ஃபில் மில்லர் வெளிக் கொண்டுவந்துள்ளார்.
இந்த நூலானது பரவலாக அனைவராலும் படிக்கப்பட தகுதி வாய்ந்த ஒன்றாகும்'' - அந்தோனி லோவென்ஸ்டீன், சுதந்திர பத்திரிக்கையாளர், கார்ட்டியன் கட்டுரையாளர், 'எனது இஸ்ரேல் கேள்வி', 'வலைப்பதிவு புரட்சி', 'அழிவிலிருந்து லாபம்' ஆகிய விற்பனையில் சாதனை படைத்த நூல்களின் ஆசிரியர்.

''ஈழ இன அழிப்பில் பிரிட்டன்'' என்ற ஃபில் மில்லரின் இந்த நூல், இலங்கையில் காலனிய காலத்திற்குப் பிந்தைய காலத்தின் மோதல்கள் குறித்த சுருக்கமான, துல்லியமான, வரலாற்றுப் பதிவாகும். அனுராதபுரத்திற்கு வடக்கே உள்ள அனைத்து ஊடகங்களையும் தங்கள் கட்டுக்குள் வைத்திருந்த சிங்கள ஆட்சிக்கு ஆதரவாகவே பிரிட்டன் இருந்தது. 1986-இல் கே.எம்.எஸ் நிறுவனத்தில் பயிற்சி அதிகாரியாக கொஞ்சகாலம் பணியாற்றிய எனது சொந்த அனுபவம் இதை வெளிப் படுத்தியது. அப்போது நம்பிக்கையோடு பயிற்றுவிப்பதில் ஈடுபட்டி ருந்தபோதிலும், பிரிட்டிஷ் ஆலோசகர்களுக்கு இராணுவ கொள்கையை உருவாக்குவதிலோ, களத்தில் இருக்கும் தளபதிகளை வழிநடத்து வதிலோ எந்த அதிகாரமும் இருக்கவில்லை. சிங்கள அரசின் இன அழிப் புக் கொள்கையை விரைவில் புரிந்துகொண்டு பணியிலிருந்து விலகினேன். 1986-இல், நான் இங்கிலாந்து திரும்பிய பிறகு, வெளியுறவு அலுவலகத்தின் ஆளாக தன்னைக் கூறிக்கொண்ட ஒருவர் என்னைத் தொடர்பு கொண்டு தமிழ் புலிகளுக்கு பயிற்சிகள் அளிக்க வேண்டாமென்று மிரட்டினார். ஒரு காலத்தில் துடிப்பாக இருந்த இந்த நாட்டைப் பற்றிய உண்மைகளை வெளிக்கொண்டுவர இப்போதும்கூட பத்திரிக்கையாளர்கள் போராட வேண்டிய சூழலில் இருப்பது வருத்தம ளிக்கிறது. 1982-இல் இருந்து இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கை களை ஒரு பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்று போராடும் எல்லோருக்கும் ஃபில் லின் இந்த நூல் ஒரு வினையூக்கியாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.'' - ராபின் ஹார்ஸ்ஃபால், முன்னாள் எஸ்.ஏ.எஸ். வீரர், 'அச்சமூட்டும் சண்டை' நூலின் ஆசிரியர்

Peoples' Tribunal on Sri Lanka - www.ptsrilanka.org

International Human Rights Association Bremen